Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஒக். 13-19, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 481



## மேல் கொத்மலைத் திட்டம்!


மலையகத் தமிழரின் கதை என்ன?



சிநேகாவின் காதல் ♥

## 19 ஆவது திருத்தம் தீர்ப்பு என்ன?

# ஆன்மீகம்



## கவலை இல்லாத மனிதன் யார்..?

நள்ளிரவு திடீரென்று வானத்திலிருந்து கடவுளின் குரல் கேட்டது. "ஓ..மக்களே! உங்களில் கொஞ்சம் கூடக் கவலையே இல்லாத ஆள் யாரென்று எனக்குத் தெரிய வேண்டும். அதனால் இந்த நாட்டிலுள்ள யாவரும் அவரவர் கவலைகளை ஒரு பையிலே போட்டு எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வாருங்கள்" என்று பணித்தார் கடவுள். கோவிலுக்கு முன்னால் எல்லோரும் கூடினார்கள். எல்லோரது கைகளிலும் சிறியதும், பெரியதுமான பைகள் இருந்தன. கவலையே இல்லாதவர் யார்? என்று தேடினார் கடவுள். ஒரே ஒருவன் மட் டும் கையில் பை இல்லாமல் வெறுங்கையை வீசிக்கொண்டு வந்தான். கடவுள் அவனிடம் "என்னப்பா! உனக்குக் கவலையே இல்லையா?" என்று கேட்டார்."ஏன் இல்லாமல்?" என்றான் அவன். "எங்கே அவையெல்லாம்?" என்றார் கடவுள். "பின்னால் லொறியில் வந்து கொண்டிருக்கின்றன" என்றான் அவன்.

தி.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்

நாம் பிற மனிதரை நம்பிச் சில காரியங்களில் ஏமாந்திருப்போம். அல்லது நாம் யாரையும் ஏமாற்றியிருப்போம். பிறரை ஏமாற்றும் போது சந்தோஷப்படுகின்றோம். நம்மை யாரும் ஏமாற்றினால் வேதனைப்படுகின்றோம். உண்மையாக யாரை நம்புவது: ஏங்கு உண்மையுள்ளது என்று ஏங்குகின்றோம். தேவனிடத்தில் உண்மையுள்ளதை அறியாமல் இருக்கிறோம். அறிந்தும் நம்பாமல் இருக்கிறோம். நம்புவோம் அவரையும் அவர் வார்த்தையையும்.

நான் உன்னை விட்டு விலகுவது இல்லை. உன்னைக் கை விடுவதுமில்லை.

யேசுவா.1.5

என்னிடத்தில் வருகிறவனை நான்
புறம் தள்ளுவதில்லை -யோவன். 6.37
நீ! பயப்படாதே! நான் உன்னுடன்
இருக்கிறேன். திகையாதே! நான் உன் தேவன்
நம்புவோம் தேவனை: கடைப்பிடிப்போம்
அவர் வார்த்தையை.

(ஏசாயா.41.110

பி.விக்ரர் தற்குரஸ்-கீளியன் குடியிருப்பு.

## பிராணிகள் சபிக்கின்றன!

பாவங்களின் காரணமாக மனிதன்- எப்படிப் பீடை பிடித்தவனாகி அவதியுறுகிறானோ, அது போலவே அந்தப் பீடையினால் மற்ற படைப்புகளும் தாக்கப்படுகின்றன. அதனால் அவை, அவன் மீது சாபமிடுகின்றன. பாவத்துக்குரிய தண்டனை கிடைக்கின்றதென்றாலும், இந்தச் சாபம் அந்தப் பாவங்களுக்குக் கிரீடம் வைத்த மாதிரி அமைந்து விடுகிறது.

ஹஜ்ரத் முஜாஹித் (ரலி) கூறுகிறார்கள்:-

"பிராணிகள் பாவியின் மேல் சாபமிடுகின்றன. ஏனெனில், அவனது பாவத்தின் காரணமாக, மழை பெய்வதில்லை: பஞ்சம் தலைவிரித்தாடும், புல், பூண்டுகள் கரித்துப் போய்விடுகின்றன. "ஆதமுடைய மக்கள் செய்த பாவத்தின் காரணமே இந்த நிலை"

என்று சபிக்கின்றன அந்தப் பிராணிகள்.

முஹம்மது ஹஸனி- கல்முனை-07.

# கவிதைப் போட்டி இல.478

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

பரிசுக்குரிய கவிதை

### ஓ மனிதனே

இன்பமாகத் திரியும்
இந்தச் சர்ப்பத்தை
ஏனடா சஞ்சலப்படுத்துகிறாய்
மனிதனை விழுங்கும் இந்த
மலைப்பாம்புகளை விட
மனிதத்தை விழுங்கும்
விஷப் பாம்புகளை
ஆட்டடா உன்
மகுடியால் ஊதி.

அ.ஞானப்பிரகாசம்,
192/4 லோவர் வீதி, உவர்மலை.

### ஆட்டுவித்தல்!

இப்போது...
'மகுடி'-
என் கையில்...!
'நான்'-
ஊதும் போதெல்லாம்???
'சர்ப்பம்' நீ....
நர்த்தனமாட;
வேண்டும்!!!
என் கட்டளை
மட்டுமல்ல இது...;
'காலங்களி'ன்
கட்டளையும் கூட!
அதுவேதான்...

தாராபுரம் நிலாம், கரம்பை.



### நன்மைக்காய் ஆடு பாம்பே.

சமாதானம் வருமென்று ஆடு பாம்பே!
சர்வதேசச் சல்லி வருமென்று ஆடு பாம்பே!
விபத்துக்கள் குறையுமென்று ஆடு பாம்பே!
வீண் கொலைகள் மறையுமென்று ஆடு பாம்பே!
லஞ்சங்கள் ஒழியுமென ஆடு பாம்பே!- இன
வஞ்சனைகள் தீருமென ஆடு பாம்பே!

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### ம(த)ந்திரம்

இங்கே மந்திரத்தால் மயக்குகின்றாள்
எப்படிப்பட்ட மனிதனையும்- இந்தப் பாம்பை
கொண்டு- அங்கே தந்திரத்தால்
பறிக்கின்றாள் தமிழனின் தனி உரிமைகளை....
தன்னகத்தே அடக்கிக் கொண்டு.

இராமச்சந்திரன் தவேந்திரன், ஹாலி-எல.

### மகு(டி)டம்

உன் வயிற்று பிழைப்பிற்கு!
என்னையும் மயங்க வைத்து!
பார்ப்போரையும் வியக்க வைக்கும், சக்தி படைத்த!
உன் மகுடி உன் மகுடம்தான்!

வை.நவமலர், பொகவந்தலாவ.

### மேலானவன்

என் மகுடிக்கு மயங்கும்
பாம்பே...
பகிடிக்கும் என்னை தீண்டி விடாதே.
நடிக்கும் நண்பனை விட
அடிக்கும் பகைவன் மேலானவன்.

ரி.ரமீஸ் ஸராவுடீன், மட்டுநகர்.

### படம் எடுக்க

படையே நடுங்கிடும் -பாம்போடு
உறவாகும் மனிதா!
பேதங்களால் பிளவுபட்ட -இப்
பாரினை படம் எடுக்க சொல்
அந்த பாம்பிடம்- உனது
பிணிகள் யாவும் தீர்ந்திடவே- அதனை
'பிரிண்ட்' போட்டு விற்றுவிடு.

வீ.எஸ். பாலாச்சந்திரன், புத்தளம்.

# கவிதைப் போட்டி இல.481



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.10.2002

**கவிதைப் போட்டி இல.481**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.**

### காலத்தின் கோலம்

மகுடியின் வழிகாட்டலுக்கு
சர்ப்பம் தலைசாய்த்த காலம் போய்
சர்ப்பத்தின் ஆணைக்கு
மகுடி தலைவணங்கும் காலம் இது.

க.கமால்தீன், ஏறாவூர்-3.

### மகுடி

ஊதுவது என்னவென்று
தெரியாமல் ஊதுகிறாயா
நீ ஊதுவது மகுடிதானென்று
உணர்த்த வந்து விட்டது
ஓர் இராட்சதன்.

நல்லான் யோகேஸ்வரி, அட்டன்.

### இணைந்து முன்னேற

ஊதுங்கள் குழலை
ஊர் எங்கும் கேட்க
வாழ்வெல்லாம் பட்ட துயர்
வீழ்ந்து நாம் உயர்ந்து
சமாதானச்சுடர் பலிதமாகி
சாந்தியுடன் சமூகங்கள்
இணைந்து முன்னேற.

ஏ.ஆர்.ஒரிஷா, பாண்டிருப்பு.

### அர்த்தமுள்ள படம்!

"நாகமா...?
நாகத்தில் மோகமா...?
வேகமா...?
விரல்களின் வினோதமா...?
பாவமா...? பவ்வியமா...?
பார்வையில் அர்த்தங்கள்
பல உள்ள படமிது!

நா. ஜெயபாலன், பிபிலை.

# உங்கள் பக்கம்

## பொதுச் சேவையும் பொருளாதாரமும்

பொதுச் சேவையின் குறிக்கோள் அபிவிருத்தியை உண்டு பண்ணுதலாகும். பொருளாதார வளர்ச்சி, வறுமை அகற்றல், சுற்றாடல் பாதுகாப்பு, இருபாலாருக்கும் சம வாய்ப்பினை வழங்குதல், கல்வி மேம்பாடு, சுகாதார வசதி, குடியியல் அரசியல் உரிமைகளைப் பேணுதல் ஆகியன அபிவிருத்தியின் பாற்பட்ட அம்சங்களாகும். இந்த அம்சங்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்பது பொருளாதார வளர்ச்சியாகும்.

இன்று பொருளாதார வளர்ச்சியில் உலக நாடுகள் அனைத்தும் பிரதேச தடைகளை உடைத்து உலகமய முதலாளித்துவ சந்தையில் இணைந்துள்ளன. பொதுச் சேவையானது பொருளாதாரத் துறையில் தனது திறமையை உறுதிப்படுத்துவதுடன் தனியார் துறைகளதும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களினதும் ஆற்றலை மேம்படுத்த உதவ வேண்டும். திட்டங்களை அமுல்படுத்தல், சட்டம், சமவாய்ப்பு, 'பாகுபாடு மற்றும் சுயநலம்' ஆகியவற்றைத் தவிர்த்தல், சமூக ஐக்கியத்தைத் தூண்டுதல் ஆகியவை பொதுச் சேவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளாகும்.

புதிய அபிவிருத்தியடைந்த சிந்தனை மாற்றத்தில் பொதுச்சேவையானது வெளிநாட்டு மற்றும் தனியார் முதலீடுகளையே ஊக்குவித்தல் வேண்டும். வளர்ச்சியின் இயந்திரமாகத் தனியார் துறை செயற்படுவதற்குப் பொதுச் சேவையானது சரியான கொள்கைக் கட்டமைப்பு, சட்டம், ஒழுங்குமுறை ஆகியவற்றை அவற்றிற்கு வழங்குதல் வேண்டும்.

எமது நாடு, கடந்த இரு தசாப்தங்களாக யுத்தத்துக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இதனால் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. நாட்டில் பொருளாதார வளர்ச்சியை எவ்வகையிலும் திட்டமிட்டு அமைப்பதற்கு வாய்ப்பு எதுவுமே இருக்கவில்லை.

ஆனால் இந்த இடைவெளியில் ஏனைய நாடுகள் தமது பொருளாதாரத் திட்டங்களை உலகமய முதலாளித்துவ சந்தையுடன் ஒன்றிணைத்துப் போட்டிச் சந்தையில் முன்னுக்கு வந்து விட்டன.

எந்த ஒரு பொறுப்பினை எடுத்தாலும் அதனை அரசாங்கமே நிறைவேற்ற வேண்டும் என்று நம்பிக்கொண்டிருப்பதானது பழைய தலைமுறைச் சிந்தனையாகும்.

இதில் மாற்றத்தை உண்டு பண்ணி, பொதுச் சேவையின் ஒத்துழைப்புடன் தனியார் துறை மூலமாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் வாயிலாகவும் பொருளாதாரத்தைத் துரித கதியில் கட்டி எழுப்பும் புதிய சிந்தனைகளைச் செயற்படுத்துவதன் மூலமே எமது நாட்டை அபிவிருத்திப் பாதைக்குத் திசை திருப்ப முடியும்.

திருமலை வீ.என்.சந்திரகாந்தி. 572/ஏ. ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


# வாசக[ர்] சாலை

என் அபிமான முரசிற்கு,

காலமாற்றங்களுடன் இசைவாகச் செல்வதுதான் முன்னேற்றமடைவதன் முக்கிய சூட்சுமம் என்பதைப் புரிந்து கொண்டு, இன்றைய நவீன உலகின் முக்கிய பேசு பொருளாகிய இணையத்தையும் உன் பக்கங்களில் இணைத்திருப்பது வரவேற்கத் தக்கது.


கணனி வசதியற்ற எம் போன்ற எத் தனையோ வாசகர்களும், உலக நடப் பில் இன்றைய விந்தைகளை உடனுக் குடன் அறிந்து கொள்ள வசதியாக "நெட்டிலிருந்து" பகுதியில் வரும் தக வல்கள் படு சூப்பர். நொய்ந்து போன உள்ளங்களுக்குப் புதுவாழ்வுக்கு வழிகாட்டும் அனுபவத்தொடரான "ஆறுமனமே ஆறு" முரசிற்குக் கிடைத்த புதியதோர வைரம். இன்னும் ஜொலிக்கும் வைரங்கள் நிறையவே உண்டு.

தர்சினி, மட்டுநகர்.

பிழைக்கத் தெரிந்த முரசே,

எந்தெந்த சீஸனில் எந்தெந்தப் படங்களை அட்டையில் போட்டால் விற்பனை கூடும் என உட்கணக்குப் போட்டு 479 வது இதழிலே நீண்ட நாட்களின் பின் சச்சினின் படத்தைப் பிரசுரித்த நீ பிழைக்கத் தெரிந்தவனடா. ஐ.சி.சி. கப் நாடு முழுவதும் கிரிக்கெட் காய்ச்சலைப் பரவ விட்டுள்ள சூழ்நிலையில் பெரும்பாலான இரசிகர்களின் இதயம் கவர்ந்த சச்சினின் படத்தைப் போட்டுத் தூள் கிளப்பி விட்டாய். அட்டைப்படமே அட்டகாசம் என எண்ணிக் கொண்டு உள் நுழைந்தால் வெளிவராத பல உட் சங்கதிகள் அம்பலத்தில் ஆடி நின்றன. இந்தப் பெரிய மனிதர்களின் திருகுதாளங்களை உன் போன்றவர்களும் அம்பலப்படுத்தவில்லையென்றால் நமது கதி அதோ கதிதான். தொடர்க உன் பணி!

கலைச்செல்வன், மஸ்கெலியா.



முரசே, நெடு நாட்களாகவே உன்னிடம் சரண் புகுந்து போனவர்களில் நானும் ஒருத்தி. கடந்த இதழில் ஆறுமனமே ஆறு தொடரில் கமலா என்ற பெண்ணின் துயர்மிகு கதையினை வாசித்து பெண் என்ற ரீதியில் மிகவும் வேதனைப்பட்டுப் போனேன். சூதும் வஞ்சகமும் நிறைந்த இவ்வுலகில் இப்படி வஞ்சிக்கப்படும் கமலாக்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் மன்றாடுவதைத் தவிர வேறு எதுவும் என்னால் செய்ய முடியவில்லை. ஏனென்றால் நானும் ஒரு பெண் தானே?

குமாரி, புத்தளம்.

மதிப்பிற்குரிய தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரத்தை எடுத்து நோக்கும்போது வடக்கு, கிழக்கில் இடம்பெறும் தன்னிச்சையான மனித உரிமை மீறல்கள், போராட்டம் என்ற பெயரில் நடத்தப்படும் மக்கள் விரோத செயற்பாடுகள் போன்றவற்றை உங்கள் பத்திரிகையைத் தவிர வேறு எதிலும் காண முடிவதில்லை. நாம் வெளிநாட்டில் இருந்த போது எமக்குக் காண்பிக்கப்பட்ட தாய் மண்ணின் தோற்றம் எத்தனை போலியானது என்பதை இலங்கை வந்து நமது சொந்த இடங்களுக்குச் சென்று பார்த்த போதுதான் புரிந்தது. எத்தனை வகையான வரிகள்.

ஆர். ரமேஷ், லண்டன்.

முத்தான முரசே, நீ ஒவ்வொரு வாரமும் உன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் விதம் அற்புதமானது. வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சனைகளை மாத்திரமே முரசு முன்னிலைப்படுத்துகிறது என்ற மலையக மக்களின் ஆதங்கத்தைப் போக்கும் விதத்தில் மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாக நீ வழங்கி வரும் ஆதரவு பாராட்டுக்குரியது. மலையகத் தலைவர்களின் குறைநிறைகளையும் சுட்டிக்காட்டி மலையகத்திலும் முரசு வலுவாகக் கால் பதிக்க வேண்டும்.

பா. சுதாகரன், டிக்கோயா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# தனியார் மயமாக்கலை எதிர்த்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டம்!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் தனியார் மய கொள்கைகளை எதிர்த்து பாரியளவிலான ஆர்ப்பாட்டங்களையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள் தயாராகி வருவதுடன் ஏற்கனவே அவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் சில தலைநகரில் நடந்து முடிந்துள்ளன.

செவ்வாயன்று 50க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தலைநகரில் தனியார் மயமாக்கலையும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் கண்டித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருந்தொகையானோரை உறுப்பினர்களாகக் கொண்ட தொழிற்சங் கங்களை வைத்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளும் சிறிய இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் அதிதீவிர வலதுசாரி பொருளாதாரக் கொள்கையை எதிர்க்கத் தயாராகி வருகின்றன.

வங்கித் துறையில் தனியார் மயமாக்கலுக்கு எதிரான ஆரம்பகட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் துவங்கியிருக்கும் அதேவேளை நாட்டின் மிக முக்கிய அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான மின்சார உற்பத்தி தொழில்சார் ஊழியர்களும் சுகயீனப் போராட்டத்தின் மூலம் தனி யார் மயமாக்கலுக்கு எதிரான தமது எதிர்ப்பை வெளிக் காட்டப்போவதாக அறிவித்துள்ளனர்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிடமிருந்து பாரியளவிலான பொருளாதார உதவிகளைப் பெறுவதற்கான முன் நிபந்தனைகளுள் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவது முக்கியமான அம்சம்.

இப்போது எஞ்சியிருக்கும் ஒரு சில அரச நிறுவனங்களையும் தனியாருக்கு விற்க அரசாங்கம் தயாராகி வருகிறது.

இவற்றுள் போக்குவரத்து, வங்கி, மின்சாரம், காப்புறுதி என்பன முக்கியமானவை.

இலங்கையின் பாராளுமன்றத்தைத் தவிர மற்றனைத்தையும் தனியாருக்கு விற்கப்போவதாக முதலீட்டுச் சபையின் தலைவர் வாஷிங்டனில் நடைபெற்ற கூட்ட மொன்றில் தெரிவித்தார் என சிங்களப் பத்திரிகை ஒன்று கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ■

## இரண்டாவது சுற்றுப் பேச்சில் புலிகளின் சார்பில் தமிழ்ச்செல்வன், தமிழேந்தி?

இம் மாதம் 31 ஆம் திகதி தாய்லாந்தில் இடம்பெறவிருக்கும் இரண்டாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளின் சார்பில் கலந்து கொள்ளும் குழுவில் சில மாற்றங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டப் பேச்சுக்களின் போது புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் நிதித் துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் கலந்துகொள்ளலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. முதல் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொண்ட உருத்திரகுமார், மகேஸ்வரன் ஆகியோருக்குப் பதிலாகவே இவ்விருவரும் கலந்து கொள்வார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை புலிகளின் இராணுவப் பிரிவுத் தளபதி ஒருவர் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஒருவர் கலந்துகொள்வதாயின் அரசாங்கத் தரப்பிலும் ஆயுதப் படைகளோடு சம்பந்தப்பட்ட ஒருவர் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டி ஏற்படலாம் என அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. ■

## இரகசிய உடன்பாடே முக்கிய குறைபாடு

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஒரு இரகசிய உடன்பாடாக நடைபெற்று வருகின்றமையே தற்போதைய சமாதான முயற்சிகளில் காணப்படும் மிகப் பெரும் குறைபாடு என்று மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பு (UTHR) தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 4 ஆம் தேதி அந்த அமைப்பு விடுத்திருக்கும் விசேட அறிக்கை ஒன்றில் தேசிய ஒருமைப்பாட்டைக் காணும் முயற்சி என சமாதானப் பேச்சுக்கள் வர்ணிக்கப்பட்டாலும் கூட அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரகசிய உடன்பாடாகவே இந்த முயற்சிகள் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாரிய குறைபாடு எனவும் (UTHR) சுட்டிக் காட்டியுள்ளது. ■

## "நெடுந்தீவில் எமது பணிகளை மீண்டும் ஆரம்பிப்போம்" ஈ.பி.டி.பி. அறிவிப்பு

"நாங்கள் மீண்டும் நெடுந்தீவில் எமது அலுவலகத்தையும் பணிகளையும் ஆரம்பிப்போம்" என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு புலிகளின் தூண்டுதலின் பேரில் ஆயுதபாணிகள் சிலரால் ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அதன் உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறினர். இது தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். தவராஜாவிடம் கேட்ட போது தமது கட்சி ஜனநாயக அரசியல் கட்சி என்ற வகையில் நெடுந்தீவில் அலுவலகம் அமைத்து அங்கு செயற்படுவதற்கான பூரண உரிமை தங்களுக்கு இருப்பதாகவும் தாங்கள் மீண்டும் வெகு விரைவில் அங்கு சென்று பணிகளை ஆரம்பிப்போம் என்றும் கூறினார். இது தொடர்பாக தவராஜா மேலும் தெரிவித்ததாவது:

ஈ.பி.டி.பி. கட்சி 1990 ஆம் ஆண்டு முதல் யாழ்குடாநாட்டில் தீவுப் பகுதியில் மக்களோடு இரண்டறக் கலந்து சேவையாற்றி வருகிறது. இத்தனை காலமும் எம்மோடு இணைந்து பணியாற்றிய மக்கள் இப்போது எமக்கு எதிராகத் திரும்பியிருப்பதாகக் கூறுவது இட்டுக்கட்டிய, முற்றிலும் தவறான கூற்றாகும். புலிகள் தமது கையாட்களை ஏவிவிட்டு எமது அலுவலகத்தைத் தாக்கி அந்தப் பழியைப் பொது மக்கள் மீது சுமத்த முற்படுவது தவறானது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக உண்மை நிலையை விளக்கி இராஜதந்திர சமூகத்திற்கு நாம் கடிதங்களை அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, நோர்வே, பிரிட்டன், ஆகிய நாடுகளின் தூதரகங்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. எமக்கிருக்கும் ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் நெடுந்தீவில் நாம் மிக விரைவில் எமது அரசியல் பணிகளை மீண்டும் ஆரம்பிப்போம் என்றும் தவராஜா கூறினார். ■

## யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும் அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை!

யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும் என இந்து கலாச்சார அமைச்சர் ரி.மகேஸ்வரன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாகக் குடாநாட்டிலிருந்து வெளியேறிய மக்கள் மீளக்குடியேறும் வகையில் ஒரு சில பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும் என்று அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருக்கிறார்.

பலாலி விமானத்தளம், காங்கேசன்துறை கடற்படைத் தளத்தைத் தவிர ஏனைய இடங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று அமைச்சர் மகேஸ்வரன் அரசாங்கத்தைக் கோரியிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே மகேஸ்வரன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். ■

## தனியலகு கோரிக்கையைக் கைவிட்டது ஏன்? மு.கா. கொள்கை விளக்கக் கூட்டத்தில் ஹிஸ்புல்லா மீது சாடல்

முஸ்லிம்களுக்கான தனி அலகுக் கோரிக்கையை தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் போது வலியுறுத்தப் போவதில்லை என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்ததையடுத்து கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே தோன்றியுள்ள அதிருப்தியைச் சமாளிக்கும் முயற்சிகளில் முஸ்லிம் காங்கிரஸ் இறங்கியுள்ளது.

அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமின் பணிப்பின் பேரில் பஷீர் சேகுதாவூத் எம்.பி.கிழக்கு மாகாண முஸ்லிம் கிராமங்களில் கூட்டங்களை நடத்தி வருகிறார். அவ்வாறான பொதுக் கூட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான தனியலகு கோரிக்கையைக் கைவிட்டது பற்றி இல்லாமல் நுஆ எம். பி.க்களின் தனிப்பட்ட விவகாரங்களை விமர்சிப்பதிலேயே கூடுதல் நேரம் செலவிடப்படுகின்றது.

எவ்வாறெனினும் இந்தத் தன்னிலை விளக்கக் கூட்டங்களுக்கு மிக மிகக் குறைந்த அளவிலான மக்களே சமூகமளிக்கின்றனர்.

ஒலிபெருக்கி மூலம் தெருத் தெருவாகக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தும் மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளாது புறக்கணித்து வருகின்றனர்.

கடந்த ஞாயிறன்று கல்குடாத் தொகுதியிலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை, காவத்தைப் பகுதி முஸ்லிம்களுக்கு விளக்கமளிப்பதற்கான கூட்டமொன்றினை பஷீர் சேகுதாவூத் வாழைச்சேனை அந்-நூர் தேசியக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தார்.

விளக்கக் கூட்டத்தில் பிரதியமைச்சரும் ஓட்டமாவடியைச் சேர்ந்தவருமான முஹைதீன் அப்துல்காதரும் கலந்து கொள்வதாக இருந்தது. எனினும் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட நேரத்திலிருந்து ஒரு மணித்தியாலம் கடந்தும் மக்களின் வருகை மிக மோசமாக இருந்ததால் பிரதியமைச்சர் முஹைதீன் அப்துல் காதர் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டார்.

இறுதியில் சுமார் 25 பேரளவில் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களிடம் விளக்கமளித்த பஷீர் சேகுதாவூத் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு பற்றிப் பெரிதாக எதுவும் தெரிவிக்காது ஹிஸ்புல்லாஹ்வை தாக்கிப் பேசினார். ஹிஸ்புல்லாஹ் எம்.பி. ஃபேரியலின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தொங்கித் திரிவதாகவும், தான் கொழும்பில் 2 வது திருமணம் முடித்திருப்பதாக ஹிஸ்புல்லாஹ் அபத்தமான பிரச்சாரம் செய்வதாகவும் விளக்கமளித்தார்.

ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளில் சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அப்பகுதியிலிருந்தே முஸ்லிம் காங்கிரஸின் விளக்கக் கூட்டத்திற்கு 25 பேர் தான் வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## ஜனாதிபதிக்கு அறிவுரை!

பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போது சற்று மென்மையான வார்த்தைகளைப் பிரயோகிக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி.க்கள் சிலர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி சமீபத்தில் பிலிமதலாவ, பொலன்னறுவை உள்ளிட்ட பல இடங்களில் அரசியல் கூட்டங்களில் ஆற்றிய பகிரங்க உரைகள் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்ததுடன் ஜனாதிபதியின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றையடுத்துப் பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி.க்கள் சிலர் பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போது மென்மையான வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர். ■

## ஈ.பி.டி.பி. அலுவலகத் தாக்குதல் 2 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

நெடுந்தீவில் கடந்த சனிக்கிழமை இரவு ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் அலுவலகம் தாக்கப்பட்டு உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை நடத்தி இரண்டு நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபருக்கும் இராணுவத் தளபதிக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத் தளபதிக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் தனித் தனியாக இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்திருக்கும் ஜனாதிபதி, "ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் யாரும் இப்படிச் சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று அவற்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசின் கோரிக்கைப்படி போர் முறையிலிருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பித் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றது ஈ.பி.டி.பி. அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் முக்கிய பொறுப்பாகும். புலிகள் ஆயுதங்கள் தாங்கியிருக்கும் நிலையில் ஈ.பி.டி.பி.யிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருப்பதால் இது இன்னும் முக்கியத்துவம் பெறுகின்றது. புலிகளின் கோரிக்கையின் பேரில் ஆயுதங்கள் களையப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரசினது கடமை என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டுகின்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துச் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட வேண்டும். அது குறித்து இரண்டு நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பியுங்கள் என்று பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி வலியுறுத்தியிருக்கிறார். ■

# முரசம்

## தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு பலமுறை இக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுப்பதும் பின்னர் அரசியல் தலைவர்களின் உத்தரவாதங்களை நம்பி அவற்றைக் கைவிடுவதும், அவ் உத்தரவாதங்கள் நிறைவேறாமல் ஏமாற்றப்பட்ட நிலையில் மறுபடி உண்ணாவிரதத்தில் இறங்குவதுமாக இப் போராட்டம் தொடர்கதையாகிச் சென்றவண்ணமுள்ளது. எனினும் இம்முறை தாம் இறுதியான தீர்வு கிட்டும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென்ற உறுதியுடன் அவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். இதேவேளை இச் சிறைக் கைதிகள் தொடர்பாக தாம் அசிரத்தையாக இருந்துவிட்டதாக ஒப்புக்கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை அதைப் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப் போவதாகவும் இதற்கு அரசாங்கம் நீதி வழங்காவிடில் தாம் அரசாங்கத்தை எதிர்க்கத் தீர்மானித்துள்ளதாகவும் சற்று உரத்த குரலில் தெரிவித்துள்ளார்கள். அரசியல் கைதிகள் போராட்டத்தில் இறங்கிய பின்னர்தான் அவர்கள் இந்த நிலைப்பாட்டுக்கேனும் வந்தார்களென்பது குறிப்படத்தக்கது. தற்போது புலிகள் அலுவலகங்களமைத்து, அரசாங்கப் பிரதிநிதிகள் மட்டுமன்றி வெளிநாட்டுப் பிரதிநிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திவரும் நிலையில், புலிகளின் முக்கிய தளபதிகள் முதற்கொண்டு கொழும்பின் பிரபல வைத்தியசாலைகளில் அரசாங்க ஏற்பாட்டில் வைத்திய சிகிச்சை அளிக்கப்படுகின்ற நிலையில், புலிகள் தலைவர்களை அரசாங்க அமைச்சர்களே நேரில் சென்று சந்தித்து வருகின்ற நிலையில், புலிகளில் உறுப்பினராக இருந்த குற்றச்சாட்டிலும், புலிகளைத் தெரிந்தும் காட்டிக்கொடுக்காத குற்றச்சாட்டிலும், புலிகளுக்கு உணவு, நிதி வழங்கிய குற்றச்சாட்டிலும் சிறையிலடைத்து வைத்திருப்பது வேடிக்கையானது மட்டுமன்றி வேதனைக்குரியதும்கூட. இதேவேளை இவ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் சட்டச் சிக்கல்களும் இருக்கவே செய்கின்றன. பலருக்கு ஏற்கெனவே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு உள்ள மாற்று மார்க்கம் பொது மன்னிப்பு வழங்குவதாகவே இருக்கிறது. ஜனாதிபதிக்கே பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் உள்ளது. அதேவேளை பொது மன்னிப்பு வழங்கும்படி அரசாங்கம் ஜனாதிபதிக்குச் சிபாரிசு செய்யவேண்டியும் உள்ளது. கௌரவப் பிரச்சினைகளுக்கு மத்தியில் இவற்றை மேற்கொள்ள இவர்கள் முன்வருவார்களா? என்பது கேள்விக்குரியதே. எவ்வாறாயினும் தண்டனை வழங்கப்படாது, நீண்டகாலம் தடுப்புக்காவலில் இருக்கும் அப்பாவிகளையாவது உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாமல்லவா?

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# 19ஆவது திருத்தம் தீர்ப்பு என்ன?

நரன்

19ஆவது திருத்தச் சட்டம் என்பது இலங்கை அரசியலில் தற்போது பரப்பரப்பாகியுள்ள, யாவரதும் கவனத்தை ஈர்த்துள்ள விடயம்.

ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டிக் குறைக்கும் முயற்சியே 19வது திருத்தச் சட்டமூலம் என்னும் பெயரில் முன்வைக்கப்படுகிறது.

இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் கையிலேயே அதிகாரங்கள் குவிந்துள்ளன.

ஒரு வருடத்தின் பின் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் அதிகாரம் உள்ளது.

அந்த அதிகாரம் பற்றிய அச்சமே இப்போது 19ம் திருத்தச் சட்டமூலத்தை வகுக்கக் காரணமாகியது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து இன்னும் இரு மாதங்களுக்குள்-அதாவது டிசம்பர் 5ம் திகதியுடன்- ஒரு வருடம் பூர்த்தியாகிவிடும்.

அதன் பின் எந்நேரத்திலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

இத்தகைய ஆபத்து நெருங்கி வருவதைக் கண்ட ஐ.தே.க. அரசாங்கம் அதற்கு முன்னரே அவ் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பறித்துவிட வேண்டுமென்று முனைகிறது.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை என்ற வாக்குறுதியொன்றை எழுத்து மூலமாகவே சபாநாயகருக்கு வழங்கியிருக்கிறார்.

இருந்தும் அந்த வாக்குறுதியை நம்பி வாழா விருந்துவிட்டால், அவரின் கைகளில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் சேர்ந்த பின்னர் அவர் ஏதேனும் ஒரு காரணத்தைச் சொல்லித் தனது முடிவை மாற்றிக் கொண்டால் அதன்பின் தாம் அம்போதான் என்று அஞ்சுகிறார்கள் ஐ.தே.க.வினர்.

எனவேதான் அவசர அவசரமாக இச் சட்டமூலம்.

அத்தோடு இப்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் அரசாங்கம் தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் தம்மை எதுவும் செய்ய முடியாதென்ற தன்மையை எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது.

தற்போது நடைபெற்று முடிந்த முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த சில கருத்துகளும் இதையே வலியுறுத்துகிறது.

ஜனாதிபதியால், ஜே.வி.பி. போன்ற சக்திகளால், இச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆபத்து நேரிடக் கூடும், ஆனாலும் பிரதமர் ரணில் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டிக் குறைக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளார், அது வெற்றியளிக்க வேண்டுமென அவர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறான நிலையில்தான் இவ் அரசாங்கம் ஒரு உறுதியான, ஸ்திரமான அரசாங்கமாக அமையும். அத்தகைய ஸ்திரமான அரசாங்கமொன்றுடன்தான் தாம் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பயனுள்ளதாக அமையுமென அவர் இதற்குக் காரணமும் சொல்லியிருந்தார்.

எனவே புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கும் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறுவது அரசாங்கத்துக்கு அவசியமாக உள்ளது.

19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் இரண்டு பிரதானமான விடயங்கள் உள்ளன.

ஒன்று, பாராளுமன்றத்தைக் கலைப்பது முதற்கொண்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில பாராளுமன்றத்துக்கு மாற்றப்படுவது, அடுத்தது, இச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு மட்டும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறி வாக்களிக்க வகைசெய்வது.

இச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான அங்கத்தவர்களின் ஆதரவு தேவை.

அரசாங்கத்திடம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் இல்லை.

இவ்விடயத்தில் அரசாங்கத்துக்கு உதவக்கூடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சேர்த்தாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்ட முடியாது.

இதற்கு குறைந்தது 22 பா.உ.க்களையாவது பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஈ.பி.டி.பி, புளொட் ஆகியவற்றிலிருந்து தமது பக்கத்துக்கு மாறி வாக்களிக்கச் செய்தால்தான் அதனால் இச் சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும்.

அவ்வாறு மாறி வாக்களிப்பதற்கும் இவ் அரசியல் யாப்பில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

தற்போதைய யாப்பின்படி கட்சியின் முடிவை மீறிச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்சி நீக்கவும், அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்கவும் முடியும்.

இவ்வாறான சட்டம் இருக்குமானால் ஐ.தே.க. அரசாங்கத்துக்காகக் கட்சிமாறி வாக்களிக்கும் உறுப்பினர்கள், தமது பாராளுமன்றப் பதவியைப் பறிகொடுக்க நேரிடும்.

இந்த அச்சமே அவ்வாறு மாறி வாக்களிக்கக்கூடியவர்களையும் தடுத்துவிடும்.

எனவேதான் 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தில், இச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு மட்டும் கட்சி மாறி வாக்களிக்கும் உரிமை கோரப்பட்டுள்ளது.

கட்சி மாறி வாக்களிக்கும் உரிமை நிரந்தரமாகக் கோரப்படாமல் இச் சட்ட மூலத்துக்கு மட்டுமே கட்சி மாறி வாக்களிக்கக் கோரப்படுவது ஏன் என்பது ஒரு நியாயமான கேள்வியாக இங்கு எழுகின்றது.

இதற்குக் காரணம் அவ்வாறான நிரந்தரமாக கட்சி மாறி வாக்களிக்கும் உரிமைக்கு, சிறுபான்மைக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணியில் கூட்டுச் சேர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகள்கூட எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டால் எந்தவொரு அரசாங்கமும் ஆசை காட்டி தமது உறுப்பினர்களை வாங்கி விடலாம் என்பதும், தமது உறுப்பினர்களைத் தாம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதென்பதும், ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உரியவர்களும் கட்சி மாறி தப்பித்துக் கொள்ளலாமென்பதும் அவர்களின் அச்சமாகும்.

இதனால் அவ்வாறான நிரந்தரமாகக் கட்சி மாறி வாக்களிக்கும் உரிமையை 19ஆவது திருத்தச் சட்டமூலத்தில் கோரினால் அதன் பிரதான நோக்கமான ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் விடயங்களை நிறைவேற்றவும் ஆதரவு கிடைக்காது போகும் என்ற அச்சம் ஐ.தே.க. அரசாங்கத்துக்கு உள்ளது.

அதனால்தான் இத்தகைய ஒருவிடயத்துக்கு மட்டும் கட்சிமாறி வாக்களிக்கும் விநோதமான கோரிக்கையை அது முன்வைக்க நேரிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இதிலுள்ள அடுத்த சிக்கல் என்னவென்றால் இப் பிரேரணை அரசியல் சட்டத்துக்கு அமைவானதாவென்பதையும் இதை நிறைவேற்ற பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமன்றி சர்வ ஜன வாக்கெடுப்பொன்றும் தேவையா என்பதுதான்.

> *இப்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் அரசாங்கம் தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் தம்மை எதுவும் செய்ய முடியாதென்ற தன்மையை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.*

அது குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத்தான் இப்போது நாட்டின் அரசியல் ஆர்வலர்கள் யாவரும் எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர்.

இது குறித்த வழக்கு விசாரணை யாவும் முடிந்த நிலையில் ஒக்டோபர் 8ம் திகதி தீர்ப்பளிக்கப்படுமென எதிர்பார்த்திருந்த தீர்ப்பு ஒக்டோபர் 17ம் திகதிக்குள் அறிவிக்கப்படுமென உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கையில் சகல அதிகாரங்களையும் குவித்துள்ள இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பு ஐ.தே.க. வினாலேயே, அதன் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவினால் கொண்டுவரப்பட்டது.

அதனால் இந்த யாப்பின் சரத்துக்கள் யாவும் ஜனாதிபதியைப் பலப்படுத்தவும் காக்கவும் கூடியவாறே அமைந்துள்ளது.

ஆகையால் இவ் வழக்கின் தீர்ப்பு ஜனாதிபதிக்கு சாதகமாக, சர்வஜன வாக்கெடுப்பை நிகழ்த்த வேண்டுமென்றவாறே அமையக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

உதாரணமாக இலங்கையின் யாப்பை எடுத்துக் கொண்டால் அதன் உறுப்புரை 3 இலங்கையில் இறையாண்மையானது பிரிக்கப்பட முடியாதபடி மக்களுக்குரியது எனவும், இவ் இறையாண்மை என்பது அரசாங்கத்தின் அதிகாரங்கள், மனித உரிமைகள், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை ஆகியவற்றைக் கொண்டதெனவும் கூறப்படுகிறது.

உறுப்புரை 4ல் மக்களின் சட்டவாக்கல் அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தாலும், பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாலும் நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பான ஜனாதிபதியின் அதிகாரங்களை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மற்றொரு அமைப்பான பாராளுமன்றம் மாற்றுவதென்பது மக்களின் இறையாண்மையை மறுதலிக்கும் செயலென்ற வாதம் எழுகிறது.

அவ்வாறு மாற்றுவதானால் அதற்கு சர்வ ஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்ற அவசியம் எழுகிறது.

இதேவேளை கட்சி மாறி வாக்களிப்பதென்பதும் மக்களின் இறையாண்மையை மீறுவதாகிறதென்ற ஒரு வாதமும் உள்ளது.

அது எப்படியென்றால், தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறைப்படி மக்கள், கட்சிக்கே முதன்மை வாக்கை அளிக்கிறார்கள். கட்சிக்கு அளிக்கும் வாக்குப்படிதான் அக் கட்சிக்கான பிரதிநிதிகள் தொகை தீர்மானிக்கப்படுகிறது. வாக்காளர் ஒருவர் கட்சிக்கு வாக்களித்து வேட்பாளருக்கு வாக்களிக்காவிடினும் அவ் வாக்கு கணிப்புக்குள்ளாகிறது. ஆனால் வேட்பாளருக்கு வாக்களித்து கட்சிக்கு வாக்களிக்காவிடில் அது செல்லுபடியற்றதாகிறது.

எனவே மக்கள், கட்சியைத் தெரிவுசெய்வதனூடாக வேட்பாளர்களை தெரிவு செய்கிறார்களேயன்றி நேரடியாக வேட்பாளர்களைத் தெரிவு செய்யவில்லை. எனவே கட்சியை மீறி அதன் பா.உ.க்கள் சுயமாக தீர்மானிப்பது மக்களின் இறைமைக்கு மாறானது என்றும் ஒரு பலமான வாதம் உள்ளது.

இத்தகைய நிலையில் அரசாங்கம் முன்வைத்துள்ள 19ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமெனத் தீர்ப்பானால் அச் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய பொறுப்பும் ஜனாதிபதிக்கே உரியதாகிவிடும்.

சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென்றால், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்க முன்வருபவர்களிடையே பெரும் தயக்கம் ஏற்பட வழியுண்டு.

ஏனெனில், சர்வஜன வாக்கெடுப்பை நிகழ்த்துவதற்கு முன்னதாகவே ஜனாதிபதியின் கையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் சேர்ந்துவிடும்.

தற்போதே ஏறத்தாழ ஜனாதிபதிக்கு அவ் அதிகாரம் சேர்ந்த நிலைதான். இத் தீர்ப்பு ஒக்டோபர் 17ம் திகதி வருமாயின் அதிலிருந்து சுமார் ஒன்றரை மாதங்களே உள்ளன.

அதி இக்கட்டான நிலை ஏற்பட்டால் ஜனாதிபதியால் வலு சுலபமாக பாராளுமன்றத்தை இரண்டு மாதங்கள் வரை ஒத்திப் போட முடியும்.

எனவே இப்போது எவ்வாறேனும் தனது கரத்தில் இவ் அதிகாரத்தைப் பற்றிக்கொள்ளக் கூடிய தொலைவில்தான் அவர் உள்ளார்.

ஆனால் இயல்பாகவே அது தன் கரத்தில் வந்து சேரும் என்ற எதிர்பார்ப்புடனேயே அவர் காத்திருக்கிறார்.

எவ்வாறாயினும் 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி, ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதாக ஐ.தே.க. முன்னெடுத்த இந்த அரசியல் நகர்வு தோல்வியைத் தழுவினால் அடுத்தது என்ன?

அரசாங்கம் தானே பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்ல முடியுமா?

அதுவும் முடியாது, தனது ஆட்சியை வாபஸ் பெற்றுக்கொள்ள மட்டுமே ஐ.தே.க.வுக்கு முடியும், ஆனால் ஜனாதிபதியால் வேறு ஒரு கட்சியை ஆட்சியமைக்கக் கோர முடியும்.

எனவே 19ம் திருத்தம் தோல்வியுற்றால் அரசாங்கம் தனது தலையில் தானே மண் கொட்டிய நிலைக்கு உள்ளாக நேரிட்டுவிடும்.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தித் திட்டம் தொடர்பாக இந்தத் திட்டத்திற்குள் அடங்கும் பிரதேச மக்களின் கருத்தறிய தினமுரசு வாரமலர் கள ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்த ஆய்வின் போது இயற்கையில் எழில் கொஞ்சும் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் முரசு குழுவினர் நேரில் சென்று மக்களின் கருத்தை அறிந்தனர்.

மலையகத்தை இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும் பாகத்தான் தென்னிலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். தேயிலைச் செடிகளுக்கு அப்பால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் கிடைக்காத ஒரு ரம்மியமான வாழ்வியல் சூழல் மலையகத்தில் காணப்படுகிறது. இயற்கை நீர் வீழ்ச்சிகளும், பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களும், அந்திசாயும் நேரத்திலும் அதிகாலை வேளையிலும் மலைகளை முடிக் கொள்ளும் பனி முட்டமுமாக மலையகத்தில் இலங்கையில் வேறு எங்கும் காண முடியாத ஒரு அசாதாரண அழகை இரசிக்க முடியும்.

**மலையகத்திலிருந்து அரசாங்கத் தரப்பிற்கு வலுவான ஒரு உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கின்றமையே காரணம். "மலையக மக்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் திட்டத்தை செயற் படுத்துங்கள்" என்று மின்சக்தி அமைச்சருக்கு நம்பிக்கையூட்டப்பட்டுள்ளது. அந்த உத்தரவாதத்திற்கான விலை என்ன?**





# மேல் கொத்மலைத் திட்டம்!

## மலையகத் தமிழரின் கதி என்ன?

இரு தசாப்தங்களுக்கு முன்னர் மலைநாட்டில் காணப்பட்ட இயற்கைச் சூழல் இப்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் கூட இன்னும் மலையகம் அதன் செழிப்பின் முழுமையை இழந்து விட்டதாகக் கூறுவதற்கில்லை. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் இன்பத்தை விடத் துன்பங்களே நிரம்பிக் காணப்பட்டாலும் கூட அந்த மக்கள் தமது சொந்த இடத்தின் இயற்கை அழகால் ஏதோ ஒரு வகையில் ஆறுதல் அடைகிறார்கள்.

மலையகத்தின் இயற்கை வளத்தைச் சிதைத்த காரணிகளுள் நீர் மின் உற்பத்தித் திட்டங்களுக்குக் கணிசமான பங்கு உண்டு. இலங்கையின் நீர் மின் திட்டங்களுள் 90 சதவீதமானவை மலைநாட்டிலேயே அமையப் பெற்றுள்ளன. இவை அமைக்கப்பட்ட போது மலையக மக்களின் அடையாளங்களைச் சிதைக்கும் ஏராளமான விசயங்கள் நடந்தேறின.

இன்று மேல் கொத்மலை திட்டம் தொடர்பாக மலையக மக்கள் மத்தியில் ஒரு இனம்புரியாத பயம் குடிகொண்டிருப்பதை அவர்களுடன் உரையாடியதிலிருந்து அறிய முடிந்தது.

"எமது பகுதியில் ஏற்கெனவே பல மின் உற்பத்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை உருவாவதற்கு முன்னர் இந்த இடம் இப்படியிருக்கவில்லை. இங்கே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை காண்பதே அரிதாகவிருந்தது. எல்லாப் பக்கமும் தேயிலைச் செடிகளும் தோட்டத் தொழிலாளர்களுமாகவே இருந்தார்கள். ஆனால் இன்று அப்படியில்லை. எனது வீட்டின் கொல்லைப் பக்கம் வரை மின் உற்பத்தி நிலையத்தின் வேலி நீண்டு செல்கின்றது" என்று தன் கைகளால் அருகில் உள்ள விமலசுரேந்திர மின் உற்பத்தி நிலையத்தைக் காண்பித்துக்கொண்டே கூறினார் 'நோட்டன் பிரிட்ஜ்'ஜைச் சேர்ந்த சிவப்பிரகாசம் என்ற வியாபாரி.

அதே ஊரில் பாடசாலை சீருடைக்கு மேலால் சுவெற்றர் அணிந்து கொண்டு கையில் புத்தகமும் குடையுமாக வந்து கொண்டிருந்த புஸ்பராணி என்ற உயர்தர வகுப்பு மாணவியிடம் **"மேல் கொத்மலைத் திட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன"** என்று கேட்டோம். முதலில் எங்களை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பாடசாலையில் நடைபெறும் விவாதத்தில் பேசுவது போன்று தனது ஆதங்கத்தைக் கொட்டினார். "என்ன மின்சாரத் திட்டம் இங்கு அமைந்தாலும் எங்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது. எங்களுடைய லயன்கள் இன்னமும் இருட்டில்தான். எமது லயன்களுக்கு மேலாக மின்சாரக் கம்பிகள் நாடு முழுவதற்கும் மின்சாரத்தை ஏந்திச் செல்கின்றன. ஆனால் மலையகம் இருட்டில் இருக்கிறது. எங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் தலைவர்கள் இதற்குத் தீர்வு தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் இப்போதைய இளைய சமுதாயம் இல்லை. இப்படியிருக்க இந்த மின்சாரத் திட்டம் எமது வளங்களை மேலும் ஒருதரம் சீரழித்துவிட்டு எங்களைத், தொடர்ந்தும் இருட்டில் வைத்திருக்குமென்றால் நாம் எப்படி ஆதரவு தெரிவிப்பது?"

'காசல்றீ' நீர்த் தேக்க அணைக்கு மேலாக மழையில் நனைந்தவாறே வந்து கொண்டிருந்த மாடசாமி என்ற தோட்டத் தொழிலாளியை வழிமறித்து **"மேல் கொத்மலைத் திட்டம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன"** என்று கேட்டோம். சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க அவர் தன் கண் முன்னாலேயே மலையகத்தின் இயற்கை வளம் அழிக்கப்பட்டதைக் கண்ட அனுபவங்களை விரிவாக விளக்கினார். மலைநாட்டின் வேறு சில தோட்டங்களிலும் தான் வேலை செய்திருப்பதாகக் கூறிய அவர், 'காசல்றீ' மின் உற்பத்தித் திட்டம் அமையப்பெற்ற போது தங்களது இருப்பிடங்கள் அழிக்கப்பட்டதாக, தற்போது நீர் நிரம்பியிருக்கும் அணையை நோக்கிக் கையைக் காட்டியவாறே கூறுகிறார்.

'தலவாக்கலை' பகுதியிலிருந்து தான் மேல் கொத்மலைத் திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படப் போகின்றன.மலையக அரசியலில் எப்பொழுதும் பிரபலமான ஒரு இடம் தலவாக்கலை. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அங்கு இருப்பதாக மட்டும்தான் பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகம் சொல்கின்றது. ஆனால், தேயிலையுடன் சேர்த்து மேலும் பல ஆராய்ச்சிக்குரிய இயற்கை அழகுகள் தலவாக்கலையைச் சுற்றி இருக்கின்றன. அந்த அமைதியான நகரம் அப்பொழுது தான் விழித்தெழுந்திருந்தது. தோட்டப் பகுதிகளுக்கு அன்றாடப் பணிக்காகச் செல்லக் காத்திருந்த பலரிடம் இந்தத்திட்டம் தொடர்பாக வினவினோம். பெரும் பாலானவர்கள் தமது அரசியல் தலைமையை மோசமாகச் சாடினார்கள். "மக்கள் அழிந்தாலும் ஊரழிந்தாலும் அவர்களுக் குரிய கமிஷன் தொகை கிடைத்தால் சரி" என்று தமது ஆத்திரத்தைக் கொட்டினார்கள். மேல்கொத் மலைத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் அமைச்சர் 'சந்திரசேகரனை'ப் பலரும் திட்டித் தீர்த்தார்கள். அமைச்சர் 'ஆறுமுகம் தொண்டமானை'ப் பாராட்டிப் புகழும் நிலையில் அந்த மக்கள் இல்லாவிட்டாலும் கூட மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பில் ஆறுமுகனின் நிலைப்பாடு இந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்கின்றது என்பதை அவர்களின் பேச்சிலிருந்து அறிய முடிந்தது. இன்று சந்திரசேகரனிடம் அமைச்சர் பதவி இருக்கின்றது. அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற தேவையின் காரணமாகத் தமது சொந்த மண் அழிந்தாலும் சரி என்று அவர் அரசாங்கத்தின் திட்டத்திற்கு கண் முடித்தனமாக ஆதரவு தெரிவிக்கிறார். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விசயத்திலும் சந்திரசேகரன் இரட்டை வேடப் போக்கைக் கடைப்பிடித்து, மக்களை ஏமாற்ற முனைந்து இறுதியில் முக்குடைபட்டார். இப்படித் தனது கோபத்தை வெளிப்படுத்தினார் 'கேசவராஜா' என்ற ஆசிரியர்.

'டிக்கோயா' பகுதித் தோட்ட மக்களிடையே மேல் கொத் மலைத் திட்டம் தொடர்பாக ஓரளவு விழிப்புணர்வு காணப்படுகிறது. இத் திட்டம் தங்களை எப்படியெல்லாம் பாதிக்கும் என்பதை அவர்கள் சற்று அறிந்து வைத்திருப்பதைப் போல் தெரிகிறது. தேயிலை பறித்துக் கொண்டிருந்த சில மலையகப் பெண்களை அணுகி கேட்டோம்.

"இருட்டில் கிடக்கும் எங்கள் லயன்களுக்கு வெளிச்சம் தராத எத்தனையோ திட்டங்கள் மலையகத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன. அப்போதெல்லாம் என்ன நடக்கிறது என்று மக்களுக்குத் தெரியாது. தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் உண்மையைக் கூறவும் இல்லை. ஆனால் இன்று நிலைமை வேறாகிவிட்டது. மலையகத்தில் என்ன நடக்கப் போகின்றது என்பதை ஓரளவு அறிய முடிகிறது. அப்படியிருந்தும் இந்த மின் உற்பத்தித் திட்டத்திற்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்க முடியுமா" என்று அறிவு பூர்வமாகக் கேள்வி எழுப்புகிறார் திருமதி பெருமாள் என்ற தொழிலாளி.

**அலுவலக நிருபர்**

இப்படி மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு நிலவும் இந்த மின் உற்பத்தித் திட்டத்தை முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் சில சமாளிப்புக்களைச் சொல்லி, சில சலுகைகளை வழங்கிச் செயற்படுத்தி விடலாம் என அரசாங்கம் திட்டமிடுகிறது. இதற்கு மலையகத்திலிருந்து அரசாங்கத் தரப்பிற்கு வலுவான ஒரு உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கின்றமையே காரணம். "மலையக மக்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் திட்டத்தை செயற்படுத்துங்கள்" என்று மின்சக்தி அமைச்சருக்கு நம்பிக்கையூட்டப்பட்டுள்ளது. அந்த உத்தரவாதத்திற்கான விலை என்ன?

**மேல் கொத்மலைத் திட்டம் குறித்து முரசு நடத்திய கள ஆய்வின் மேலதிக விபரங்கள் அடுத்த வார முரசில் இடம்பெறும்**



# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:-031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

**விதுஜா ஏசியன் சொப்**

---

## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:

**அப்பு: 0065-975 14 941**

---

## இலவசம் இலவசம் இலவசம்

## வெளிநாட்டில் பணிப்பெண் வெற்றிடங்கள்

வெளிநாட்டில் தொழில்புரியச் செல்லும் உங்கள் வாழ்க்கைச் சுமைக்குத் தோள் கொடுக்க அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் இப்போது தயாராகவுள்ளது.

## குவைட்~டுபாய்~சவூதி

எமது நிறுவனத்தின் மூலமாகப் புறப்படும் உங்களுக்குக் கிடைக்கப்பெறும் சலுகைகள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் எமது நிறுவனத்தின் மூலமாக செலுத்தப்படும். (குவைட் – சவூதி)

அது மாத்திரமன்றி நீங்கள் வெளிநாடு புறப்படுவதற்கு முன்னரே நீங்கள் பணியாற்றச் செல்லும் வீட்டின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை முன் கூட்டியே பெற்றுத் தருவோம்.

சேவைக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடி நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலும், வளைகுடா, குவைத் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகளுக்கும் புதிய சாரதிகளுக்கும் வெற்றிடம் உண்டு.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு முகவர் மூலமாக சரியான முறையில் வெளிநாடு செல்ல

**Sky Travels & Tours**

அனுமதிப்பத்திர இல. 1832

இல: 528 - A முதலாம் மாடி, மருதானை வீதி, கொழும்பு-10, ஸ்ரீ லங்கா.

தொ.பே: 074-723435, 074-723760, 074-724464.
பெக்ஸ்: 074-723435

---

**• பிரத்தியேக வகுப்புக்கள் •** கற்பித்தலில் 10 வருட அனுபவம் கொண்ட பொறியியல் பட்டதாரியினால் G.C.E.O/L மாணவர்களுக்குக் கணித பாடமும், G.C.E. A/L, LONDON A/L மாணவர்களுக்குப் பௌதீக பாடமும் வீடுகளுக்கு வந்து தனியாகவோ, சிறு குழுக்களாகவோ கற்பிக்கப்படும். அதி திறமைச் சித்தி பெறவிரும்புவோர் அதி சிறப்பாக வழி நடாத்தப்படுவர்.

தொடர்பு கொள்க:- R.கவி {B.Sc (Eng)} Hotline:- 072-431032

---

## விளம்பரப் பகுதி

## வதிவிட விசா பெற்று வெளிநாடு செல்கிறீர்களா?

**உங்கள் பாரத்தை நாங்கள் சுமக்கத்தயார் !**

உலகின் எப்பாகத்திற்கும் தங்களது வீட்டுப் பொருட்களை குறைந்த செலவில் துரிதமாய் அனுப்புவோம்.

- ☞ அம்மி முதல் ஆட்டுக்கல் வரை
- ☞ வெள்ளிப்பாத்திரம் முதல் குத்துவிளக்கு வரை
- ☞ உணவுப் பொருள் முதல் உடுதுணி வரை
- ☞ தளபாடங்கள் முதல் தரைவிரிப்பு வரை

சகல பொருட்களையும் சிறப்பான முறையில் பொதி செய்து சுங்கத்திணைக்கள நடைமுறைக்கு அமைய காப்புறுதி செய்து பொதிகளாகவோ, கொள்கலன்களாகவோ அனுப்பிவைக்கப்படும்.

**பிரயாணத்திற்கு 10 நாட்களுக்கு முன் தொடர்பு கொள்க**

**DIRECTLINE INTERNATIONAL (PVT) LTD.**

164-1/2, Maha Vidyala Mawatha, Colombo-13.
Tel: 074-610877 - 8 Fax: 94-1-543204
E-mail: directline@wow.lk

**(சுங்கத்திணைக்கள அனுமதி பெற்ற முகவர்)**

---

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்ப விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

---




## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலி என்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி.**

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலியா கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# பிரச்சினைகள் எப்படி எப்படியோ தலைவர்கள் அப்படி அப்படியே

கிழக்கான்

பல வருசக் கணக்காகச் சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுக் கிடக்கிற பொடியள் மீண்டும் உண்ணாவிரதத்தில குதிச்சிருக்கிறாங்க. களுத்துறை, வெலிக்கடையில ஆரம்பிச்ச உண்ணாவிரதம் மட்டக்களப்பு, நியூமகசின் என்று விரிவடைஞ்சி போயிருக்குது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் அவசர அவசரமாக சடபுடவெண்டு எத்தனையோ விசயங்களைச் செய்தாங்க. சண்டைய நிறுத்தினாங்க, தடை செய்யப்பட்டிருந்த சாமான்களைக் கொண்டு போறதுக்கு உத்தரவு போட்டாங்க, புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு தாய்லாந்தின் கடற்படைத் தளத்தில் முதற்கட்டப் பேச்சுவார்த்தையையும் வெற்றிகரமாக முடிச்சாச்சு எண்டு அறிக்கையும் விட்டுப் போட்டாங்க.

ஆனாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருசக் கணக்கில தடுத்து வைக்கப்பட்டிருக்கிற வங்கட விசயத்தில மட்டும் ஆரும் பெரிசாக அக்கறை காட்டுற மாதிரித் தெரியல்ல.

அரசும்-புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில எத்தனையோ விசயங்கள் கிடக்குது. ஆனாலும் தமிழ் அரசியல் கைதிகள் விசயம் மட்டும் துளிகூட எடுபடல்ல எண்டது நிறையப் பேருக்குப் பெரும் கவலைதான்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் சிறையில இருக்கிற பொடியள் ரெண்டு தடவை உண்ணாவிரதம் நடத்தின போது கூட்டமைப்பு எம்.பீ.க்களும், அமைச்சர்கள் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவும், பெரியசாமி சந்திரசேகரனும் குடுத்த வாக்குறுதிகள் இழுபட்டுப் போகத்தான் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம்.

அதே நேரம் புது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுக்குப் புறகு ஆயிரத்துக்கு மேல இருந்த தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை இப்போதைக்கு 500 ஆகக் குறைஞ்சு இருக்கிறதையும் சும்மா சொல்லக் கூடாது.

எல்லாரையும் உடனே விடுறதெண்டால் முடியாத காரியம். சட்டப் பிரச்சினைகள் நிறையவே இருக்குதெண்டு சட்டமா அதிபர் திணைக்களம் சொல்லுதாம். அப்படியெண்டால் இருதரப்பும் கைதிகள் பரிமாற்றத்துக்கு எப்படிச் சட்டத்த வளச்சியெடுத்தாங்க எண்டு கேட்கிறதில கூட நியாயமிருக்கத்தானே செய்யுது.

இதெல்லாத்தையும் விட தமிழ் அரசியல் கைதி விடுதலை செய்யப்படும் வரை ஓயப்போவதில்லையெண்டு சூளுரைத்த தமிழ்க் கூட்டமைப்புக்காரங்க உண்ணாவிரதம் தொடங்கின கையோட ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு பக்கமாப் பறந்து திரியிறாங்களாம்.

கன காலத்துக்குப் புறகு சம்பந்தர் ஐயாவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் ரெண்டு நாள் சுற்றுலா யாழ்ப்பாணத்துக்குப் போயித்து வந்திருக்காராம்.

சங்கரி ஐயா எப்பவும் இப்பிடித்தான். சிக்கல் ஏதும் வரப்போகுதெண்டு தெரிஞ்சால் கனடா, லண்டன் எண்டு ஓடிப் போயிடுவார். இப்பவும் கனடாவுக்கோ அமெரிக்காவுக்கோ போயித்தார்.

இதவிட நூற்றுக் கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் இங்க உண்ணாவிரதமிருக்கிற விசயம் தெரிஞ்ச புறகும் அதப்பற்றி அக்கறையெடுக்காமல் தமிழ்நாட்டுக்குப் போய் 'பொடா' சட்டத்தில கைதாகித் தடுத்து வச்சிருக்கிற நெடுமாறனச் சந்திக்கிறதுக்கு எத்தனையோ பாடுபட்டும் முடியாமலுக்குத் திரும்பி வந்திருக்கார் ஜோசப் அண்ணை, குடும்பத்தோட.

அதுவும் என்னடா எண்டால் ஜோசப் அண்ணையின்ர இடத்துப் பொடியள்தான் கனபேர் உள்ளுக்க இருக்கிறாங்க. இவர் என்னடா எண்டால் லண்டனில இருக்கிற மகன் விசிற் வந்த போது, அவரோட தமிழ்நாட்டுக்குப் போய், தன்ர வேலையள முடிச்சிப் போட்டு நெடுமாறனப் பார்க்கிறதுக்கும் ஒரு 'றை' குடுத்திருக்கார்.

சனமும் சனங்களின்ர பிரச்சினைகளும் எப்பிடி எப்பிடியோ இருக்குது. ஆனால் நம்மட தலைவர்கள் மட்டும் அப்பிடியேதான் இருக்கிறாங்கள். யாரிட்டப் போய் இதச் சொல்லுறது.

# காவிரிப் பிரச்சினை

## நடிகர் சங்கப் போராட்டத்துக்கு ரஜனி லேட்டா வருவாரா லேட்டஸ்டா வருவாரா...?

கன்யூட் என்றவொரு அரசன் இருந்தான் முன்னொரு காலத்தில். அவன் இட்ட கட்டளையெல்லாம் நொடியில் நிறைவேற்றப்பட்டது. "ஓ,உன்னைப் போல பேரரசன் உண்டோ" என அவனது தர்பார் பிரதானிகள் புகழ்ந்தனர்.

அவர்களை நம்பி கன்யூட் கடற்கரைக்குச் சென்று, "அலைகளே திரும்பிச் செல்லுங்கள்," என ஆணையிடுகிறான். அது நடக்கவில்லை. அவன் நொந்து போய்விடுகிறான். பொதுவாக அதிகார மமதையில் இருப்போர் உண்மையினை உணர இந்தக் கதை கூறப்படும். அப்படி ஒரு குற்றச்சாட்டினை இந்திய உச்ச நீதிமன்றத்தின் மீது வைக்கலாமா என்பது வேறு விடயம்.

ஆனால், இதுவரை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்புக்கள் உடனடியாக நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதனது கருத்துக்கள் வேதவாக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. காவிரி விடயத்திலோ கர்நாடகம் அதற்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருக்கிறது. என்ன ஆனாலும் சரி, தமிழ்நாட்டிற்கு நீர் திறந்து விடப்போவதில்லை என அம்மாநில முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா அறிவித்துவிட்டார். அடுத்ததென்ன என்று அனைவரும் தலையில் கைவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



இவ் வருடம் தென்மேற்குப் பருவ மழை பொய்த்துப் போக, கர்நாடக நீர்த் தேக்கங்களில் இருப்புக் குறைய, வழக்கம் போல அம்மாநிலம் முரண்டு பிடிக்கிறது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு அது நீர் தர மறுக்கிறது.

விடயம் உச்ச நீதிமன்றத்திற்கு இரண்டு முறை கொண்டு செல்லப்பட்டாகி விட்டது. ஆனால், தமிழக விவசாயிகளுக்குத்தான் விடிவு வருவதாக இல்லை. இதுவரை தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று வர்ணிக்கப்பட்டு வந்த டெல்டா பகுதி இன்று ஏறத்தாழ முற்றிலுமாக வறண்டு போய்க் கிடக்கிறது.

இந் நிலையில் கர்நாடகாவுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான முறுகல் நிலை வலுத்து விடுகிறது. தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று கர்நாடகாவிலும்,தண்ணீரைத் திறந்து விடு என்று தமிழகத்திலுமாக ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் நடக்கின்றன. கர்நாடகத்தில் பல ஆர்ப்பாட்டங்களை நடிகர்களே முன்னின்று நடத்தியிருக்கிறார்கள். தமிழக நடிகர் சங்கங்கள் இப்போதுதான் விழித்துக் கொண்டுள்ளன.

தமிழகத்திலிருந்து கர்நாடகத்துக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. கர்நாடகா தண்ணீர் தர மறுத்தால் தமிழ்நாடு மின்சார விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்று எதிர்ப்புக் குரல்கள் தமிழகத்தில் அதிகரித்துள்ளது. இந்தக் கருத்தை வலியுறுத்தி நெய்வேலியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் தமிழக நடிகர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

கன்னடக்காரரான ரஜனியை இந்த ஆர்ப்பாட்ட ஏற்பாடுகள் கடும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன.

கர்நாடகத்துக்கு வழங்கப்படும் மின்சாரத்தைத் தடுத்து நிறுத்தக் கோரித் தமிழ்த் திரையுலகம் மேற்கொள்ளும் நெய்வேலிப் போராட்டத்தில் கலந்து கொள்ளலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்ய முடியாமல் தவிக்கிறார் நடிகர் ரஜனி.

அரசியலுக்கு அவர் வருவாரா? மாட்டாரா? என்பதைக் காட்டிலும் தமிழக மக்களின் நலன்களுக்காக நடத்தப்படும் போராட்டத்தில் அவர் கலந்து கொள்வாரா? இல்லையா? என்பதுதான் தற்போது எழுந்துள்ள கேள்வி.

"உப்பிட்ட தமிழ் மண்ணை நான் மறக்கமாட்டேன்; உயிர் வாழ்வதிங்கேதான். ஓடிவிட மாட்டேன்" என்பதெல்லாம் வெறும் பாடலில் மட்டும்தானா? அவரது இரசிகர்களும் கூட இப்படிக் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

நெய்வேலிப் போராட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு ரஜனி விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல இடங்களில் ரசிகர் மன்றங்கள் கலைக்கப்பட்டதும் உருவப் பொம்மை எரிக்கப்பட்டதும் அதற்கான அடையாளங்கள்.

பலமுனைகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பவே தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

தென்னிந்திய நடிகர் சங்கம் போராட்டத்தில் கலந்து கொள்ளும் என்று முடிவு எடுத்த நிலையில் நிர்வாகிகளைச் சந்தித்தார். போராட்டம் எல்லாம் நடத்த வேண்டாம் என்று தனது கருத்தைச் சொன்னார். போராட்டத்தில் பங்கேற்பது என்ற முடிவில் நடிகர் சங்கம் உறுதியாக இருக்கவே,ரஜனியும் கலந்து கொள்ள வேண்டிய கட்டாயச் சூழல் உருவானது.

வேறு வழியின்றி நடிகர் சங்கம் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவதாக நிர்வாகிகளிடம் உறுதி கூறினார் ரஜனி.

போராட்டத்தை நிறுத்த முயன்ற ரஜனி கடைசியாக அப்போராட்டம் நடைபெறும் இடத்தையாவது மாற்ற முயன்றார். "தமிழகத்துக்குக் காவிரி நீரை வழங்கக் கோரிக் காட்டப்படும் எதிர்ப்புணர்வை நெய்வேலி சென்றுதான் வெளிப்படுத்த வேண்டும் என்பதில்லை. சென்னையில் போராட்டம் நடத்திக் கூட எதிர்ப்பைப் பதிவு செய்ய முடியும்" என்று நடிகர் சங்க நிர்வாகிகளிடம் கூறியுள்ளார்.

போராட்டத்தில் கலந்து கொள்ள ரஜனி சரியென்று சொல்லிவிட்டதால் நடிகர் சங்கத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர். "போராட்டம் நடைபெறும் இடத்தை மாற்ற முயல்கிறோம்" என்று ரஜனியை அவர்கள் அமைதிப்படுத்தினர்.

இது குறித்துப் போராட்டக் குழுத் தலைவர் பாரதிராஜாவிடம் ரஜனியின் முடிவை அவர்கள் விளக்கினர்.

"ஏற்கனவே திட்டமிட்டபடி போராட்டம் நெய்வேலியில்தான் நடக்கும். இதில் எந்த மாற்றமும் இல்லை" என்று உறுதியாகக் கூறிவிட்டார் பாரதிராஜா. முடிவு ரஜனியின் காதை எட்டியது.

இந் நிலையில், ஞாயிற்றுக் கிழமை காலை தில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார் ரஜனி. அங்கிருந்து ரிஷிகேசம் செல்வது திட்டம்.

**-கானகன்-**

காவிரிப் பிரச்சனை தொடர்பாக பிரதமரைச் சந்தித்துப் பேசுவதாகக் கூறியுள்ளார் ரஜனி.

எவ்விதப் பிரச்சனையும் வன்முறையுமின்றித் தமிழகத்துக்குக் காவிரி நீர் கிடைக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். ஆனால், அதற்கான முயற்சியை அவர் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஐரோப்பா சென்றுள்ள பிரதமர், அக்.13- ஆம் திகதிதான் தில்லி திரும்புகிறார்.

இந் நிலையில், நெய்வேலிப் போராட்டம் 12ஆம் திகதி நடைபெறுகிறது.

இப் போராட்டத்தில் பங்கேற்க ரஜனி லேட்டா வருவாரா? லேட்டஸ்டா வருவாரா?

# அதிரடி அய்யாத்துரை



நம் நாட்டுப் போக்குவரத்துத் துறையின் பொறுப்புணர்வைப் பாராட்டத்தான் வேணும். கடந்த வாரம் வத்தளைப் பகுதியில், சரியாக பாதசாரிகள் கடவையில், பாடசாலை மாணவிகள் இருவரை மோதிக் கொன்று, ஜாஎல டிப்போவைச் சேர்ந்த ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் சாதனை படைத்ததல்லவா. அன்று ஒரு விசேட தினம், ஒக்டோபர் 4ம் திகதி - தேசியப் போக்குவரத்துத் தினம்! இதில் அதிவிசேஷம் என்னவென்றால், அன்றைய தினம்தான் அதே பஸ்ஸிற்குச் சிறந்த பஸ் சேவைக்கானதும் சிறந்த ஓட்டுனருக்கானதுமான பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன. இன்னும் விசேஷமிருக்கு. அதே பஸ் சென்ற வருடமும் சீதுவையில் றெயில்வே கடவையொன்றில் நிகழ்ந்த விபத்தில் 12 பேர் பலியாவதற்குக் காரணமாயிருந்ததாம். நாடு உருப்பட்டாற் போலதான். வாழ்க போக்குவரத்து அமைச்சு!

நீதிபதிகளே தண்டம் கட்டின வேடிக்கைக் கதையொன்றைச் சொல்லுறன், கேளுங்கள். கடந்த வாரம் நான்கு சிங்கள நீதிபதிகள் யாழ்ப்பாணம் பார்ப்பதற்காக ஏ-9 வீதியூடாக வாகனமொன்றில் போனார்களாம். புலிகளின் சோதனைச் சாவடியில் மறிக்கப்பட்ட அவர்களிடம் சாராயப் போத்தல் ஒன்று இருந்ததாம். சாராயத்தை எடுத்துச் செல்வதானால் 100ரூபா தண்டம் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டதாம். தாம் நீதிபதிகள், தாமே பல தண்டங்களை விதித்தவர்கள். இப்படி ஒரு தண்டம் சட்டத்தில் இல்லை. தங்களையே தண்டம் கட்டச் சொல்வது முறையா என்று மன்றாடிப் பார்த்தார்களாம். மசியவில்லை. பிறகு என்ன, சுளையாய் ஒரு நூறு ரூபாத் தாளை நீட்டிவிட்டு, போத்தலோடு மாறினார்களாம் நீதிபதிகள்.

இதேபோல் இன்னொரு வேடிக்கைச் சம்பவம். சாராயம் அருந்தியபடி "ரூர்" சென்ற சிலர் புலிகளின் சோதனைச் சாவடியில் நின்றபோது அவர்களிடம் போத்தலில் சிறிது சாராயம் மீதியிருந்திருக்கிறது. அதற்குத் தண்டம் கட்ட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறார்கள். "தண்டம் கட்டினால் எடுத்துச் செல்லலாமா?" எனக் இவர்கள் கேட்க, ஆமெனக் கூறப்பட்டது. "எடுத்துச் செல்லாவிட்டால் தண்டம் கட்டத் தேவையில்லைத் தானே" என்று கேட்க, அதற்கும் ஆமெனக் கூறப்பட்டது. மீதியிருந்த சாராயத்தை அதிலேயே மட மடவெனக் குடித்துவிட்டு, "இப்போது வயிற்றில் இருப்பதற்குத் தண்டம் கட்டத் தேவையில்லைத் தானே" என்று கேட்க, அவர்கள் சிரிக்க, இவர்கள் ஹாயாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

கொடிகாமத்தில புலிகளை வரவேற்று எழுதியிருக்கிற வாசக மொண்டில இப்பிடி இருக்குது. "விடுதலைப் புலிகளே வறுக வருக!" தமிழ் மொழி அமுலாக்கல் அங்குகூட அமுலாகுதில்லை போல கிடக்கு.

சங்கரியார் சபதமெடுத்து, ரணிலைப் நிர்ப்பந்தித்து யாழ் அரச அதிபர் சண்முகநாதனை இடமாற்றம் செய்திருந்தாரென்பதை நாம் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். பின்னர் சண்முகநாதன் தனது சுழியோட்டமொன்றை உடனடியாக ஓடி, மறுபடி யாழ் அரச அதிபராகத் திரும்பி வந்திருந்தார். இதற்கிடையில் இப்போது மற்றொரு திடீர் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. முன்னர் ஊழல் புகார்களையிட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த முன்னாள் யாழ் அரச அதிபர் பத்மநாதன் இப்போது திடீரென யாழ். அரச அதிபராக நியமனம் பெற்று வந்து குதித்துள்ளார். யாழ்ப்பணம் படும்பாடு பெரும்பாடுதான் போங்கள்!

அத்தி பூத்தாப்போல எங்கட கூட்டணிச் செயலாளர் சம்பந்தன் போன கிழமை பாராளுமன்றத் தெரிவுக்குழுவோட சேர்ந்து யாழ்ப்பாணத்துக்குப் போயிருக்கிறார். எவ்வளவோ காலத்துக்குப் பிறகு, சிவசிதம்பரத்தின் இறுதிக் கிரியைகளுக்குத்தான் யாழ். பக்கம் தலை காட்டியிருந்தவர். அதுக்குப் பிறகு இப்பதான் எட்டிப்பாத்திருக்கிறார். போனவர் எதையாவது பேச வேணுமெல்லே. திருகோணமலை பிரச்சினையான இடமெண்ட படியால அதை விட்டிட்டு வெளியால வர முடியாமலிருந்திட்டாராம். மன்னிக்கட்டாம். கட்சிக்குள்ள பிரச்சினையாம். மாவைக்கும் சங்கரிக்கும் மனஸ்தாபமாம். தான்தான் ரெண்டு பேருக்கும் சமரசம் செய்து வைக்கப் போறாராம். இதை ரெண்டுபேரும் ஊரில இல்லாத நேரத்தில வந்து சொன்னார் பாருங்கோ, அதுதான் கில்லாடித்தனம் பாருங்கோ.

கொடிய சிறையில் வாடும் எங்கட பெடியள் இங்க விடுதலை வேண்டி உண்ணாவிரதமிருக்க, கடல் கடந்து ரூர் போய் தமிழ் நாட்டுச் சிறையில இருக்கிற நெடுமாறனக் காண கடலூர் வெய்யிலில கால் கடுக்க நிண்டும் முடியாமல் வந்திருக்கிறார் யோசேப்பார். என்னெண்டு சொல்லுறது இவரை...?

பாலசிங்கத்தின் தனியார் தொலைக்காட்சிப் பேட்டியைப் பார்த்த கூட்டுக்கட்சிப் பிரமுகர் சுரேஷ் நாக்கைப் பிடிங்கிக்கொண்டு சாகலாம் போல் இருக்கிறதென்று மற்றொரு கூ.க. பிரமுகருக்குச் சொன்னாராம். நாக்கையேன் பிடுங்குவான், நரம்பில்லாதது. முதுகெலும்பைப் பிடுங்கிக்கொண்டால் குட்டக் குட்டக் குனிந்துகொண்டே போகலாமல்லவா?

# நம்பமுடியாத அதிசயம்!

## மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட 'மம்மி' இன்று 8 மாத கர்ப்பிணி

மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர் இறந்து புதைக்கப்பட்ட எகிப்திய 'மம்மி' அதிசயிக்கத் தக்க வகையில் கர்ப்பம் தரித்துள்ளது. அதற்குத் தானே தந்தை என உரிமை கோருகிறார் அம் 'மம்மி'யை வைத்திருந்த புதைபொருளாராய்ச்சி நிலையத்தின் சுத்திகரிப்பாளர் ஒருவர்.

இந்த அதிசயம் எகிப்தில் நிகழ்ந்துள்ளதாக அறியப்படுகிறது.

பண்டைக்கால எகிப்தியர்கள் இறந்த அரச குடும்பத்தினர் மற்றும் பிரமுகர்களை, பிரமிட்டுகள் எனப்படும் பாரிய சமாதிகளுக்குள் விசேட முறையில் பதப்படுத்தப்பட்ட மருத்துவ மூலிகைகள் மற்றும் திரவங்களுடன் புதைத்து வந்துள்ளனர்.

இப் பிரேதங்களையே 'மம்மி'க்கள் என்று அழைக்கின்றார்கள்.

இந்த பெண் மம்மியை சென்ற பெப்ரவரியில் அகழ்வாராய்ச்சிக் குழுவினர் அகழ்ந்தெடுத்திருந்தனர். அதைப் பாதுகாத்த புதை பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் சுத்திகரிப்பாளரான டோபி சித்தார் என்பவர் அப் பெண் மம்மியின் அழகில் மயங்கி, தான் அதில் காதல் கொண்டதாகவும் அப் பெண்ணின் குரல் தன்னை அழைத்ததாக உணர்ந்ததாகவும் அதனால் தான் அதனுடன் உடலுறவு கொண்டதாகவும் கூறுகிறார்.

இச் செயலால் அவர் அந் நிலையத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இப் பெண் "மம்மி" சுமார் 24 வயது உடைய அரச குடும்பத்தவராக இருக்க வேண்டும் என இந் நிலையத்தில் இவ் விடயம் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்டு வரும் டாக்டர் அன்வார் செய்த் கூறுகிறார்.

இதை நம்ப முடியாது. ஆனால் நடக்கத்தான் போகிறது. அந்தக் கரு இப்போது 8 மாத சிசுவாக உருவாகி யுள்ளது.அது ஒரு பெண் குழந்தை என எக்ஸ்ரே மூலம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. அதன் இதயத் துடிப்பு சீராக உள்ளது எனக் கூறுகிறார் டாக்டர் செய்த். இந்த ஆராய்ச்சிக்கு ஜப்பானிய, அமெரிக்க, பிரித்தானிய, ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் சகல உதவியும் செய்து வருவதாக செய்த் கூறுகிறார்.

இம் 'மம்மி' கி.மு. 1206ம் ஆண்டுக்கும் 924ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மர்மமான விசேட திரவமொன்றில் அமிழ்த்தப்பட்ட நிலையில் இருந்த இந்த 'மம்மி' யின் தோல், தசைகள், நார்கள், நரம்புகள் யாவும் இப்போதும் சிதை வடையாமல் உள்ளதாகத் தெரிவிக்கிறார் அவர்.

இம் 'மம்மி' அகழ்ந்தெடுக்கப்பட்டபோது அது கர்ப்பம் தரித்த நிலையில் இருக்கவில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறுகிறார்.

இந்த 'மம்மி'யுடன் சேர்த்து மெழுகுப் பெட்டி ஒன்றும்-தந்தத்தினாலான சீப்பு ஒன்றும், நெக்லஸ் ஆபரணமொன்றும், செம்பாலான கண்ணாடி ஒன்றும், குழந்தைகள் விளையாடும் வெள்ளிக் கிலு கிலுப்பை ஒன்றும் புதைக்கப்பட்டுள்ளது. குழந்தை ஒன்றுக்கு தான் தாயாகப் போவதாக முன்னரே இம் 'மம்மி' அறிந்துள்ளதோ என இது ஆச்சரியப்பட வைக்கிறது.

இம் 'மம்மி' குழந்தை பெறும் அதிசயத்தைக் காண சர்வதேச மருத்துவர்களும் அறுவைச் சிகிச்சையாளர்களும் தாதிமாரும் குழுமியுள்ளார்கள். பிள்ளைப் பேறு தமது தேசிய அக்கடமியில்தான் நிகழும் என டாக்டர் செய்த் தெரிவித்துள்ளார்.

தாயை பிறநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் இந்த அதிசயக் குழந்தைக்கு ஆபத்து ஏற்படுவதைத் தாம் விரும்பவில்லை என்கிறார் அவர்.

குழந்தையின் உடல் நிலைமையைப் பொறுத்து அதை தக்க தருணத்தில் அறுவைச் சிகிச்சை மூலம் தாயிலிருந்து பிரித்தெடுக்க தாம் சகல ஆயத்தங்களையும் செய்துள்ளதாகத் தெரிவிக்கிறார்.

இக் குழந்தை பிறந்து உயிர்வாழ. பிறக்குமானால் யார் அதைப் பொறுப்பேற்பது என்றும் ஆராய்கிறோம். அதைச் சாதாரணமாக அநாதை விடுதியில் சேர்க்கவோ அல்லது தத்துக் கொடுக்கவோ முடியாது என்கிறார் டாக்டர்.

மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர் இளமையில் இறந்ததாகக் கருதப்படும் இப் பெண் 'மம்மி' எவ்வாறு இறந்தாள், அவளது குடும்பப் பின்னணி மற்றும் விபரங்கள் இன்னும் அறியப் படவில்லை.

***நன்றி வீக்லி வல்ட் நியூஸ்***

எவ்வாறாயினும் இந்த அதிசயப் பெண் 'மம்மி' குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தால் மேலும் பல கேள்விகளுக்கு இன்றைய மருத்துவ அறிவுடன் விடை தேடலாம்.




எவ்வாறு இறந்த நிலையில் உள்ள பெண் கருத்தரிக்க முடியும்-அதுவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 'மம்மி' என்ற வினா நம்ப முடியாத ஒரு கேள்வியாக முன்னிற்கிறது.

இம் 'மம்மி' ஏற்கெனவே கருவுற்ற நிலையில் புதைக்கப்பட்டதா? அவ்வாறு கருவுற்றது ஆய்வாளர்களால் அறியப்படாமல் விடப்பட்டிருக்குமா? என்றும் அக் கரு 'மம்மி'யை மீட்ட பின்னர் புதிய சூழலில் வளர ஆரம்பித்துவிட்டதா? என்றும் இதற்கு விஞ்ஞான ரீதியில் வித்துக்கள் உறங்கு நிலையிலிருந்து தகுந்த காலநிலை வரும்போது முளைவிடுவதுபோல் ஏதேனும் அறியப்படாத சாத்தியங்கள் உள்ளதா? என்றும் சிந்திக்கவைக்கிறது.

இதேவேளை இப் பெண் 'மம்மி' ஏதேனும் ஒரு தண்டனை காரணமாக உயிருடன் புதைக்கப்பட்டு இருக்கவும் கூடும். ஆயினும் அது தற்போதும் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை.


அவ்வாறான பெண் 'மம்மி' இறந்த நிலையில் இருந்தபோதும் அதன் ஜனனத் தொகுதி பழுதுபடாமல் இருந்து தற்போது கர்ப்பமுறக் கூடிய சாத்தியமும் உள்ளதா?

இவற்றைவிட இக் கதை முழுவதுமே பிரபலம் தேடும் நோக்குடன் ஒரு சிலரால் உருவாக்கப்பட்ட கட்டுக் கதையா என்பதும் சந்தேகமே.

இம் 'மம்மி'யின் கர்ப்பப் பைக்குள் வேறு ஒரு சிசுவை ஏதாவதொரு வகையில் புகுத்தி அதற்கு வெளியிலிருந்து ஊட்டமளித்து வளர்த்த வண்ணம் இப்படி ஒரு புனைகதையைச் சோடிக்கிறார்களா? என்றும் எண்ணத் தோன்றுகிறது

இது ஒரு புறமிருக்க, அக்கருவுக்குத் தந்தையென உரிமைகோரும் சுத்திகரிப்பாளர் உண்மையிலேயே தந்தைதானா என்பதையாவது இக் குழந்தை (உயிருடனோ இறந்தோ) கிடைத்தால் டி.என்.ஏ. பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள முடியும்.

# "முஸ்லிம்களை ஒடுக்குவதை நிறுத்தாவிட்டால் கடுமையாகத் தாக்குவோம்"



## அல் ஜஸீரா ஒளிபரப்பிய புதிய கெசட்டில் பின்லேடன் எச்சரிக்கை

"முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலை அமெரிக்கா நிறுத்தாவிட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரும்" என்று ஒசாமா பின்லேடன் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கப் படைகளிடம் சிக்கிவிடாமல் ஆப்கானிஸ்தானிலேயே எங்கோ ஓரிடத்தில் தலைமறைவாக இருக்கும் பின்லேடனின் இந்த எச்சரிக்கை, அல்-ஜஸீரா தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இரண்டு நிமிடங்கள் மட்டுமே திரையில் தோன்றி இந்த எச்சரிக்கையை அவர் விடுக்கிறார். எப்போது, எங்கே, யாரால் இந்த எச்சரிக்கை பதிவு செய்யப்பட்டது என்று தெரியவில்லை.

அப் பேச்சைக் கவனித்தால் அவருக்கு உடல் நலம் சரியில்லை என்றோ, தடையின்றிப் பேசும் சூழ்நிலையில் அவர் இல்லை என்றோ நினைக்கத் தோன்றுகிறது. குரல் அவருடையதுதான் என்று அவரைத் தெரிந்தவர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். பேசும் பாணியும், பேச்சும் அவருடையதுதான் என்பதை ஊர்ஜிதம் செய்கிறது. எனவே ஒளிப்படத்தைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. லேடன் இன்னமும் உயிருடன் இருப்பதை இது ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறது.

எச்சரிக்கை என்ன?? "அமெரிக்க மக்களுக்கு இச் செய்தியை விடுக்க ஆசைப்படுகிறேன். நியாயம் தவறாமல் நடப்பவர்களுக்கு என் வாழ்த்துகள். அநீதியையும் குற்றச் செயல்களையும் எதிர்த்து, நியாயத்துக்காகப் போராடும் இஸ்லாமிய நெறியைப் பின்பற்றுமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன், அறிவுரை கூற ஆசைப்படுகிறேன்.

**"நியாயம் தவறாமல் நடப்பவர்களுக்கு என் வாழ்த்துகள்"**

நீங்கள் கடந்த காலங்களில் செய்த தவறுகளுக்குத் தண்டனை தான் நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் செப்டம்பர் 11- ஆம் தேதி நாங்கள் நடத்திய தாக்குதல்கள் என்பதை உணருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் வெள்ளை மாளிகையில் உள்ள கிரிமினல் பேர்வழிகளும், யூதர்களின் ஏஜெண்டுகளும், முஸ்லிம் நாடுகளைத் தாக்கத் திட்டமிட்டு வருகின்றனர். கடந்த காலச் சம்பவங்களிலிருந்து அவர்கள் பாடம் ஏதும் கற்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

அல்லாஹ்வைச் சாட்சியாக வைத்து எச்சரிக்க விரும்புகிறேன். இந்தப் பதற்றத்தைக் குறைக்கவோ, நீக்கவோ நீங்கள் முன்வராவிட்டால், இறைவனின் சித்தப்படி உங்களுக்கு உரிய வகையில் பதிலடி தர நாங்கள் தயார். உங்களுடைய மனங்களில் நிரந்தர பயத்தை ஏற்படுத்துவதற்காக இஸ்லாமிய இளைஞர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

அநீதியையும் பகைமைப் போக்கையும் கைவிடும் வரையில், உங்களுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தும் வகையில் இலக்குகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் தாக்குவார்கள்" என்று எச்சரித்திருக்கிறார் பின்லேடன்.

### அல் ஜஸீரா உறுதி

"ஞாயிற்றுக்கிழமை மாலை செய்தி ஒளிபரப்பு நேரத்துக்கு 2 மணி நேரத்துக்கு முன்னால் எங்களுக்கு லேடனின் இந்தச் எச்சரிக்கை அடங்கிய ஒளி நாடா கிடைத்தது. அது 2 நிமிடங்கள் மட்டும் ஓடும் அளவு நீளம் உள்ளது. அது போலி அல்ல என்று உறுதியாகத் தெரிந்ததால் ஒளிபரப்பினோம்" என்று அல் ஜஸீரா தொலைக்காட்சியின் தலைமை ஆசிரியர் இப்ராஹிம் ஹிலால் தெரிவித்தார்.

# வியட்நாம் காதல் மன்னனுக்கு 16 மனைவிகள், 86 குழந்தைகள்

ஒரு மனைவியுடன் குடும்பம் நடத்துவதே ஆண்களுக்குப் பெரிய விடயமாக இருக்கும் இக் காலத்தில் வியட்நாமைச் சேர்ந்த வீடுகட்டும் தொழிலாளிக்கு 16 மனைவிகளும் 86 குழந்தைகளும் உள்ளனர்.

அவர் பெயர் டிரான் வியட்சூ (75). வேலையிலிருந்து ஒய்வு பெற்றுள்ள அவர் தற்போது 2 வது மனைவியுடன் வசித்து வருகிறார். இப்போதும் அவருக்கு 10 தோழிகள் இருக்கிறார்களாம்.

17 வயதில் அவருக்கு முதலாவது திருமணம் நடந்தது. 10 ஆண்டுக்குப் பிறகு அவரது மனைவி இறந்துவிட்டார். இதையடுத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். பின்னர் திருமணம் செய்வதே அவருக்கு வேலையாகிவிட்டது. தொழில் விடயமாக பல்வேறு ஊர்களுக்குச் சென்ற அவர், அந்தந்த ஊரில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

இப்படி 16 பெண்களைத் திருமணம் செய்து கொண்ட போதிலும், அவர்களைத் தவிர ஏராளமான பெண்களிடம் உறவு வைத்திருந்தாராம்.

"எனது சுபாவத்தை என்னால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. அழகான பெண்ணைப் பார்த்தால் என்னால் ஆசையை அடக்க முடியாது. இந்தக் கெட்ட பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று ஆயிரக் கணக்கான முறை முயன்றும் தோற்றுவிட்டேன்" என்கிறார் டிரான் வியட் சூ.

# 400 ஆண்டுகளுக்கு முன்னர் ஜிப்ரால்டரில் மூழ்கிய கப்பலில் இருந்து தங்கத்தை மீட்க உடன்பாடு

மத்திய தரைக் கடல் பகுதியில் ஜிப்ரால்டர் நீரிணைப் பகுதியில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய கப்பலில் இருந்து தங்கத்தையும் வெள்ளியையும் மீட்பதற்குப் பிரிட்டனும்அமெரிக்காவைச் சேர்ந்த ஒடிசி நிறுவனமும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

பிரிட்டனுக்குச் சொந்தமான இந்தப் போர்க் கப்பல் 1694- ஆம் ஆண்டு கடலில் மூழ்கியது. அதில் பயணம் செய்த 500 பேர் உயிரிழந்தனர். இக் கப்பலில் ரூ.40 ஆயிரம் கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டுக்கு எதிரான போரில் தனது கூட்டாளியாகச் செயற்பட்ட ஸ்பெயின் நாட்டுக்கு இந்தத் தங்கத்தையும் வெள்ளியையும் பிரிட்டன் அனுப்பியிருந்தது. ஆனால், நடுவழியில் அக் கப்பல் கடலில் மூழ்கிவிட்டது.

இக் கப்பலில் உள்ள கோடிக் கணக்கான மதிப்புள்ள தங்கத்தையும் வெள்ளியையும் மீட்க ஒடிசி நிறுவனம் 20 ஆண்டுகால ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் அர்சுடன் செய்து கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டு இப் பணியைத் தொடங்க ஒடிசி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மீட்கப்படும் தங்கம் மற்றும் வெள்ளியைப் பங்கிட்டுக் கொள்ள இந்த உடன்பாட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஒடிசி நிறுவனம் முதற் கட்டமாக 50 கோடியைச் செலவிட முன் வந்துள்ளது.






## தவறிவிட்டதே...

சீனப் பெருஞ்சுவரில் இடைக்கிடையே கோபுர வடிவிலான உயர்ந்த இடங்கள் காணப்படுகின்றன. அத்தகைய இரண்டு கோபுரங்களுக்கு இடையிலான பகுதியைத் தனது சைக்கிளில் பறந்து கடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் இந்த சீன சைக்கிளோட்ட வீரர். அவரது முயற்சி பலனளிக்கவில்லை. சுமார் 50 மீற்றர் உயரத்திலிருந்து சைக்கிள் வேறாகவும், வோங் ஜியாங் ஷிங் என்ற வீரர் தனியாகவும் நிலத்தில் வீழ்கின்ற காட்சி இது. இந்த வீரர் படுகாயமடைந்தார்.

# தகவல் பெட்டி

## நெஞ்சுறுதி

பெண்கள் என்றால் மிகவும் மென்மையானவர்கள் என்ற அபிப் பிராயத்தை முற்றிலும் தப்பான அபிப்பிராயம் என்று உறுதிப் படுத்தியிருக்கிறார் தாய்லாந்தைச் சேர்ந்த புவாக் பாக்கா சோக் ஸ்ரீ என்ற இந்த 21 வயது யுவதி. தனது 'நெஞ்சுறுதியை' இவர் நிரூபித்த விதம் மிக ஆபத்தானது. ஆணியடிக்கப்பட்ட பலகை ஒன்றின் மீது சாய்ந்துகொண்டு கொங் கிரீட் கற்களைத் தன் மார் பின் மீது வைத்து உடைத் தெறிகிறார் சோக் ஸ்ரீ.




## மரக்கறித் திருவிழா

தாய்லாந்தில் மரக்கறித் திருவிழா என்ற ஒரு வித்தியாசமான திருவிழா இந்த நாட்களில் நடைபெறுகிறது. மரக்கறி வகைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்ட விதம் விதமான உணவுப் பொருட்கள், பச்சை மரக்கறிகளை வெட்டி அழகுபடுத்தப்பட்ட டிசைன்களில் சுவையான உணவுகள் பாங்கொக் வீதிகளெங்கும் தாராளமாக விற பனைக்கும் காட்சிக்குமாக வைக்கப்பட்டுள்ளன. பாங்கொக் சுப்பர் மார்க்கட் ஒன்றில் சோயா பீன்ஸ்ஸினால் தயாரிக்கப்பட்ட விசேட தாய்லாந்து கேக் ஒன்றை ஊழியர் ஒருவர் அழகுபடுத்துவதையே காண்கிறீர்கள். 350 கிலோகிராம் எடையுள்ள இது 16 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

## சரிவு

தெற்கு ரஷ்யாவில் உள்ள கர்மதோன் என்ற கிராமம் பனி மலை ஒன்று சரிந்ததனால் முற்றாக மூடப்பட்டது. எப்பொழுதும் மைனஸ் பாகை செல்ஸியசிலேயே வெப்பநிலை காணப்படும் இந்தக் கிராமத் தின் மத்தியிலிருந்த மலை கடந்த 21 ஆம் திகதி இரவில் ஊர் உறங்கிக் கொண்டிருந்த சமயம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து முழு ஊரையுமே மூடிக் கொண்டது. பாரிய பனி மலையால் கிராமம் மூழ்கடிக்கப்பட்ட போது அங்கிருந்த நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இரண்டு நாட்களாக நடத்தப்பட்ட மீட்புப் பணியில் 30 பேர் மாத் திரமே உயிருடன் மீட்கப்பட்டார்கள். பனிமலை சரிந்து கிடப்பதையும் தனது உறவினர்களை இழந்த சோகத்தில் கண்ணீர் வடிக்கும் ஒரு பெண்மணியையுமே இங்கு காண்கிறீர்கள்.









சூர்யா-சிம்ரன்

## இந்திரனில் சிரஞ்சீவி

காசியில் ஒரு சாதாரண டாக்ஸி டிரைவர் இந்திரன். இந்திரனின் அக்கா மகளும் உத்திரப் பிரதேச மாநில ஆளுநரின் மகளும் ஒரே கல்லூரியில் படித்து வந்தனர். இருவரும் நெருங்கிய தோழிகள். இந்தப் பழக்கத்தில் ஒரு முறை இந்திரனைப் பார்த்த ஆளுநரின் மகள், அவனுடைய அழகில் மயங்கினாள்.

இந்த நிலையில் இந்திரன் தன் அக்கா மகளை மணக்க முடிவு செய்தான். எண்ணியபடி திருமணமும் நடந்தது. மின்னல் வேகத்தில் அங்கு வந்த ஆளுநரின் மகள், மணமேடையில் இருந்த வாலிபனை சொடுக்குப் போட்டுக் கூப்பிட்டு, தன்னுடன் வரும்படி அழைத்தாள். உடனே அவன் எந்த வித மறுப்பும் சொல்லாமல் அவளுடன் மந்திரத்தில் கட்டுப்பட்டவனைப் போல சென்றான். மணவிழாவுக்கு வந்திருந்த அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

'இந்திரன்' படத்தில் இடம்பெறும் காட்சி இது. இதில் இந்திரனாக சிரஞ்சீவியும் ஆளுநரின் மகளாக சோனாலி பிந்த்ரேயும் நடித்துள்ளனர். வி. கல்யாண்பாபு தயாரிப்பில் உருவாகியுள்ள இப் படத்தை பி.கோபால் இயக்கியுள்ளார்

## அமீர்கானின் மன்மத ...

'மிஸ்டர் பர... களில் சிக்காத ... வதுண்டு. ஆனா... வேறுவிதமாகத் திரு... அமீர்கானின் மனைவி ... விட்டுப் போய் விட்டாராம்...

அமீர்கானின் மன்மத... தானாம். யார் அந்த இ... பெண்? முதலில் மம்... கரனி. அதன் பிறகு '... அவருடன் நடித்த பிரிட... ராக்சல் ஷெல்லி ... ஆஸ்கார் விருதுக்கு ... போது ஷெல்லியுடன் ... சுழன்று இறங்கியிருக்கிறா... சாப். அதன் பிறகு ராணி... இப்போது ... காண்டிராக்டர் ... 'தில் சாத்தா ... படத்தில் அமீர்கானின் 'ஸ்டைலிஸ்ட்டாக' ஒப்பந்தமானார். அதாவது ... முடி, முக ஒப்பனை, உடை முதலியவற்றைக் கவனித்துக் கொள்வார். அந்தப் பெண்ணின் ஸ்டைல் ரொம்ப பிடித்துப் போய் விட்டதாம் இவருக்கு.

## சாணக்கியமான... ஷா...

சினிமாவில் நடிகையாகக் களமிறங்குகிறவர்கள் தொழில் இரகசியம் உணர்ந்து துணிவோடு செயற்பட்டால் வெகு விரைவாக வெற்றி பெற்றுவிடலாம்...இந்தத் தாரக மந்திரத்தை நன்றாகக் கற்றிருக்கிறார் விளக்குத் திரியைத் தனது பெயருக்கு முன்னால் வைத்திருக்கும் 'ஷா' நடிகை.

மாடலிங் செய்து வந்த இவர் சினிமாவிற்குப் புதுசு என்றாலும் ஒரு நடிகை என்ன வித்தை செய்தால் காரியம் கைகூடும் என்பதில் கில்லாடியாக இருக்கிறார். இல்லாவிட்டால் முதல் படமே இன்னும் வெளிவராத நிலையில் அந்தத் தயாரிப்பாளரையே அன்பு வலையில் விழ வைக்க முடியுமா?

வடஇந்தியத் தயாரிப்பாளர் தயாரிக்கும் படத்தில் 'நம்பர் ஒன்' படத்து நாயகனின் ஜோடியாக நடிக்கும் இந்த 'ஷா' ஆரம்பத்திலேயே தூண்டில் போட ஆரம்பித்து விட்டாராம். முதல் படம் என்றாலும் பந்தாவிற்கு ஒன்றும் குறை வைக்கவில்லையாம். இப்போதே நம்பர் வன் நடிகை ஸ்டைலில் ஏக கெடுபிடி எல்லா தடவடிக்கைகளுக்கும் காரணம் தயாரிப்பாளரைத் தன் பிடிக்குள் வைத்திருப்பதுதானாம். மெயின் ஸ்விட்சையே ஷா தனது கைக்குள் வைத்திருப்பதால் இவரது ஆட்டத்தை ஷூட்டிங் ஸ்பாட்டில் யாருமே கண்டு கொள்வதில்லையாம்.

தயாரிப்பாளரும் நடிகையும் ரொம்பவே நெருங்கிவிட்டதால் சமீபத்தில் ஜாலியான ஃபாரின் டிரிப் கூட அடிக்கப்பட்டது. அந்த வெளிநாட்டுப் பயணம் தனிப்பட்ட முறையில் இருந்தால் சந்தேகம் வந்து விடும் என்பதற்காக 'ஸ்டார் நைட்' நடத்துவதற்காகச் சென்ற நட்சத்திரக் கூட்டத்தோடு தயாரிப்பாளரும் ஷா நடிகையும் கூட்டணியாக ஒட்டிக் கொண்டார்களாம். ஸ்டார் நைட்டில் நடிகையின் நடனமும் இடம்பெற்றது. இவர்கள் இருவரும் போய்க் கூத்தடித்து வந்த மொத்தச் செலவையும் தயாரிப்பாளர் தனிப்பட்ட முறையில் செய்தாராம்.

தயாரிப்பாளரின் அடுத்தடுத்த படங்களிலும் தனக்கே வாய்ப்புத் தரப்பட வேண்டும் என ஷா அன்பு மிரட்டல் விடுத்துள்ளாராம். மேலும் பீல்டிலிருக்கும் இளைய நட்சத்திரங்களுக்கெல்லாம் ஸ்டார் ஹோட்டல் அழைப்பு மூலமாகத் தூதுவிட்டுக் கொண்டிருக்கிறாராம். 'ஷா'வின் இலட்சியமெல்லாம் நம்பர் ஒன் இடத்தைப் பிடிப்பதுதானாம். அதற்காக எல்லா வித்தைகளையும் செய்யத் தயாராக இருக்கிறார்.



கிரண்



காயத்ரி ஜெயராம்

## சிநே...

## சளைக்காமல் ஆடும் கனிஷ்கா

நடிக்க வந்துவிட்ட கனிஷ்காவுக்கு 'ஜங்ஷன்' படத்திலும் நடிகை வேடம்தான். அதனால் படத்தில் நிறைய நடனமாட வேண்டியிருந்ததாம். சளைக்கவில்லையாம் அவர். எப்பேர்ப்பட்ட மூவ்மெண்டாக இருந்தாலும் ஒரே டேக்கில் ஓ.கே. செய்து அசத்தியவர், டைரக்டர் வாயால் 'அடுத்த சிம்ரன்' என்று பெயர் வாங்கியிருக்கிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

**கி**ராமத்தாரை மணந்து, இப்போது பிரிந்து வாழும் அந்த மூன்றெழுத்து நடிகை, தற்போது தனக்குக் கார் ஓட்டிய அந்தப் பிரமுகரைத் துணையாக்கிக் கொண்டாராம். இதைக் கேள்விப்பட்ட பெற்றோர்கள் நடிகையிடம் மல்லுக்கு நிற்க அவரோ, "நான் எடுத்த முடிவை மாற்ற மாட்டேன்" என்று கூறி விட்டாராம். பெற்றோர்களும், பெற்றதும் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள்.

**தே**வமயமான நடிகையின் தம்பி ஹீரோவாக ஆனதைக் கேள்விப்பட்டதிலிருந்தே மூன்றெழுத்து துபாய் நடிகை தனது தம்பியை எப்படியாவது ஹீரோவாக்கிவிட வேண்டும் என்பதில் துடிப்பாக இருக்கிறார். இதற்காகப் பணத்தைத் தவிர என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறாராம். பல பட அதிபர்களிடம் பணிவாக வலை வீசி வாய்ப்புக் கேட்டு வருகிறார் அம்மணி.

**மு**ன்னாள் கவர்ச்சி ஆட்ட நாயகியான அனுவான ராதை தனது வாரிசான இளைய மகளை கேரக்டர் நடிகையாக்கும் ஆசையில் களமிறக்கினார். ஆனால் அந்த அபிக்கு எந்தப் படவாய்ப்பும் கைகொடுத்துத் தூக்கிவிடவில்லை. கவர்ச்சி காட்டவும் தயார் என்ற விதத்திலும் கிளாமர் ஸ்டில்கள் கொடுத்துப் பப்ளிசிட்டி செய்யப்பட்டது. ஆனாலும், நோ ரெஸ்பான்ஸ் இப்போது அம்மாவின் ஆலோசனைப்படி அபி மலையாளப் படங்களில் படுகிளாமராகத் திறமை காட்டத் துவங்கியுள்ளார்.

**ச**ங்குவி நடிகை தெலுங்கில் பிஸியாக இருப்பதால் தமிழில் வருகின்ற ஒன்றிரண்டு துக்கடா கேரக்டர்களை வேண்டாம் என மறுத்து விடுகிறார். பழக்கப்பட்டவர்கள், பழைய விட்டகுறை தொட்ட குறை என அன்பானவர்களின் அழைப்பிற்கு மட்டும் திறமை காட்டச் சம்மதிக்கிறார்.

...லகள்
...செகிகக
...சொல
...கதை
...றது.
...விட்டு
...ணம்?
...ன
...ாகு
...ல்
...டிகை
...வக்கு
...ந்த
...ாய்ச்
...கான
...கர்ஜி.
...ன
...இவர்

## ஸ்ருதி நடிக்கும் 'பாபி'

'வள்ளி' படத்தில் ஹீரோவாக நடித்திருந்த சஞ்சய், ஆதித்யா என்ற பெயர் மாற்றத்துடன் நடிக்கும் படம் 'பாபி'. இவருக்கு ஜோடியாக முன்னாள் மிஸ் சென்னை ஸ்ருதி நடிக்க, இரண்டாவது நாயகியாக புவனேஷ் சௌத்ரி நடிக்கிறார். 'தனியே தன்னந்தனியே' படத்தில் ஹீரோவாக நடித்துள்ள அஜய், இதில் வில்லனாக நடித்துள்ளார். கடந்த ஆகஸ்ட் இருபத்திரண்டாம் தேதி ஆரம்பித்த இதன் படப்பிடிப்பு முடியும் தருவாயில் உள்ளது. இந்தப் படத்தை எம்.வி. கோபால்ராம் இயக்குகிறார்.

## நாயகியாக ரிங்ஜிங்

'குருதேவா' என்ற படத்தில் ஆக்ஷன் கேரக்டரில் நடிக்கிறார் கார்த்திக். இவருக்கு ஜோடியாக மும்பையில் இருந்து ஒரு புதுமுகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். பெயர் 'ரிங்ஜிங்'. ஏதோ சீனத்து நகரம் மாதிரி இல்லை? ஒரு நல்ல தமிழ்ப் பெயர் வைக்கக் கூடாதா?

## தெய்வீகக் காதலைச் சொல்லும் 'திரிநேத்திரம்'

முக்கோணக் காதல், பகவான் மகா விஷ்ணுவின் அவதாரங்களின் ஒன்றான நரசிம்மசாமி, அங்காளம்மன் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள படம் 'திரிநேத்திரம்'. இந்த மூன்றையும் இணைத்து இதுவரை எந்தப் படமும் வெளிவந்ததில்லை என்கிறார் கோடி ராமகிருஷ்ணா. (அடர்) அங்காளம்மன் ஒன்பது தேவதைகளை அழைத்து ஆராதனை நடத்தும் காட்சி தாய்மார்களைப் பக்திக் கடலில் மூழ்க வைத்து விடுமாம். படம் முழுவதும் கிராஃபிக்ஸ் காட்சிகள் பஞ்சமின்றி இடம் பெற்றுள்ளன. இதற்காக ஆறு மாதங்கள் செலவிட்டார்களாம். தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் உருவாகிய இந்தப் படம் செப்டம்பர் இறுதியில் திரைக்கு வருகிறது.



விக்ரம் - அனிதா
படம்: சாமுராய




காயத்ரி ஜெயராம்

## ...ாவின் காதல்

சிநேகாவால கவரப்பட்டவர்கள் நிறையப் பேர் இருந்தாலும் சிநேகாவை கவர்ந்தவர் ஸ்ரீகாந்த் ...மிழ் சினிமா வட்டாரங்களில் இப்போது பேசப்படும் லேட்டஸ்ட்டான கிசு கிசு ... காயம் பட்டு மருத்துவமனையில் இருந்த போது சுகம் விசாரிப்பதில் ஆரம் ...லை நோக்கி வேகமாக வளர்கிறது என சினிமா வட்டாரங்களில் பேசப்படு ...த்தில்' படப்பிடிப்பின்போது கிடைக்கும் இடைவெளிகளை இருவரும் நன்றா ...ன்றனர். சிரித்துப் பேசுவதும் கொஞ்சிக் குலாவுவதுமாக நேரம் கழிகிறது. ...என்ற முடிவுக்கு வர வேண்டாம் என இரண்டு தரப்பாரும் பத்திரிகைகளுக்குக் ...ன்மையில் சிநேகாவுக்கு ஸ்ரீகாந்த் மீது காதல் பற்றிக் கொண்டது என்று ...லவர்கள் கூறுகிறார்கள்.

## மினி சினி

* நடிகை லைலா இனிமேல் சினிமாவில் நடிக்கமாட்டார் என்று கூறுகிறார்கள். மும்பையில் 'குடித்தனத்தைத்' தொடரப் போய்விட்டதாகத் தெரிகிறது.

* காவிரிப் பிரச்சினையால் தங்களுக்குப் பாதிப்பு வருமோ என்று கன்னட நடிகர்களான அர்ஜுன், முரளி, ரமேஷ் அரவிந்த், பிரகாஷ் ராஜ், பிரபு தேவா உள்ளிட்டோர் மிகவும் கலக்கத்தில் உள்ளனர். தங்களுக்கெல்லாம் தலைவர் நடிகராக உள்ளவரை இரகசியமாகச் சந்தித்து நேரிலேயே பேசினர். அவர் ஆறுதல் கூறி அனுப்பி வைத்துள்ளார்.

* பானுப்பிரியாவைக் காணவில்லை என்று கலங்கிக் கொண்டிருப்பவர்கள் கவனத்திற்கு... அவர் இப்போது இந்தியாவிலேயே இல்லை. கணவருடன் சந்தோஷமாக அமெரிக்காவில் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார்-வயிற்றில் குட்டிப் பாப்பாவுடன்.

* நடிகை கஜாலாவின் அப்பா ஒரு கார் டிரைவர். துபாயில் உள்ள ஒரு நிறுவனத்தில் கார் ஓட்டி வருகிறார்.

* டி.வி. பிரபலம் புவனேஸ்வரியின் வீட்டில் தினசரி பார்ட்டி நடக்கிறதாம். அடிக்கடி சினிமா பிரபலங்களைப் பார்க்க முடிகிறது.


* கரீனா கபூரின் சுழலும் கண்கள் இப்போது சுழன்று சுற்றி வருவது ஃபர்தீன் கான் மீதுதானாம். இருவரும் சேர்ந்து தொடர்ந்து நைட் கிளப்புகளில் இணைந்து, பிணைந்து குஷியாக இருக்கிறார்களாம். (பார்த்தவர்கள் சொல்கிறார்கள். அதாவது பார்க்க முடிந்தவரை பார்த்து விட்டு)

* ஒரு லவ் லெட்டரை மையமாக வைத்து எடுக்கப்படும் படம் 'லவ் லெட்டர்' இதில் ராஜேஷ், கீதா எனும் புதுமுகங்கள் நடிக்க, ஏ.பி. என். துரைராஜ் இயக்குகிறார்.

* குறைந்தது நான்கு ஹிட் படங்களைக் கொடுத்த பிறகே மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது என்ற முடிவிலிருக்கிறார் அஜீத்.

* 'பாபா' படம் ப்ளாப் ஆனதால் நடிகர் சங்கத்தில் பல நடிகர்கள் சேர்ந்து கிரேட் பார்ட்டி நடத்தியிருக்கிறார்கள். அவர் நடிச்சா ஹிட்தான் என்ற நிலை மாறி, ரஜனியும் தங்களுடன் சேர்ந்து கொண்டதுதான் கொண்டாட்டத்திற்குக் காரணமாம்.

* ஃபிலிம்ஃபேர் பத்திரிகைக்குக் கொடுத்துள்ள பேட்டியில், "புகழோடு இருப்பவன் என்பதால் எனக்கு இரண்டு பிறப்பு உறுப்புகள் கிடையாது. 47 வயதாகிவிட்ட நான் இப்பொழுது மணப்பெண் வேட்டைக்குப் போகப் போவதுமில்லை" என்று கமல் தன்னிலை விளக்கமளித்துள்ளார்.



ரோஜா

## ...முகப்பில்

ஸ்நேகா

ஷாம்

## மனிஷாவுக்குக் காயம்

மும்பையில் புதன்கிழமை நடைபெற்ற ஹிந்தித் திரைப்படப் படப்பிடிப்பின்போது காலில் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் பிரபல நடிகை மனீஷா கொய்ராலா. 'பைசா வசூல்' என்ற ஹிந்திப் படத்தின் படப்பிடிப்பு மும்பை சாண்டிவாலி படப்பிடிப்பு நிலையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. குதிரை வண்டியில் செல்வது போன்ற காட்சியில் மனீஷா கலந்துகொண்டு நடித்தார். அப்போது அதிலிருந்து தவறி விழுந்ததில் அவரது காலில் காயங்கள் ஏற்பட்டன.



பிரசாந்த்

## புரியவில்லை..!

சுற்றும் சுடர் விழியினால்- எனை
சுட்டுவிட்ட ஆன்மாவே...!
கூர்மையான பார்வையினால்,
குதறுவதுதான் நியாயமா...?
***
பார்வை மட்டுமா வதைக்கிறது- இல்லை,
உன் உருவமே வதைக்கிறதே...
செயல்களிலே புது அர்த்தங்கள்...
சொற்களிலே உன் வாள் வீச்சுக்கள்...!
***
கார்மேக முடிவரிகள்...
வானவிற் புருவங்கள்...
வானத்து முழுநிலவை,
வர்ணிக்கும் வதனம்...!
***
பனித்துளி பூத்து நிற்கும்,
பசுமையான பூக்களாய்,
பவளக் கன்னத்தின்,
பருவப் பருக்கள்...!
***
சிவந்த ரோஜா இதழாய்,
சிருங்கார இதழ் வளைவு...
மெல்லென மலரும் மொட்டாய்,
சாந்திதரும் புன்னகை...!
***
பச்சரிசிப் பல்லழகு,
மாந்தளிர் மேனி நிறத்தழகு...
மஞ்சள் வண்ணக் கால்கள்...
அதன் மேற் படரும் முடிவரிகள்...!
***
சில்லிட வைக்கும்,
சிரிப்பொலி...
கோபிக்கும் வேளையில்,
சோபிக்கும் உன்,
சிவந்த கன்னங்கள்...!
***
நேரான தோற்றத்தை,
சீராக்கும் கூர்மூக்கு...
காண்போரை கவர்ந்திழுக்கும்,
கட்டழகு மேனி...!
***
வாஞ்சை மொழி பேசும்,
வசீகரமே...!
வந்தென்னை வாட்டும்,
காரணம்தான் என்ன...?

றோஸ், பருத்தித்துறை.

## தன்னிலைவாதிகள்

அப்படியொரு கோடு
இப்படியொரு கோடு
இதுதான் சித்திரம்
இடித்துச் சொல்வேன்
இதுதான் சித்திரம்
***
அப்படி அது இருந்தாலும்
இப்படி....அப்படி....இருக்காது.
எப்படி... எப்படி... தெரியுமா?
அது...இப்படி...இப்படித்தான்
நடந்திருக்கும்.
***
என்னதான் நீங்கள்
செய்தாலும்
இது போல அது இல்லை
எப்படித்தான் நீங்கள்
முயன்றாலும்
இது போல அது வராது...
***
இல்லை...இல்லை...
அப்படி இல்லை...
நீங்கள் சொல்லுவது
சரி இல்லை
அப்படி... நடக்க
சந்தர்ப்பமே இல்லை...
***
இவர்களை விடுங்கள்
தன்னிலை வாதிகள்
நான் பிடித்த முயலுக்கு
மூன்று கால் பேர்வழிகள்-

ஒலுவிலூர் ஷிபானி.

## பேனா நண்பர்கள்



பெயர்: S.T.YOOSUF
வயது: --
முகவரி:
P.O.BOX # 1679
BURAYDAH
K.S.A
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.



பெயர்: S.M.JAZEER
வயது: --
முகவரி: J.A.V.WADY
NEW JETTY STREET,
KALPITIYA.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: R.ராஜா
வயது: 23
முகவரி: இல. 28,
மைந்தாராம ரோட்,
கல்கிசை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி
கேட்டல், ரி.வி. பார்த்தல்

## சபிக்கப்பட்ட பெண்மை இவள்!

சந்தோசங்களின் வாசமறியா
தென்றல் இவள்!
சந்தங்கள் சேராத
கவிதை இவள்!
சாப விமோசனம் அடையா
பாவப் பெண் இவள்!
சபிக்கப்பட்ட பெண்ணும்
இவளே!
❖❖❖
சுற்றம் உரைத்த சொல்லில்
சுருங்கிப் போனவள்!
அச்சம் கொண்டு நித்தம்
அடங்கிப் போனவள்!
ஏற்றம் இல்லை இனி
இவள் வாழ்வில்!
வெளியேற்றம் காணாது இனி
இவள் உணர்வுகள்!
❖❖❖
கட்டிக்காத்த ஆசைகள் யாவும்
காணாமல் போயின இவள் வாழ்வில்!
சட்டம் போட்ட விதிகள் யாவும்
அழிந்து போயின இவள் வழக்கில்!
கண்டு களித்த கனவுகள் அத்தனையும்
கலைந்து போயின இவள் துயிலில்!
கரையென்பதைக் காணாது
தத்தளிக்கும் ஓடமும் இவளே!
❖❖❖
தலைகுனிந்து வாழும் இவளும்
தரமானவள் தான்!
விலை மதிப்பில்லாத
விசித்திரப் பெண் தான்!
கலை கொண்டு மிளிரும்
கவர்ச்சியான வதனம் தான்!
இனி இல்லை இவள் வாழ்வில்
இன்பம் தான்!
❖❖❖
சொத்தென்பதற்கு எதுவுமில்லை.
தங்கமான குணமுண்டு!
சொந்தம் என்பதற்கு யாருமில்லை.
அநாதை தான்!
சொகுசு வாழ்க்கை வாழாத
ஏழைதான்!
சொர்க்கம் காணாத
துன்பப் பிறவியும் இவளே!
❖❖❖
ஊனம் என்பது இவள்
உள்ளம் தனில் இல்லை!
உணர்வென்பது என்றோ
உறைந்து விட்டது.
பொறுமையில் பூமியை
மிஞ்சியவள்!
சபிக்கப்பட்ட பெண்மையில்
தலை சிறந்தவளும் இவளே!

பா. சுபாஜினி, பொத்துவில்.

## பாவையவள் பாதையோரம்

என் சாலையோரம்
இரவுகளே நிர்மலமாகி
இதயமே
எனை அழைத்துச் செல்கிறது
❀❀
என் பாவையவள்
பவனிவந்த
அந்த ஓரிரு வினாடிகளில்
எனக்குள்
கற்பனைகள் தளிர்விட்டு
விருட்சமாகின...
❀❀
என்
பாசைகளெல்லாம்
கணப் பொழுதில்
ஓய்வெடுத்துக் கொண்டது...
❀❀
ஓரவிழிப் பார்வையினை
என் மீது
வீசுவாளென
பாதை பார்த்துக் காத்திருந்தேன்
அவளோ
ஓரமாகி விலகிச் சென்றாள்...
❀❀
ஆலையிட்டு அரைத்தெடுத்த
செங்கரும்பாய்- என்
இதயமும்
சக்கையாகிப் போயின...
❀❀
அவள் சென்ற
அந்த நிமிடங்களே
எனை
வதைத்தெடுத்து
விலகிச் சென்றது...
❀❀
இதயத்திலோர் மூலையில்
ஜனனித்த
வார்த்தைகள் அப்போது
மரணித்துப் போனது
❀❀
தூக்கம் பிடிக்காமல்
துக்கதினம் அனுஷ்டிக்கிறது
என் கண்கள்
தூரமான - என்
காதலை எண்ணி
❀❀
கண்ணீர் துளிகளுக்குள்ளும்
நிழல்கள் நடமாடினாலும்
நிஜங்களோ
உறங்கி நாளாகி விட்டது.

எஸ்.சித்திக், அட்டாளைச்சேனை-08.

## என் காதலிக்கு இதயம் மட்டும்தான் இல்லை!

பெண்ணே! உன் அழகை
இவ்வுலகம் ரசித்தற்காக
பிரம்மனிடம் ஒரு கடிதம்
அனுப்பியுள்ளேன்,
உன் அழகு சார்பாக:
உலகம் அழியும் காலத்தை
கொஞ்சம் நீடிக்கச் சொல்லி...!
❦❦
என்ன உலக ஆண் வர்க்கமே
சந்தோசமா?
இதைத்தானா? ஒரு கல்லில்
இரண்டு மாங்காய் என்பர்.
❦❦
கொவ்வைப்பழம் சிவக்க
விண்ணப்பிக்கும் தலைமைக்
காரியாலயம்- உன் இதழ்கள்!
அழகின் அரிச்சுவடியிலிருந்து
திருடப்பட்டவை உன் வதனம்!
சிவப்பின் அகராதிதான்
உன் மேனி!
பூக்களின் ஐஸ்கிறீம்
உன் கன்னங்கள்!
❦❦
உன் அழகை உலக
பெண்கள் எல்லோருக்கும்
பங்கு போட்டுப் பிரித்துக்
கொடுத்தாலும் மிகுதி
இருக்கும்!
❦❦
பெண்ணே உன் சிரிப்பை
ஒலிப்பதிவு செய்யும் அந்த
ஒலி நாடா கூட பிரம்மனுக்கு
நன்றி செலுத்த வேண்டும்!
❦❦
இன்று தெரிவாகும் உலக
அழகிகள் எல்லோரும்
நீ வசிக்கும் பக்கத்து
தேசத்தில்தான் வாழ்ந்திருப்பார்கள்
போலிருக்கிறது!
❦❦
இருந்தும் என்னை என்ன
செய்யச் சொல்லுகிறாய்?
உன்னை விட அழகிலும்,
அறிவிலும், அமைதியிலும்
பன் மடங்கு சிறந்தவள்
என் காதலி...!
ஆனால்- இதயம்
மட்டும்தான் அவளுக்கில்லை!

ஏ.எப்.எம். றியாட், முள்ளிப்பொத்தானை.

## தேன் கிண்ணம்

### மனிதர்கள்

நாளும் நேரமும்
நல்லதும் கெட்டதும்
பார்க்கும் புத்திசாலியான
முட்டாள்கள்
❦❦
மதமற்ற மதத்தினுள்ளும்
இனமற்ற இனத்தினுள்ளும்
தம்மை புகுத்திக் கொண்டு
வெளிவர முடியாமல்
திணறும் நேர்மையான
கொலையாளிகள்
❦❦
பேசாதவற்றை செய்து
கொண்டும்
செய்யாதவற்றை பேசிக்
கொண்டும்
திரிகின்ற இலட்சியமற்ற
இலட்சியவாதிகள்
❦❦
கொள்கையற்ற
கொள்கைகளுக்குள்
சிக்கி திரண்டெழும்
உணர்ச்சியுள்ள
உணர்ச்சியற்றவர்கள்
❦❦
நீதியான அநீதிக்குள்
புதைந்து கொண்டு
வாழ்க்கைச் சக்கரத்தில்
நீதி பேசும் நீதிபதிகள்
❦❦
செயலிலும் சொல்லிலும்
இணக்கப்பாடுள்ள
முரண்பாட்டாளர்கள்
❦❦
பிரபஞ்சத்தின் எங்கோ
ஓர் புள்ளியான
பூமியில் இருக்கும்
இவர்கள்- அமைதியான
குழப்பக்காரர்கள்
❦❦
மற்றவர் வாழ்க்கையை
தம் கையில்
எடுத்துக் கொள்ளும்
தண்டிக்கும்
மிருகத்தனமான
கடவுளர்கள்.

ஜெ. அபிராமி,
கல்முனை.

## நினைத்து, நினைத்து சிரிக்க

நண்பர்களான இரண்டு மேடைப் பேச்சாளர்களுக்கு ஒரு சந்தேகம். "நாம் இறந்த பிறகு போகவுள்ள ஆவியுலகத்திலும் இதேபோன்று பொதுக்கூட்டம், மேடை, உரை எல்லாம் நிகழுமா?"

இருவரும் எத்தனையோ புத்தகங்கள் படித்தும், யார் யாரிடமோ விளக்கம் கேட்டும் உறுதியான பதில் கிடைக்காததால் கடைசியில் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். "இருவரில் யார் முதலில் இறக்கிறாரோ அவர் ஆவியுலகம் சென்று வந்து மற்றவரிடம் இந்த விஷயம் பற்றி மறக்காமல் சொல்ல வேண்டும்" என்பது உடன்பாடு.

ஒரு பேச்சாளர் இறந்தார். மாதங்கள் ஓடின. "என்ன அவர் உடன்பாட்டை மறந்துவிட்டாரோ?" என்று இவர் யோசித்துக்கொண்டிருந்த போது, எதிரில் அந்த நண்பரின் உருவம் நிழலாடியது. அது சொன்னது, " நண்பா! நானேதான். நம் சந்தேகத்துக்கு விடை கிடைத்துவிட்டது. ஆவியுலகிலும் படுபந்தாவான பொதுக்கூட்டங்கள் நடக்கின்றன. பளபளவென்று போஸ்டர்கள் கூட அடிக்கிறார்கள்".

"அப்படியா?" வியந்தார் இவர்.

"ஆமாம், நாளைக்குக்கூட ஒரு கூட்டம் நடக்கிறது. அதன் சிறப்புப் பேச்சாளர் யார் தெரியுமா? நீதான்!

---

பாரீஸ்ல ஒரு பிரபு நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு பிச்சைக்காரன் அவர் எதிரில் வந்து "எனக்குப் பசிக்கிறது' ஏதாவது வாங்கிச் சாப்பிடக் கொஞ்சம் பணம் கொடுங்கள்" என்று கேட்டான்.

"நான் உனக்கு மது(ஒயின்) வாங்கித் தருகிறேன். சாப்பிடுகிறாயா?" என்றார் பிரபு.

"எனக்கு மது குடித்துப் பழக்கமில்லை"என்றான் பிச்சைக்காரன்.

"அப்படியானால்....நல்ல ரக சிகரெட் வாங்கித் தருகிறேன். பிடிக்கிறாயா?"

"எனக்குப் புகை பிடித்துப் பழக்கமில்லை"

"இன்று, ரேஸில் உனக்காகப் பணம் கட்டுறேன். ஆட வருகிறாயா?"

"எனக்கு சூதாட்டம் கட்டோடு பிடிக்காது. எனக்குச் சாப்பிட ஏதாவது கொடுங்கள் போதும்" என்று பரிதாபமாகக் கெஞ்சினான் பிச்சைக்காரன்.

அதற்குப் பிரபு, "அப்படியானால், என்னோடு என் வீட்டுக்கு வந்து சாப்பிடு. மது குடிக்கத் தெரியாத, புகைபிடிக்கத் தெரியாத, சூதாடத் தெரியாத ஒருவனுக்கு என்ன கதி நேருகிறது என்பதை.... என் மனைவி உன்னைப் பார்த்து தெரிந்து கொள்ளட்டும்" என்றார்.

---

திடீரென்று ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டது. வீதியில் நடந்து போன ஒருத்தர் உடனே வீட்டுக்குள் ஓடினார். அங்கே ஒரு பெண் அழுதபடி இருந்தா. இவரைப் பார்த்ததும் பக்கத்திலிருந்த தன் மகனைச் சுட்டிக் காட்டி "இவன் 25 சத நாணயத்தை விழுங்கி விட்டான்" என்று அழ இவர் உடனே முந்தானை முடிச்சு ஸ்டைல்ல அந்தப் பையனைத் தலை கீழா தூக்கி ஒரு தட்டு தட்டினார். உடனே சிறுவன் காசைத் துப்பி விட்டான்.

அந்தப் பெண் சந்தோஷமா சிரிச்சு, "ரொம்ப நன்றி. நீங்கள் நிச்சயம் பெரிய டாக்டராயிருக்க வேண்டும்" என்று சொல்ல,

அதுக்கு வந்தவர் "ஊஹூம் நான் சுங்க அதிகாரி" என்று சொன்னாராம்.

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக கவிஞர் பிரம்மராஜன் தொகுத்த 'உலக கவிதை' களிலிருந்து - கவிதை பற்றிச் சொல்லும் மூன்று கவிதைகள்.

### என் கவிதை

எதையும் விளக்குவதில்லை
எதையும் தெளிவிப்பதில்லை
எந்தத் தியாகங்களையும் செய்வதில்லை
எல்லாவற்றையும் கொண்டிருப்பதில்லை
எந்த நம்பிக்கைகளையும் நிறைவேற்றுவதில்லை

விளையாட்டின் புதிய ஒழுங்குகளை உருவாக்குவதில்லை
பொழுது போக்கில் எப்பங்கும் ஏற்பதில்லை
தான் நிறைவு செய்ய வேண்டிய
ஒரு தீர்மானித்த இடம் கொண்டிருக்கிறது
இது ஒரு ரகசிய மொழி இல்லையென்றால்
இது தனித்துவமற்றுப் பேசுகிறதென்றால்
இது ஆச்சர்யங்களை எதையும் கொண்டிருக்கவில்லை என்றால்
வெளிப்படையாய்
இப்படித்தான் விஷயங்கள் இருக்க வேண்டும்.

தன் சொந்தத் தேவைகளுக்குக் கீழ்ப்படிகிறது
அதன் வீச்சுக்கும் எல்லைகளுக்கும்
தனக்கு எதிராக தன்னையே தோற்கிறது
இது இன்னொரு கவிதையின் இடத்தைக் கைப்பற்றுவதில்லை
வேறு ஒன்றாலும் அதை ஈடு செய்ய இயலாது
எல்லோருக்கும் பொதுவாய்
மர்மங்கள் எதுவுமின்றி

இதற்குப் பல கடமைகள் உண்டு
அவை எதற்கும் இது என்றும் நியாயம் கற்பிக்க முடியாது.

-டேட்யூஸ் ரோஸ்விக்ஸ் (போலந்து)

### அப்படித்தான் அது இருக்க வேண்டும்

நோக்கமற்றும் அர்த்தமுள்ளதாகவும்
அது இருக்கவேண்டும்
நோக்கமற்றும் அர்த்தமுள்ளதாகவும்
அது வெளித்தோன்ற வேண்டும்
பெரும் அரண்மனைகளுக்கான செங்கல்கள் செய்யப்படும்
மண்ணிலிருந்து- ஒரு நாள் மீண்டும்
சரிந்து நொறுங்கி மண்ணாக

நோக்கமற்றும் அர்த்தமுள்ளதாகவும்
அது இருக்கவேண்டும்
எப்பேர்ப்பட்ட சகிக்க இயலாத படைப்பாய்
அது இருக்கக் கூடும்
அடக்குமுறைக்குச் சேவை செய்ய முடியாததாக
அடக்குமுறைக்கு வாதிடாததாக
எனவே நோக்கமற்றதாக
எனவே அர்த்தமுள்ளதாக

கவிதையைப் போல.

-குந்தர் கூனர்ட் (ஜேர்மனி)

### ஒரு கவிஞனுடன் ஒரு உரையாடல்

நீ ஒரு கவிஞனா?
ஆமாம்.
எப்படி உனக்குத் தெரியும்?
நான் கவிதைகள் எழுதியிருக்கிறேன்.
நீ கவிதைகள் எழுதியிருக்கிறாய் என்றால்
கவிஞனாக 'இருந்திருக்கிறாய்' என்று
தானே பொருள்? ஆனால் இப்போது?
நான் மறுபடியும் ஒரு நாள் ஒரு கவிதை எழுதுவேன்
அப்படியானால் மறுபடியும் ஒருநாள் கவிஞனாக இருப்பாய்
ஆனால் அது கவிதை என்று எப்படி உனக்குத் தெரியும்?
முந்தையதைப் போல அதுவும் ஒரு கவிதையாகத்தான் இருக்கும்.
அப்படியானால் நிச்சயமாக அது கவிதையாக இருக்காது.
ஒரு கவிதை ஒருமுறைதான் இருக்க முடியும்.
இரண்டாவது முறையும் அவ்வாறே இருக்க முடியாது.
அதே அளவுக்கு நன்றாக இருக்கும்.
என்று நான் நம்புகிறேன்.
எப்படி அது பற்றி நீ நிச்சயமாக இருக்க முடியும்?
ஒரு கவிதையின் தன்மையே கூட ஒரு முறைதான்
இருக்க முடியும். அதுவும் உன்னைச் சாராமல்
சந்தர்ப்பங்களைச் சார்ந்தே இருக்க முடியும்.
சந்தர்ப்பங்களும் அப்படியே இருக்கும்
என்று நான் நம்பகிறேன்.
அப்படி நம்புவாயானால் நிச்சயமாக நீ
ஒரு கவிஞனாக இருக்க முடியாது. எப்போதும
இருந்திருக்கவும் முடியாது. பிறகு நீ
ஒரு கவிஞன் என்று எப்படி எண்ணுகிறாய்?
அது- எனக்கு சரியாகத் தெரியவில்லை. அதுசரி,
நீ யார்?

-மிரஸ்லாவ் ஹோலுப் (செக்கோஸ்லோவாகியா)

# அமெரிக்க சிகரெட் நிறுவனத்துக்கு நீதிமன்றம் உத்தரவு 3 லட்சம் கோடி நட்ட ஈடு

நுரையீரல் புற்று நோயால் பாதிக்கப்பட்ட 64 வயதுப் பெண்ணுக்கு ரூ. 1.40 ஆயிர்ம் கோடி நட்ட ஈடு வழங்குமாறு அமெரிக்காவில் உள்ள பிலிப் மோரிஸ் சிகரெட் நிறுவனத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள பிரபல சிகரெட் தயாரிப்பு நிறுவனம் பிலிப் மோரிஸ். இந் நிறுவனம் பென்சன் ஹெட்ஜஸ், மார்ல் பரோ சிகரெட்டுக்களைத் தயாரித்து விற்று வருகிறது. இந் நிறு வனத்தின் சந்தை மதிப்பு 83 பில்லியன் டொலர்.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த பெட்டி புல்லக் என்ற பெண் 17 வயதில் புகைப் பிடிக்க ஆரம்பித்தார். குறிப்பாக பிலிப் மோரிஸின் பென்ஸன் அண்ட் ஹெட்ஜஸ் சிகரெட்டுகளையே அவர் விரும்பிப் புகைத்து வந்தார். இந் நிலையில் கடந்த 2001 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அவருக்கு நுரையீரல் புற்று நோய் ஏற்பட்டது, மருத்துவப் பரிசோதனையில் தெரிய வந்தது.

இதையடுத்து அவர் அந்தச் சிகரெட் நிறுனத்தின் மீது வழக்குத் தொடுத்தார். "சிகரெட் புகைப்ப தால் ஏற்படும் அபாயம் பற்றித் தனக்கு முன்கூட்டியே எச்சரிக்கப் பட வில்லை" என்று அப் பெண் கூறினார்.

சிகரெட் பிடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கு ஏற்படுத்தக் கூடியது என்பது அந்தப் பெண்ணுக்குத் தெரியும். மேலும் புகைப்பிடிப்பதை நிறுத்திவிடுமாறு அவரது மருத்துவரும், மகளும் அடிக்கடி வலி யுறுத்தி வந்துள்ளனர். ஆனால், புல்லக் அதைக் காதில் போட்டுக் கொள்ள வில்லை. "புகைப்பிடிப்பது எனக்குப் பழக்கமான ஒன்று. யாரும் எனக்கு அட்வைஸ் செய்ய வேண்டாம்" என்று கூறிவிட்டார். அதனாலேயே அவருக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்று நிறுவனத்தின் தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால், நீதிமன்றம் அதை ஏற்க மறுத்துவிட்டது. உடல் நலத்துக்குத் தீங்கு ஏற்படக் கூடிய பொருளைத் தயாரித்ததற்காக அப் பெண்ணுக்கு ரூ.1.40 ஆயிரம் கோடி நட்ட ஈடு தருமாறு உத்தரவிட்டது.

இதனிடையே இத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போவதாக பிலிப் மோரிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.இவ்வாறான தீர்ப்புகள் முன்னரும் அமெரிக்க நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட போதும் பின்னர் அவை மேல் விசாரணைகளின் போது நிராகரிக்கப்பட்டன.

# பணிப்பெண்ணை நிர்வாணப் படம் எடுத்தவருக்கு ஓராண்டு சிறை

பணிப்பெண்ணை நிர்வாணமாகப் படம் எடுத்த சிங்கப்பூர் வாசி டூடியன் கோவுக்கு ஒராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

25 வயதான அந்தப் பணிப்பெண் பிலிப்பின்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். குளியலறையில் இரு வீடியோ காமிராக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அவர் கண்டார். இதையடுத்து பொலிஸில் கடந்த ஆகஸ்ட் மாதம் புகார் செய்தார்.

வீட்டின் உரிமையாளர் டூடியன் கோவிடம் பொலிஸார் உடனடியாக விசாரணை நடத்தினர். அப்போது உண்மை வெளிப்பட்டது. ஆடையின்றி பணிப்பெண் குளிக்கும்போது அக் காட்சியை வீடியோ படம் எடுத்ததை வீட்டு உரிமையாளர் ஒப்புக் கொண்டார். சிங்கப்பூர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து டூடியன் கோவுக்கு ஒராண்டு சிறைத் தண்டனை விதித்தது. அத்துடன் 90 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது.

பிலிப்பின்ஸ், இந்தோனேசியா, இலங்கை, மியான்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் சிங்கப்பூரில் பணிப் பெண்களாக வேலை பார்க்கின்றனர்.


## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** An

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-10-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சல்வார்? இரத்தினபுரி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி இராமலெட்சுமி
4 ஏ, 5வது ஒழுங்கை, இரத்தினபுரி

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# நேற்றிரவு ஒரு பயங்கரமான கனவு கண்டேன்!!!

மன இறுக்கம் போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இரவில் தானாகவே பேசிக் கொள்ளுவார்கள். முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள். சமயங்களில் பிதற்றுவார்கள். இவையெல்லாம் உள்ளம் சார்ந்த பிரச்சனைகள். "நான் ஆகாயத்தில் பறப்பது போல கனவு காணும் போதெல்லாம் வாழ்க்கையில் உயர்வை நோக்கிப் போய்க் கொண்டிருந்திருக்கிறேன்." இப்படிச் சொல்வார் கண்ணதாசன்.



விடியற் காலையில் கனவு கண்டால் பலிச்சிடுமாமே... என்ன ஆகும்னே தெரியலே...

போகாதே...போகாதே என் கணவா... பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன் என்று கனவைக் கொண்டே எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிக் கனவுகள் பலித்திருப்பதற்கான சம்பவங்களும் சரித்திரத்தில் நிறைய உள்ளன. அதெல்லாம் இருக்கட்டும். கனவுகள் ஏன் வருகின்றன? என்பதை இப்போது நாம் பார்ப்போமா?

கனவு வரவேண்டும் என்றால் தூக்கம் முக்கியம். ஒரு நாள் தூக்கம் இல்லாவிட்டாலும் மறுநாள் நிம்மதியாகக் கழியாது. தூக்கமும் விழிப்பும் வாழ்க்கைச் சுழற்சியில் இன்றியமையாத செயற்பாடு. இது இல்லாவிட்டால் நமது பாடு பெரும்பாடு.

தூக்கம், களைத்துப்போன உடலுக்கு ஒய்வு கொடுப்பதற்கு இயற்கை ஏற்படுத்தியுள்ள விசித்திரமான அமைப்பு இது.

மனிதனின் மூளைக்குள் 'பயாலாஜிக்கல் கிளாக்' என்ற உயிரிக் கடிகாரம் உள்ளது. செல் தொகுதிகளால் ஆன இது, கண் நரம்புகளுக்கு மேலே அமைந்துள்ளது. நேர அளவுகளை விழித்திரைகள் உணர்ந்து கொள்வது இதனால்தான் என்று சொல்லப்படுகிறது. இதனால்தான் நாம் இரவு-பகலை, நேர வித்தியாசங்களை வேறுபடுத்தித் தெரிந்து கொள்கிறோம். நேரமாச்சு, போய்ப் படுங்கள் என்று நம்மை குட் நைட் சொல்லித் தூங்கச் செய்வதும் இதுதான்.

நமது மூளையில் 'ஹைபோ தலாமஸ்' சுரப்பிக்கு அருகில் 'பீனியல் கிளாண்ட்' என்ற சுரப்பி உள்ளது. இது 'மெலடோனின்' என்ற ஹார்மோனைச் சுரக்கிறது. இந்த ஹார்மோன்தான் மனிதனை உறங்க வைக்கிறது.

மூளையானது உடலின் செயற்பாடுகள், காட்சிகள், கேட்டல், சிந்தனை இவற்றையெல்லாம் ஒய்வு பெறச் செய்து மெலடோனை இரத்தத்தில் கலக்கச் செய்து விடுகிறது. இதனால் உறக்கம் வந்து விடுகிறது. அதிகமாக உண்ணும் போது மூளைக்கு இரத்த ஒட்டம் குறைவதாலும் மூளை இலேசாகச் சோர்வடைந்து விடுகிறது. இதனாலும் உறக்கம் வந்து விடுகிறது.

உறங்குபவர்கள் சுமார் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை புரண்டு படுக்கிறார்கள். நன்றாக ஆழ்ந்து உறங்குவோரும் இருபது நிமிடத்திற்கு ஒரு முறை புரண்டு படுக்கிறார்கள். இப்படிப் புரண்டு படுப்பது மட்டும் இருபது முதல் நாற்பது முறைவரை தினமும் நடைபெறுகிறது.

ஒரே பக்கமாகப் படுத்திருந்தால் இரத்த ஓட்டம் சரியாக நடைபெறாமல் அந்தப் பகுதியில் உணர்விழப்பு ஏற்படும். அதாவது மரத்துப் போகும்.

மனிதனின் உறக்கத்தை ஆராய்ச்சியாளர்கள் நான்கு நிலையாகப் பிரிக்கிறார்கள்.

முதல் நிலையின் போது தூக்கம் கண்ணை சொக்கும். அதாவது உறங்குவீர்கள். திடீரென விழித்துப் பார்ப்பீர்கள். இது முதலாவது நிலை.

இரண்டாவது நிலையின் போது நன்றாக ஆழ்ந்து உறங்கிவிடுவீர்கள். மூடிய இமைகளுக்குள் விழிகள் உருண்டு கொண்டிருக்கும். இந்த நிலையில்தான் உங்களுக்குக் கனவுகள் வந்து கொண்டிருக்கும். அதாவது கண்ணில் காட்சிகள் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கும்.

மூன்றாம் நிலை உறக்கத்தின் போது பக்கத்தில் என்ன நடக்கிறது என்பது கூடத் தெரியாமல் தூங்கிக் கொண்டிருப்பீர்கள்.

நான்காம் நிலை மிக ஆழ்ந்த உறக்கம். இந்த உறக்கத்தின் போது தான் கனவுகள் மாறி மாறி வரும். அதாவது கனவுலகில் முழுவதுமாகத் திளைத்திருப்பீர்கள்.

ஆழ்ந்த உறக்கத்தின் போதும், கண் அசைவுத் தூக்கத்தின் போதும் தான் உறுப்புகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. மூளை வளர்ச்சியடைவது இந்த நேரத்தில்தான். உடலுக்குள் செல்களின் வளர்ச்சியின் போது தேவையற்ற செல்களை நீக்கிப் புதுச் செல்களை உருவாக்குவதும் செல்களை சீர் செய்வதும் இந்த நேரத்தில்தான்.

ஒரு இரவில் ஒரே ஒரு கனவுதான் காண்போமா என்றால் இல்லை. பல முறை கனவு காண்போம். இந்தக் கனவுகள் நான்கு நிமிடம் முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் வரை கூட நீடிப்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட கனவுகள் மன நிலைகளாலும் வருகின்றன.

மனம் என்பது மூளையிலா? இதயத்திலா? என்று விவாதிக்காதீர்கள். மனம் இதயத்தில் இல்லை. அது மூளையில் உள்ளது. இது மூளையின் தனிப்பட்ட பகுதியல்ல. மூளையில் உள்ள பல்வேறு பகுதிகளைக் கட்டுப்படுத்தும் பகுதிகளின் ஒரு கூட்டுத் தொகுதி அல்லது அமைப்புதான் மனம். ஆக, எந்தெந்தப் பகுதிகளின் பணிகள் மூளையில் பதிவு செய்யப்பட்டுள்ளனவோ அவையெல்லாம் விழி நரம்புகளில் அதிர்வுகளாகத் தெறிக்கும். இந்த நேரத்தில்தான் அவை சார்ந்த கனவுகள் வருகின்றன.

மன இறுக்கம், நோய்கள், கவலை, கோபம், சந்தேகம் போன்ற உணர்வுகளின் வெளிப்பாடுகளும் கனவுகளாக வரும். இந்தக் கனவுகளின் மூலம் மன இறுக்கம், மன அழுத்தம், ஆசை, துக்கம், கோபம், அன்பு போன்ற அனைத்துக்கும் வடிகால் ஏற்பட்டு மனம் நிம்மதி பெறுகிறது. தூங்கும் முன்பு குழப்பத்தில் இருந்தவர்கள் விழித்த பின் தெளிவடைவது இதனால்தான்.

நிகழ்ச்சிகள் மட்டுமன்றி உணவு முறைகளும் கூடக் கனவுகளுக்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஜீரணிக்கப்படாத உணவுகள், கண்ட கண்ட உணவுகளை உண்பது கூட திகில் கனவுகளுக்குக் காரணம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். சில கனவுகள் பலித்துவிடுகின்றனவே என்பார்கள். பறப்பது போலக் கனவு கண்டால் சிந்தனையில் பறக்கலாமே தவிர உடலால் பறக்க முடியாது. அதைப் போல கைலாயத்தில் சிவனோடு பேசிக் கொண்டிருப்பதைப் போல கனவு கண்டால் அந்த இடத்திற்குப் போக முடியாது. கனவு நம் எண்ணத்தின் ஓட்டம், மனதில் ஏற்படும் பிரச்சனைகளின் அறிகுறி என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.


அடிக்கடி வரும் திகில் கனவுகள் கண்டிப்பாக மனநோயின் விளைவாக இருக்கக் கூடும். மன நல மருத்துவரை அணுக வேண்டும். இப்படிப்பட்ட தொல்லைகள் வரக்கூடாது என்பதால்தான் இரவில் அதிகமாக, கண்டதை சாப்பிடாமல் குறைவாக, மித உணவாகச் சாப்பிட்டு, மனதை இலகுவாக்கிப் படுக்கச் செல்ல வேண்டும். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு படுக்க வேண்டும். உறங்கும் முன் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்கள் பெரியோர்.


**மனம் என்பது மூளையிலா? இதயத்திலா? என்று விவாதிக்காதீர்கள். மனம் இதயத்தில் இல்லை. அது மூளையில் உள்ளது. இது மூளையின் தனிப்பட்ட பகுதியல்ல. மூளையில் உள்ள பல்வேறு பகுதிகளைக் கட்டுப் படுத்தும் பகுதிகளின் ஒரு கூட்டுத் தொகுதி அல்லது அமைப்புதான் மனம்.**



மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே தங்கம்- தலை
மறைந்து திரிபவர்க்கு மானமு முண்டோ?
பொய்யை யுருவமெனக் கொண்டவ னென்றே -கிழப்
பொன்னி யுரைத்ததுண்டு தங்கமே தங்கம்.

**சுப்பிரமணிய பாரதியார்—**



## பாப்பா முரசு சிறுகதை

# அன்பு வைக்காதே அரசே!

**த**னது நாட்டு மக்களின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தான் மன்னன் மணிவசந்தன். அவர்களின் வளமான வாழ்க்கைக்கு என்னவெல்லாம் தேவையோ அவை அனைத்தையும் கொடுத்தான். இதனால் மக்கள், மணிவசந்தனைப் போற்று போற்று என்று போற்றினர்.

மணிவசந்தனுக்குப் பெருமை பிடிபடவில்லை. தன் நாட்டு மக்களைப் பற்றி மிகவும் உயர்வாகப் பேசினான்.

இதை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் ஆகாஷவாணனுக்கு எரிச்சல் உண்டாயிற்று.

ஒரு நாள்-

"மன்னவ! நாட்டு மக்களின் மேல் அன்பும், விசுவாசமும் கொண்டிருப்பதில் தவறேதுமில்லை. ஆனால், அவர்கள் தங்களது பாராட்டுதல்களுக்கு உகந்தவர்களே அல்ல. அவர்கள் அறிவாளிகளுமில்லை. உழைப்பாளிகளுமில்லை. முட்டாள்கள்.... முழுச் சோம்பேறிகள். இதைத் தாங்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்", என்றார்.

அதைக் கேட்டதும் மணிவசந்தனுக்குக் கோபம் வந்தது.

"அமைச்சரே! என் நாட்டு மக்கள் முட்டாள்கள், சோம்பேறிகள் என்று உடனே நிரூபித்தாக வேண்டும். இல்லாவிட்டால் கடுந் தண்டனையை நீர் அனுபவிக்க நேரிடும்!"

"நிரூபிக்கிறேன் மன்னவ. எனக்கு இது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஒரு நாள் அவகாசம் கொடுங்கள்."

"சரி! எடுத்துக் கொள்ளும்!"

மறுநாள் ஊர் உறங்கிய இரவு நேரத்தில் மன்னன் மணி வசந்தனை அழைத்துக் கொண்டு நகரின் பிரதான சாலைக்குச் சென்றார் அமைச்சர் ஆகாஷவாணன்.

அவரே சாலையின் நடுவில் ஒரு குழியைத் தோண்டினார். அதனுள்ளே நூறு பொற்காசுகள் அடங்கிய ஒரு பையை வைத்தார். பிறகு ஏற்கெனவே தயார் செய்து வைத்திருந்த ஒரு பாறாங்கல்லை நகர்த்தி அந்தக் குழியின் மேல் வைத்தார்.

பிறகு இருவரும் அரண்மனைக்குச் சென்றனர்.

பொழுது புலரும் சமயம் இருவரும் மாறு வேடத்தில் அந்தப் பாறை இருந்த இடத்திற்கு வந்தனர். ஒரு சந்தின் மறைவில் நின்று கொண்டு அந்தப் பாறாங்கல்லை நோட்டமிடத் தொடங்கினர்.

சாலையில் போவோர் வருவோர் எல்லாம் அந்தப் பாறாங்கல்லைப் பார்த்து விலகிச் சென்றனர். வேறு சிலர் "எந்த முட்டாள் இந்தப் பாறாங்கல்லை நடுவீதியில் போட்டு விட்டுச் சென்றது" என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றனர். ஆனால், ஒருவருக்குக் கூட அந்தப் பாறாங்கல்லை அகற்றி சாலையைச் சீர்படுத்த வேண்டும் என்ற எண்ணமே உண்டாகவில்லை.

"என்ன மோசமான ஜனங்கள்! அந்தப் பறாங்கல்லை அகற்றி அப்புறப்படுத்த வேண்டும் என்ற பொது நலநோக்கு ஒரு மனிதனிடம் கூட இல்லையே. ச்சே...இவர்களையா நான் அறிவாளிகள் என்றும், உழைப்பாளிகள் என்றும் கூறினேன்." என்று சற்று ஓசையுடன் கூறினான்.

"மன்னவ! அது மட்டுமல்ல... இவர்கள் அனைவருமே பேராசை கொண்டவர்களும் கூட. அதையும் நிரூபிக்கிறேன் பாருங்கள். என்னோடு வாருங்கள்!" என்று சொன்ன அமைச்சர் ஆகாஷவாண்ன் அந்தப் பாறாங்கல்லின் அருகே சென்றார்.

சாலையில் சென்று கொண்டிருந்த மக்கள் அனைவரையும், ஆகாஷவாணன் அழைத்தார்.

"யாராவது இந்தப் பாறாங்கல்லை தள்ளுங்கள்!" என்றார்.

ஒரு வாலிபன் அந்தப் பாறையைத் தள்ளினான்.

பாறை அகன்றதும் பள்ளத்தினுள்ளே இருந்த பையை அமைச்சர் ஆகாஷவாணன் எடுத்தார்.

அதன் முடிச்சை அவிழ்த்து அதிலிருந்த தங்கக் காசுகளை அனைவரிடமும் காட்டினார்.

"ஆ! பொற்காசுகள்!"

"ஆ! தங்கக் காசுகள்!"

மக்கள் அனைவரும் ஆச்சரியத்தில் கூவினர்.

"அடடே! இங்கே தங்கக் காசுகள் இருப்பது முன்பே தெரிந்திருந்தால் இந்தப் பாறையை நானே அகற்றியிருப்பேன்" என்றான் ஒரு மனிதன்.

அவனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் அவன் கூறியதைப் போலவே கூறினர்.

மணிவசந்தனின் கண்கள் சிவந்திருக்க, அவனுக்குள் ஆத்திரம் கிளர்ந்திருந்தது.

"அரசே! அரண்மனைக்குச் செல்வோம்!" என்றார் ஆகாஷவாணன்.

அரண்மனை திரும்பியதும் முதல் வேலையாக நாட்டு மக்களுக்குச் செய்து கொண்டிருந்த அத்தனை உதவிகளையும், சலுகைகளையும் நிறுத்தினான்.

அனைவரும் உடல் உழைப்பால் கஷ்டப்பட்டு முன்னேறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினான்.

மக்களும் வேறு வழியில்லாமல் சோம்பேறித்தனத்தை உதறிவிட்டு உழைக்கத் தொடங்கினர்.

நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, தனக்கும் புத்தி புகட்டியதற்காக அமைச்சர் ஆகாஷவாணனுக்கு நிறைய வெகுமதிகள் கொடுத்துப் பாராட்டினான் மன்னன் மணிவசந்தன். ●

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **19.10.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **465**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 463

**பரிசுக்குரியவர்:**
**ஆர். சதீஸ்,**
76, ஹுசைன் அவனியூ, மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **நா.கோபிசங்கர்,** 170/1, சென் அன்றூஸ் ரோட், கொழும்பு-15. | **ரி. ஆர்த்திகா,** 82, அளுத்வத்தை றோட், சிலாபம். |
| **எஸ். உஷாநந்தினி,** அல்/ப/சர்வதேசப் பாடசாலை, பண்டாரவளை. | **எம். அர்ஜுன்,** க/கி/முல்லை தமிழ் வித்தியாலயம், கலகா. |
| **க.பிரசாந்த்,** 40, ரகுமானா பாத், நீர்கொழும்பு. | **நுஜுகா ரை அல்,** 40/4 ஸ்பில் றோட், புத்தளம். |
| **ச.ஷாமளை,** யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | **யோகானந்தன் திலாகர்,** நா/மு/அ/ வித்தியாலயம், நாத்தாண்டியா. |
| **எஸ்.சர்ஜுன்,** அக்/அ/மகாவித்தியாலம், அக்கரைப்பற்று-1. | **ஆர்.சுபாஷினி,** ஐய்பொரஸ்ட, கந்தபொல. |


## விடுகதைகளும் விடைகளும்

1. உழைப்பவரிடையே தோன்றுவான் அவன் யார்?
2. வேகாத வெயிலில் இவனை வைத்தால் உருகி உருகி ஒன்றுமில்லாதே போய்விடுவான் அவன் யார்?
3. ராஜா ராணி ஆட்டம் கைக்காசு ஓட்டம் அது என்ன?
4. கண்ணீர் விட்டபடி வெளிச்சம் தருகிறான் அவன் யார்?
5. ஒலி கொடுத்து அழைப்பான் ஓராயிரம் விஷயம் தருவான் அவன் யார்?
6. கண்ணெதிரே பிரமாண்டம் காட்டியவனை ஒரு கைக்குள் அடக்கி விடலாம் அவன் யார்?
7. இருட்டில் வெளிச்சம் அது என்ன?
8. மண்டபத்தில் ஆயிரமாயிரம் தொண்டர்கள் காவல். மன்னன் இருந்தும் ராணியே தலைவி, காப்பது இனிப்புப் பொட்டலம் அது என்ன?

**விடைகள்.**


1. வியர்வை 2. பனிக்கட்டி
3. சீட்டு விளையாட்டு 4. மெழுகுவர்த்தி
5. பேஜர் கருவி 6. பஞ்சு மிட்டாய்
7. சினிமா 8. தேன் கூடு

## அஜாக்கிரதைக் கண்டுபிடிப்புகள்...



**அ**ஜாக்கிரதையான நடத்தையால் கூடப் பல நேரங்களில் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து இருக்கின்றன.

உயிர் காக்கும் மருந்தான பென்சிலின் உருவானதும் இப்படித்தான். அலெக்சாண்டர் பிளெம்மிங்கிடம் உதவியாளராக ஒரு பெண்மணி வேலை பார்த்து வந்தார். ஒரு நாள் மறதியில் அந்தப் பெண் ஆய்வகத்தில் ஒரு தட்டின் மீது இருந்த உணவை மூட மறந்து சென்றுவிட்டார். மறுநாள் இந்த உணவில் பாக்டீரியா நன்றாக வளர்ந்திருப்பது தெரிய வந்தது. இந்த பாக்டீரியாவை ஆராய்ந்துதான் அலெக்சாண்டர் பிளெம்மிங் பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்தார்.




**பே**ராசிரியர் லூயி கால்வனி ஒரு இறந்த தவளையின் உடலை வெட்டி அதை ஆராய்ந்து கொண்டிருந்தார். அப்போது அவரது உதவியாளர் கவனக்குறைவாக கத்தியுடன் தவளை- மின்சார சாதனம் அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது மின் தொடர்பால் தவளையின் கால்கள் தானாக அசைய ஆரம்பித்தன. இதுவே மருத்துவ மின்சார சாதனங்கள் கண்டு பிடிப்பதற்கு ஏதுவாயிற்று.

**சா**ர்லஸ் குட் இயர் தற்செயலாக ரப்பர் பாலை ஸ்டவ் அடுப்பின் மேல் ஊற்றி விட்டார். இதுவே வலிமை மிகுந்த டயர்களை உருவாக்கும் வல்கனைசேஷன் முறை உருவாவதற்குக் காரணமாக அமைந்தது. வல்கன் என்பது ரோமானியச் சொல். வல்கன் என்பது ரோமானியர்களின் தீக் கடவுள் ஆகும்.



## இந்த வாரப் புதிர்



படத்தில் பத்து நாணயங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. இவை கீழிருந்து மேலாகக் குறைந்து கொண்டே போகின்றன. இவற்றில் மூன்று நாணயங்களை மட்டும் நகர்த்தி, இந்தப் பத்து நாணயங்களும் மேலிருந்து கீழ் குறைந்து கொண்டே வருவது போல (அதாவது மேலே 4 நாணயம், அதற்குக் கீழே 3 நாணயம், அதற்குக் கீழே 2 நணயம், அதற்குக் கீழே 1 நாணயம் இப்படி....) செய்ய வேண்டும். முயற்சித்துப் பாருங்களேன்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# காதல் வந்த போது

இன்னுமா பஸ் வரவில்லை? மீண்டும் ஒரு தடவை வீதியை எட்டிப் பார்க்கிறேன். வழமையாக ஒன்றன் பின் ஒன்றாகக வரும் பஸ்கள். இன்று ஒன்றையுமே காணவில்லையே!

அதோ...ஒரு மஞ்சள் நிற பஸ் ஜெற் வேகத்தில் வந்து கொண்டிருக்க, வீதியோரமாக நின்று கையசைத்தேன். ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு, கிறீச்சிட்டு நின்றது பஸ்.

எனக்குப் பின்னால் யாரோ ஏறினர்., பஸ் புறப்பட, என்னை நிலைநிறுத்திக் கொள்ள இருக்கையின் கம்பியை இறுகப் பற்றிக் கொண்டேன். எனக்கு இருப்பதற்கு ஒரு இடம் கிடைக்காதா? சுற்று முற்றும் கண்களை ஓடவிட்ட போதுதான் தெரிந்தது. எல்லா இருக்கைகளும் நிறைந்திருந்தன. அவ்வளவு பேரும் ஆண்கள்.

என்னுடன் சேர்த்து ஐந்து பேர்தான் பெண்கள். ஆனாலும் நானும் என் பின்னால் ஏறிய அந்த வாலிபனும்தான் நின்று கொண்டிருந்தோம்.

நான் நின்றதற்கு முன்னாலிருந்த இருக்கையிலிருந்த ஒருவர் இறங்கிக் கொண்டார். ஆனால், அவருக்கருகே அந்த வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

அவன், என்னைத் திரும்பிப் பார்த்து இருக்கும்படி சைகை செய்ய, எனக்கோ ஓடும் பஸ்ஸில் நடக்கப் பயமாயிருந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் "நீங்க இருங்க" என்றேன்.

அந்த வாலிபனும் பிகு பண்ணவில்லை. அமர்ந்து கொண்டான். இதைப் பின்னால் நின்றுகொண்டிருந்த கண்டக்டர் கண்டு விட்டாரோ, விடுவிடுவென அவ்வாலிபன் அருகே சென்றார்.


"தம்பீ....இந்தப் பிள்ளைக்கு இடங் கொடு..." என்றார் அதட்டியபடி. அவ் வாலிபனும் சடாரென எழுந்து நின்றான். அப்போது கண்டக்டர்,

"தங்கச்சி....இதில வந்திரு" என்றார்.

பஸ்ஸிலுள்ளவர்கள் என்னைப் பார்க்க... எனக்கு வெட்கமாக இருந்தது. மெதுமெதுவாக நடந்து இருந்து கொண்டேன்.

இதை நேரத்துக்கே செய்திருக்கலாம். அந்த வாலிபனையும் அவமானப்படுத்தி...நானும் சங்கோஜப்பட்டேன்.

அவர் என்ன நினைத்தாரோ... என்னைத் தப்பாக நினைத்தாரோ... மனம் அடித்துக் கொண்டிருந்தது.



நான் இறங்கும் இடமும் வந்து விட்டது. இறங்கும் போது ஒரு தடவை அவரைத் திரும்பிப் பார்த்தேன். சிறு கீற்றாய் புன்னகைத்தார். என் மனது இறக்கை கட்டிப் பறந்தது.

இப்போதெல்லாம் பஸ்ஸில் ஏறி விட்டால் போதும். என் கண்கள் என்னை அறியாமலே 'அந்த' வாலிபனைத் தேடத் தொடங்கி விடுகின்றன. கண்டுவிட்டாலோ உள்ளத்தில் மின்சாரம் பாய்ந்தது போன்ற இன்ப அதிர்வுகள்.

துள்ளிக் குதிக்க நினைக்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வேன். என்னைக் காணும் போது அவரும், அவரைக் காணும் போது நானும் புன்னகை புரியத் தவறுவதில்லை.

அடிக்கடி அவரை பஸ்ஸில் காணுவதால் ஏதும் வேலை செய்கிறாரோ? என்ன வேலை?... அதைவிட அவரது பெயர் என்ன?... அறிய ஆவலாக இருந்தது.

அன்று பஸ்ஸினுள் ஏறி அமர்ந்து கொண்டேன் நான். எனக்கு முன் இருக்கையில் இருவர்... அவர்களில் ஒருவர் தூரத்திலிருக்கும் ஒருவரைப் பார்த்து "என்ன சரியா?" என்றார்.

அதற்கு அவர் "சரிவரும் சரிவரும்" என்றார். கேட்டவர் முகமெல்லாம் ...இல்லை இல்லை வாயெல்லாம் பல்லாய் இளித்துக் கொண்டிருந்தார். அவர், அருகிலிருந்தவரிடம்,

"அந்தப் பையன் தங்கமான பையன். அவனிட்ட போய் என்ன உதவி கேட்டாலும் இல்லை என்று சொல்றதில்லை. எப்படியாவது முடிச்சுத் தருவான்... நல்ல மனசு அவனுக்கு" என்றார்.

எனக்கும் அந்த நல்ல மனசுக்காரனைப் பார்க்க வேண்டும் போலிருக்க மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். என் இதயம் இன்ப அதிர்ச்சியில் ஒரு கணம் துடிக்க மறந்தது. கண்கள் இமைக்க மறந்தன... என் மன உணர்வுகளை அடக்கிக் கொள்ளப் பெரிதும் சிரமப்பட்டு விட்டேன்.

அது என்னவோ தெரியவில்லை. அந்த வாலிபனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல மனசு கிடந்து துடித்துக் கொண்டிருந்தது. எந்நேரமும் புன்னகை புரிந்தபடி இருக்கும் அந்த முகம்... அமைதியான நடை... அப்பப்பா... இதுவரை அப்படிப்பட்ட ஒருவரை நான் காணவேயில்லை.

என்னை அறியாமல் அந்த வாலிபன் மீது காதல் கொள்ளத் தொடங்கியது என் மனசு...சிறிது சிறிதாக அவருக்கு அடிமையானேன்.

அவரது பெயர் தெரியாவிட்டாலும் அவர் வேலை செய்யும் இடம் தெரிந்த போது மேலும் சந்தோஷப்பட்டேன்...சீ.ரீ.பி.யில்தான் வேலை செய்து கொண்டிருந்தார்.

நாட்கள் நடைபோட்டுக் கொண்டிருந்தன.

என் காதலும் ஆலவிருட்சமாய் வளர்ந்து விட்டது. அவரைக் காணும்போதெல்லாம் சிரித்து, ஹலோ சொல்லி... சுகம் விசாரிக்கும் அளவுக்கு எங்களுக்குள் நெருக்கமாகியிருந்தது. ஆனாலும், அவரும் என்னைக் காதலிப்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அவராக என்னிடம் காதலைச் சொல்வார் சொல்வார் என்று பார்த்துப் பார்த்துப் பாதி இளைத்து விட்டேன் நான். இனிமேலும் என்னால் தாங்க முடியாது. அவரை இனி எங்காவது பார்த்தால் உடனே அவரை நிறுத்தி- அவரது பெயரைக் கேட்டுவிட்டு- மெதுவாக எனது காதலைக் கூறவேண்டும். நினைக்கும் போதே வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்றது.

நான் காதலித்த நேரம் நல்லதோ... அவரை விரைவில் கோணேசர் கோயிலில் கண்டேன். வேட்டி சட்டையில்... மிகவும் அழகாக இருந்தார்... காதலைச் சொல்லக் கோயில் சரியான இடம்தான்.

கோயிலைச் சுற்றிக் கும்பிட்டு விட்டு வந்த போது வெளிப்புறமாக நின்றுகொண்டிருந்த அவரை என் கண்கள் கண்டு கொண்டன. கோயிலிலும் பூசை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கதைப்பதற்கு மனிதர்களின் தடையுமில்லை.

மெதுவாக நடந்து அவரருகே சென்றேன். என்னைக் கண்டதும் அவர் முகம் பூவாய் மலர்ந்தது..." எப்படி இருக்கீங்க சுமதி?" என்றார்.

எனக்கு அதிர்ச்சி..."என் பெயர் எப்படித் தெரியும்?" என்றேன்.

"இது கூடத் தெரியாதா?...உங்க பெயர் சிதம்பர ரகசியமோ?"

அவர் குரலில் குறும்பு இருந்தது. என் மனதில் சொல்ல முடியாத சந்தோஷம். காதலியின் பெயரை அறியாமல் காதலனால் இருக்க முடியுமா?... அவரது பெயரைக் கேட்க நினைத்தேன். முடியவில்லை...நாணம் என்னைப் போர்த்திக் கொண்டது...பெயரையே கேட்க முடியவில்லை. அப்புறம் எப்படிக் காதலைச் சொல்வாய்? என் மனது என்னைக் கேலி செய்தது.

இருவரும் ஏதேதோ பேசினோம்- கோயிலைப் பற்றி, பூசையைப் பற்றி, ஊரைப் பற்றி... இனப் பிரச்சனை- சமாதானம் பற்றி...

பூசை முடிந்து எல்லோரும் வெளியே வந்து கொண்டிருந்தனர். ஐயகோ... இன்றும் எனது காதலை சொல்லவில்லையே!...

அழகான நீலநிற காஞ்சிபுரச் சேலையுடுத்தி...கையில் அர்ச்சனைத் தட்டுடன் ஒரு தேவதை என் காதலனை நோக்கி வந்தாள்... யார் இது?... அவரின் தங்கையோ?... குழம்பி நின்ற போது.

"சுஜி போவமா?..." கேட்ட எனது காதலன் என்னிடம் திரும்பி "சுமதி! இவதான் என் மனைவி...பெயர் சுஜிதா!... சுஜி! இவ என் ப்ரெண்ட் சுமதி..." என்றார்.

எனக்குத் தலை சுற்றியது... மலையுச்சியிலிருந்து பாதாளத்தில் விழுந்து விட்டேனோ?... எனது இதயம் துடிக்கவில்லையோ? கீழே விழாதிருக்க பக்கத்திலிருந்த மரத்தைப் பிடித்தேன். என் கலங்கிய...இருண்ட கண்களுக்கு அந்த இருவரும் கைகோர்த்துச் செல்வது மங்கலாய்த் தெரிந்தது... ✷

**ச. கவிதா – தம்பலகாமம்.**

# கம்மல் 'கே' சம்பந்தம்

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆனாலும் விடுமுறையின் கழுத்தில் வேலை என்ற கத்தியை வைத்து விறுவிறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது அந்த நகைக் கடை. "ஞாயிற்றுக்கிழமை என்றால் என்ன கடைகளா திறக்காமல் இருக்கும். ஞாயிறு அரச அலுவல்களுக்குத்தான் விடுமுறை. நம்ம நாட்டைப் பொறுத்தவரை அது தனியார் நிறுவனங்களுக்கு இல்லை" என்று என்றோ அலுத்துக் கொண்ட ஒரு புடைவைக் கடை நண்பனின் ஞாபகத்தோடு நானும் மனைவியும் அந்தக் கடையினுள் நுழைகிறோம். "வாங்க.... வாங்க" வரவேற்பு பலமாக இருந்தது. எங்களை வரவேற்ற அந்தக் கடைச் சிப்பந்தியின் வரவேற்பில் மகிழ்ந்து கொண்டு ஒரு விற்பனையாளருக்கு எதிரில் இருந்த ஆசனங்களில் அமர்கின்றோம். அந்தக் கடையின் நீண்ட நாளைய வாடிக்கையாளர் என்பதால் "டேய் சீனிவாசா! ரெண்டு கூல் கொண்டு வா" என்று கட்டளையிட்ட அந்த விற்பனையாளருக்கு "வேண்டாம் நாங்க இப்ப வீட்டில குடித்திட்டுதான் வாறோம். எங்களுக்குப் புது டிசைன்ல கம்மல் காட்டுங்க. போன மாதம் வாங்கின டிசைன் அவ்வளவா இவளுக்குப் பிடிக்கல. அதுதான் வேற ஒன்று வாங்கலாமென்று...." சொல்லிக் கொண்டிருக்கும் போதே பல டிசைன்களில் எங்கள் முன் கம்மல்கள் பல காட்டப்பட்டன. மனைவி "இத கொஞ்சம் எடுத்துத் தாங்க. அதை எடுத்துத் தாங்க" என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்றைக்கு ஒரு டிசைன் வாங்கினால் அது நாளைக்குப் பிடிக்காமல் போகும் வகையில் நாளுக்கு நாள் விற்பனையைப் பெருக்கிக் கொள்ள, புதிது புதிதாய் வடிவமைக்கப்பட்ட நவநாகரீக டிசைன்களில் பொற்கொல்லர்களின் கை வண்ணத்தை இரசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் மனைவி தன் மனதிற்குப் பிடித்தமான ஒன்றைத் தெரிவுசெய்து கொண்டு "என்னங்க! இதையே வாங்கிடுங்க" என்றாள். நான் அதை விற்பனையாளரிடம் கொடுத்த போது அதை நிறுத்து இத்தனை கிராம், இத்தனை காரட், இன்ன விலை, மற்றும் செய் கூலி சேதாரம் என அந்தக் கம்மலை விற்பனை செய்வதற்காகப் பல ஆதாரங்களைக் காட்டினார்.



**மெய்யன் நட்ராஜ் – டோகா, கட்டார்.**

அவர் கூறியதில் சற்று விலை அதிகமாய் இருந்ததால் நானும் சற்றுப் பேரம் பேசினேன். முடிவில் ஒரு விலைக்கு ஒப்புக்கொண்டு பில் எழுத முன்பு சென்ற மாதம் வாங்கிய கம்மலைக் கொடுத்தேன். இதற்கு முன்பும் பழைய நகைகளைக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக மேலதிகமாய் கொஞ்சம் பணம் போட்டு புதிய வடிவத்தில் எடுத்துள்ளோம். இவர்களும் செய்து தந்திருக்கின்றார்கள். இந்தப் பழக்கத்தில் நான் நீட்டிய கம்மலை வாங்கிக். கொண்டு விற்பனையாளர் "கொஞ்சம் இருங்க" என்று கூறிவிட்டு ஏனைய நகைகளை எடுத்து வைத்து விட்டு முதலாளியிடம் சென்று பேசிவிட்டு வந்தார்.

வந்தவர் எங்கள் கம்மலை எடுத்துத் தங்கம் பரிசோதித்துப் பார்க்கும் கல்லில் உரசி ஏதோ திரவம் இட்டுப் பார்த்தார். பார்த்தவர் "ம்ஹூம்" என்றவாறு கல்லில் வேறு ஒரு இடத்தில் உரசிப் பார்த்தார். பார்த்து விட்டு "சார் இது பதினெட்டுக் காரட். எங்கே வாங்கினீங்க? நாங்க பதினெட்டுக் காரட் எல்லாம் வாங்குவதில்லை" என்ற போது "என்ன விளையாடுறீங்களா!...இது போன மாசம் உங்க கடையிலே வாங்கினதுதானே. நல்லாப்பாருங்க" என்றேன். "நல்லா பார்த்துவிட்டேங்க. நிச்சயம் இது எங்க கடையிலே வாங்கினதா இருக்காது. நாங்க இருபத்தியிரண்டு கரட்ல மாத்திரமே செய்து கொடுப்போம். பணம் ஒரு பத்து ரூபா கூட வாங்கினாலும் வாங்குவோம். ஆனால் இந்த மாதிரி பதினெட்டு கரட் கொடுத்து இருபத்தி இரண்டு கரட் நகையென்று கள்ள வேலை செய்ய மாட்டோம்." என்று அடித்துக் கூறினார்.

எனக்கு அந் நேரம் என் நாடி நரம்புகள் சூடாகி ஆத்திரம் பொத்துக் கொண்டு வர "அப்ப நான் பொய் சொல்றேனா!" என்றபோது உடனே கைப்பையை திறந்து " இதோ பாருங்க". நீங்க கொடுத்த ரசீது கூட இருக்கு" என்று மனைவி ரசீதைக் காட்டினாள். அதை வாங்கிப் பார்த்த விற்பனையாளர் "எங்க கடையிலே வாங்கி இருந்தா கம்மல்ல எங்களுடைய விற்பனை அடையாளம் 'கே' என்கிற ஆங்கில எழுத்து இருக்கும். காவ்யா ஜுவலர்ஸ்ஸின் முதல் எழுத்தைப் போட்டிருப்போம். தேடிப் பார்க்கிறேன்" என்று தேடிவிட்டு, 'கே' எழுத்தையும் கண்டு பிடித்து "இது இங்கே செய்ததுதான் ஆனால்..." என்று இழுத்த போது "என்ன ஆனால்... இருபத்தியிரண்டு காரட்டுன்னு பணத்தை வாங்கிக்கிட்டு போலி நகையைச் செய்து கொடுத்திருக்கீங்க. செய்து கொடுத்ததும் இல்லாமல் நாங்க கள்ள வேலை செய்த மாதிரி இப்ப பேசுறீங்க. இவ்வளவு காலமா உங்களை நம்பித்தானே உங்க கடைக்கு வாறோம். நம்பிக்கைக்கு இப்படி நீங்க துரோகம் செய்யலாமா? நாங்க உங்கக்கிட்ட வாங்கின மற்ற நகையெல்லாம் எத்தனை காரட்டிலே செய்து இருக்கீங்களோ? நீங்க செய்கிற நகைகள் 'கே' எழுத்துப் போடுறது கூட கள்ள வேலை என்பதை ஆங்கிலத்திலே எழுதும்போது முதல் எழுத்தா 'கே' வாறதா சூசகமா வச்சிருக்கீங்க போல" என்று சத்தம் போட பக்கத்திலிருப்பவர்கள் ஆச்சரியமாய் பார்த்தார்கள்.

"என்ன... என்ன நடந்தது" என்றவாறு ஓடி வந்தார் முதலாளி. "இனி என்ன நடக்கணும். எல்லாமே நடந்திருச்சு. கம்மல் 'கே' சம்பந்தப்பட்டதை அதாவது கம்மல் கள்ள வேலை சம்பந்தப்பட்ட விசயத்தை நான் பார்க்கிற விதமா பார்த்துக் கொள்கிறேன்" என்று எழுந்த போது "ஐயா... ஏதோ தவறு நடந்திருச்சி. இந்த ஒரு தடவை மட்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்க. உங்க எல்லா நகைகளையும் புதுசாவே செய்து கொடுத்திடுறேன். கோர்ட், கேஸ்ஸுன்னு போனா மானக்கேடாய் போயிடும்" என்றவரை மன்னிக்க மனமில்லாது மன்னித்து வெளியேறினோம்! ■

# குறி

## அங்கம் 03

**உ**த்தம்சிங் கையில் பிஸ்டலோடு, ஹரிதாவின் அருகே வந்தான். "உங்கப் பாவுக்கும் எங்களுக்கும் என்ன விவகாரம்னு "கேட்டியே? இப்ப சொல்றேன் கேட்டுக்க, ஆறு மாதத்துக்கு முன்னாடி எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த எட்டுப் பேரை உங்கப்பா அரஸ்ட் பண்ணி, அவருடைய பொலிஸ் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி அவங்க மேல கேஸ் போட்டிருக்கார். அந்த கேஸோட முடிவு என்னாகும்ன்னு எங்களுக்குத் தெரியும். ஜட்ஜ் பென்சிலாலே காதை குடைஞ்சுகிட்டே, எட்டுப் பேருக்கும் மரண தண்டனை கொடுத்துடுவார்.... ஸோ அவங்களுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுக்கப் போகிற உங்கப்பா உயிரோட இருக்கலாமா? இந்த ராத்திரி நேரத்தில அவரை அமரர் ஆக்கத்தான், இந்த யூனிபார்ம்ல வந்தோம். பொலிஸ் பாதுகாப்போட உங்கப்பாவோட உயிரை வாங்கப் போறோம்."

ஹரிதா ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தாள். சுஷ்மா கண்களில் மிரண்டு போய் திமிறினாள். நாற்காலி ஆடியது.

"உன்னோட அப்பா உயிர் விட்டதும், அதே பிஸ்டலாலே உங்கம்மாவையும் தீர்க்கிறதா எங்க பிளான்! ஆனா உன்னைப் பார்த்ததும் எங்க திட்டத்துல ஒரு சின்ன மாறுதல். கமிஷனர்க்கு இவ்வளவு அழகான பொண்ணு ஒருத்தி இருப்பான்னு எங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சதுனால ஒரு மாறுதல் உங்கம்மாவோட சாவை உன்னால தடுக்க முடியும். அவரைக் காப்பாத்தவும் முடியும்."



ஹரிதா திக்கென்று விழிக்க....

உத்தம்சிங் தொடர்ந்தான். "என்ன அப்படி பார்க்கிறே ஹரிதா? உண்மையைத்தான் சொல்றேன். நீ மனசு வெச்சா உங்கம்மாவைக் காப்பாத்த முடியும்?"

"எ...எ...எப்படி?"

"உனக்கு இப்போ... என்ன வயசு?"

"இ...இ...இருபது..."

"இந்த இருபது வயசுல நீ யார்கிட்டேயாவது கெட்டுப் போயிருக்கியா?"

"இ...இல்லே."

"உங்கம்மாவோட உயிரை நீ காப்பாத்தணும்னா எங்க மூணு பேர்கிட்டேயும் நீ கெட்டுப் போகணும். சும்மா கொஞ்ச கொஞ்ச நேரம் போதும்...."

"யூ....யூ....யூ...."

உத்தம்சிங் கையமர்த்தினான்."திட்டாதே! கத்தாதே! உனக்கு முழுசா ஒரு நிமிஷம் அவகாசம் தர்றேன். யோசிச்சு ஒரு முடிவுக்கு வா. அப்பா, அம்மா ரெண்டு பேரையுமே இழந்துட்டு பலவந்தமா எங்ககிட்டே உன்னை இழக்கப் போறியா? இல்லே, அம்மாவைக் காப்பாத்தறதுக்காக நல்லதனமா எங்ககிட்டே உடம்பை அடகு வெக்கப் போறயா...? நிமிஷ நேரம்தான் அவகாசம். சரியா அறுபது விநாடி. அதுக்கு மேலே ஒரு விநாடி அதிகமாக போனாலும் நான் ஒத்துக்க மாட்டேன்."

வாட்சைப் பார்த்தான் உத்தம்சிங்.

எலக்ட்ரானிக் டிஜிட்டல் வாட்ச்சில் ஐந்தாவது விநாடி சிவப்பாய் ஜனித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து விநாடிகள் மாறிக் கொண்டிருக்க ஹரிதா தவிப்பாய் நின்றிருந்தாள்.

குரு கோவிந்த் அவளை நெருங்கினான்.

"யோசிச்சு...ஒரு பிரயோசனமும் இல்லை. அந்த பக்கத்து ரூமுக்கு போயிடலாமா? உன் அம்மாவோட உயிரை காப்பாத்த போறோமேங்கிறதுக்காக நீ சந்தோஷப்படணும். சொல்லிக்கொண்டே தோள் பட்டையின் மேல் கையை வைத்தான். அவனுடைய கையை விலக்கக் கூடத் தோன்றாமல் ஹரிதா அப்படியே நின்றிருந்தாள்.

"இன்னும் முப்பது செகண்ட்ஸ்தான் இருக்கு." உத்தம்சிங் வாட்ச்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

ஹரிதா கண்களில் நீரோடு நிமிர்ந்தாள்.

"இந்த உடம்பை உங்களுக்கு கொடுத்தா என்னோட அம்மாவை உயிரோட விட்டுடுவீங்களா...?"

"கண்டிப்பா."

"பேச்சு மாற மாட்டீங்களே?"

"எங்க கோபமெல்லாம் உன்னோட அப்பா மேலத்தான்."

"சரி வாங்க" சொல்லிக் கொண்டே ஹரிதா பக்கத்து அறையை நோக்கிப் போக கட்டிப் போடப்பட்டிருந்த கமிஷனரும், சுஷ்மாவும் வாய்களில் ஒட்டப்பட்ட பிளாஸ்திரிகளோடு திமிறினார்கள். தலைகளை ஆட்டிக் கண்களில்

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

அதிர்ச்சியான மறுப்பைக் காட்டினார்கள்.

ஹரிதா அவர்களை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு விடுவிடுவென்று பக்கத்து அறைக்குள் நுழைந்தாள்.

உத்தம்சிங் கமிஷனரைப் பார்த்து கண் சிமிட்டினான். "உங்க பொண்ணை பார்த்தீங்களா கமிஷனர் ஸார்? என்னா ஒரு தியாக மனப்பான்மை? அம்மாவோட உயிரைக் காப்பாத்தறதுக்காக எங்க மூணு பேருக்கும் அவ உடம்பையே தாரை வார்க்க முன் வந்திருக்கா... நாங்க ஒவ்வொருத்தரா... உள்ளே போய்... மொதல்ல அந்த நிகழ்ச்சியை முடிச்சிக்கிறோம். அப்புறமா உன்னை வழியனுப்பி வெக்கிறோம்...! குரு கோவிந்த்!"

"என்ன உத்தம்?"

"மொதல்ல நீ போய்ட்டு வா...அப்புறம் சர்தார்... கடைசியா...நான்"

குரு கோவிந்த் இளித்துக் கொண்டே ஹரிதாவைப் பின் தொடர்ந்து அறைக்குள் நுழைந்தான்.

குரு கோவிந்த் யூனிபார்மை கழற்றி, ஹேங்கரில் மாட்டிவிட்டு, கட்டிலில் உட்கார்ந்திருந்த ஹரிதாவிடம் வந்தான். அவள் தலை குனிந்திருந்தாள். "நாங்களே எதிர்பார்க்காத விருந்து இது. உடம்பை அம்சமா வெச்சிருக்கே. மும்பையிலே இருக்கிற எந்த சினிமா டைரக்டராவது பார்த்தா உன்னைக் கொத்திக்கிட்டு போயிடுவான்."

ஹரிதா தன் பெரிய கண்களினால் அவனை முறைக்க அவன் சிரித்தான். "நீ இப்படி முறைச்சு பார்த்தாலே என் உடம்புல ஒரு கிக் ஏறுது. நேரத்தை வீணாக்காமே இந்திரலோகம் போலாமா?"

"ஒரு நிமிஷம் அப்பபடியே இருங்க...." ஹரிதா குருகோவிந்தின் கழுத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"ஏன்...என்னாங்க...?"

"உங்க கழுத்துல, என்ன?"

"ஒண்ணுமில்லையே?"- அவன் கழுத்தை தடவிப்பார்த்தான். ஹரிதா எழுந்து நின்றாள். "என்னமோ பூச்சி மாதிரி தெரியுது....இருங்க எடுத்துடறேன்" என்றவள் அவனுடைய தலையை சாய்த்துப் பிடித்துக் கொண்டு - தன் வலது கையை அவனுக்குப் பின்புறமாக மேலே கொண்டு போய் '45 டிகிரி கோணத்தில் சாய்த்துப் பிடித்து- அவன் லேசாய் திமிறத் திமிற...

இரண்டு விநாடி அவகாசத்தில் - கழுத்தின் அதி முக்கியமான நரம்பை பார்வையாலேயே படித்து- ஒரு கத்தி வீச்சு மாதிரி கையை- குரு கோவிந்தின் கழுத்தை நோக்கி 'சக்' கென்று இறக்கினாள். கண்கள் சட்டென்று ஸ்தம்பித்துப் போக- குரு கோவிந்தின் உடம்பு ஒரு முறை வெட்டிக் கொண்டது. பக்கவாட்டில் எதிர்ப்பில்லாமல் சாய்ந்தான். ஒரு சின்ன அலறல் சத்தம் கூட இல்லை.

ஹரிதா அவனைப் படுக்கையில் புரட்டிப் போட்டு விட்டு, மெதுவாய் பூனை நடை நடந்து போய் ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்த யூனிபார்முக்குள் கையை நுழைத்து பிஸ்டலை பொறுக்கிக் கொண்டாள்.

பிஸ்டலை தயார் நிலையில் வைத்துக் கொண்டு- அறையின் ஜன்னல் அருகே வந்து நின்றாள். மூச்சு விடுவதை சீராக்கிக் கொண்டு- ஜன்னல் கதவின் கொக்கியை விடுவித்து- மெல்ல எட்டிப் பார்த்தாள் வெளியே.

உத்தம்சிங்கும்- சர்தாரும் வலது கைகளில் ஏந்திய பிஸ்டல்களோடும் இடது கைகளில் ஏந்திய சிகரெட்களோடும் தெரிந்தார்கள். தலைகளுக்கு மேலே சிகரெட் புகை அலைந்தது.

"என்ன உத்தம், அந்த ஹரிதா கிட்டே பேசினதெல்லாம் நிஜந்தானா? அவ உடம்பைத் தொட்டதுக்காக அம்மாக்காரியை உயிரோட விட்டுட்டுப் போறோமா..?"

உத்தம் சிகரெட் புகை வழியும் வாயோடு சிரித்தான். "முட்டாள்! நாம என்னிக்காவது அரை குறையா வேலைகளை முடிச்சுகிட்டுப் போயிருக்கோமா...? வீட்ல ஒரு நாய்க்குட்டி இருந்தாக்கூட நாளைக்கு அது பெரிசாகி சினிமால வர்ற நாய் மாதிரி நம்மளை பழிவாங்கிடும்னு நினைச்சு.... அதையும் கொன்னுட்டுப் போயிடுவோம். இவங்களை மாத்திரம் விட்டு வெக்கவா போறோம். ஹரிதாவை நான் தொட்டுட்டு வந்த பின்னாடி- மிஸ்டர் கமிஷனர், மிஸஸ் கமிஷனர், மிஸ் கமிஷனர் மூணு பேருக்கும் சாவுக்கான பாஸ்போர்ட், விசா கொடுத்துடுவோம்..."

"உத்தம்... எனக்கொரு யோசனை...."

"சொல்லு..."

"ஹரிதா ரொம்பவும் அழகாயிருக்கா... கடத்திக்கிட்டு போய் நம்ம இடத்தில வெச்சுக்குவோம். அப்பப்ப உபயோகிச்சுக்குவோம்."

"வேண்டாம் சர்தார். சாப்பிட்ட உடனே கை கழுவிடறதுதான் பெட்டர். பார்சல் கொண்டுட்டு போனா - நம்ம ஆட்களுக்கு மத்தியில் பிரச்சனை வந்துடும்."

இரண்டு பேரும் தாழ்ந்த ஸ்தாயிகளில் பேசிக் கொண்டாலும், குரல் கொஞ்சம் கூட சிதையாமல்- ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னாடி நின்றிருந்த ஹரிதாவின் காதுகளில் வந்து விழுந்தது.

என்ன செய்யலாம்?

இங்கிருந்தே சுடலாமா?

ஹரிதாவின் உள்மனம் எச்சரித்தது. வேண்டாம், சுட்டு குறி தவறி விட்டால் அந்தப் பாவிகள் உன் அப்பாவையும் அம்மாவும் அந்த விநாடியே சுட்டுக் கொன்று விடுவார்கள்.

வேறு வழி?

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## மன அதிர்ச்சி- 03

"**வே**லை இல்லாத நேரத்தில் என்ன செய்கிறீர்கள்?" என்று ஐயாவை கேட்டேன்.

"இதுதானே எனக்கு மிக கஸ்டமாக உள்ளது. முகாமில் சும்மா இருக்கும் போதுதானே எனக்கு சில பிரச்சனைகள் ஏற்படுகிறது" என்று மனம் நொந்து கூறினார்.

"ஒய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கவோ அல்லது பொழுதுபோக்கவோ சாதனங்களைப் பயன்படுத்தவோ முயற்சி செய்தீர்களா?" என்று கேட்டேன்.

"இல்லை காய்கறித் தோட்டம் செய்ய விருப்பம். ஆனால் இம் முகாமில் தண்ணீர் வசதி, இடவசதிகளோ இல்லை. மட்டுப் படுத்தப்பட்ட மின்சாரமே வழங்கப்படுவதனால் தொலைக் காட்சிப்பெட்டி பாவிப்பதற்குத் தடையுள்ளது." என்று சலித்துக் கொண்டார்.



இறந்த கால துயரச் சம்பவங்களை மறந்து வாழவும்இ மன அதிர்ச்சியி லிருந்து விடுபடவும் வாழுகின்ற சூழலும் பொருத்தமாக அமைய வேண்டும்.

சிவபாதம் ஐயா வேலை செய்யும் இடத்தில் மிக அமைதியாகவும் பொறுப்புடனும் கடமையாற்றினார் என்பதும் அறியக் கூடியதாக இருந்தது. நெருக்கமான மக்கள் குடியிருப்பும், எந்த நேரமும் இரைச்சலான முகாம் சூழலும், மனப் பாதிப்புக்குள்ளான சிவபாதம் ஐயாவுக்கு மேலும் சிரமத்தைக் கொடுத்தது என்பதும் உண்மையே.

"ஐயா! நீங்கள் இரவு வேலை செய்யும் நாட்களில் பகலில் நன்றாகத் தூங்கலாமே?" என்று கேட்டேன்.

"பகலிலும் சரியாகத் தூக்கம் வருவதில்லை தம்பி," என்ற சிவபாதம் ஐயா, "டாக்டர் தந்த மாத்திரையைப் பகலில் போடும் போது சும்மா ஒரு மணி நேரம் மட்டும் தூங்குவேன்" என்றார்.

1983 யூலைக் கலவரத்தின் போது சிவபாதம் ஐயாவுக்கு ஏற்பட்ட பயங்கர மன அதிர்ச்சியிலிருந்து அவரை மீட்டெடுக்க அவரிடம் உள்ள சில வளங்களைப் பயன்படுத்த எண்ணினேன். "ஐயா! நீங்கள் முகாமில் இருக்கும் போதே பிரச்சினை ஏற்படுவதால் அந்த நேரத்தை உங்களுக்கு விருப்பமான பொழுதுபோக்கிலோ தொழிலிலோ கழிக்க விரும்புகிறீர்களா? அப்படி ஏதாவது செய்ய முயற்சி செய்துள்ளீர்களா?" என்று கேட்டேன்.

"எனக்கு வீட்டுத் தோட்டம் செய்வதில் மிக விருப்பம். ஆனால் இம் முகாமிலோ, அருகிலோ தோட்டம் செய்யக் கூடிய இடமில்லை. வேறு பொழுதுபோக்குகளில் தான் கழிக்க வேண்டும்." என்றார் சிவபாதம் ஐயா. "தொலைக்காட்சி, சினிமா, அல்லது பாடல்கள் கேட்பது போன்றவற்றில் ஆர்வம் உண்டா" என்று கேட்டேன்.

"பக்திப் பாடல்கள் மட்டும் கேட்பதில் ஆர்வம் உண்டு" என்ற சிவபாதம் ஐயா, "எமது முகாமில் எல்லா வீட்டிலும் பெரிய சத்தமாக எந்த நேரமும் பாட்டுக்கள் போட்டபடியே இருக்கும். எந்தப் பாட்டையும் சரியாகக் கேட்க முடியாது. பாட்டுப் போடுவதிலும் எமது முகாமில் போட்டிதான்" என்று சொல்லிச் சிரித்தார். சிவபாதம் ஐயா சிரித்துக்கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியளித்தது. "சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று ஐயாவை ஊக்கப்படுத்தினேன்.

"எங்க முகாமில் தொலைக்காட்சி நாடகங்கள் போடும் நேரமெல்லாம் பூசை நேரம் போலாகிவிட்டது. நமது பொம்பிளைகள் வீட்டுவேலைகளைக் கவனிப்பதை விட தொலைக்காட்சி நாடகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். புருசனை, பிள்ளைகளைக் கவனிப்பதை விடவும், சட்டி, பானை கழுவுவதை விடவும், வீட்டைச் சுத்தம் செய்வதை விடவும், நேரந் தவறாமல் ஒரு நாளைக்குப் போடும் அத்தனை தொலைக்காட்சி நாடகங்களையும் பார்த்துவிடுவதில் திருப்தி அடைகிறார்கள்". என்ற சிவபாதம் ஐயா சிரிப்புடன் வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்து வெற்றிலை போட ஆரம்பித்தார்.

சிவபாதம் ஐயா முகாமில் வசிப்பதால் தான் கூடிய மன அமைதியின்மை ஏற்படுகிறது. இவரது மூன்று பிள்ளைகள் கனடாவில் வசிப்பதாலும் இவரிடம் தாராளமான பொருளாதார வசதி இருப்பதாலும்இ இவர் முகாமைவிட்டு வெளிப்பதிவ அகதியாக வாழ ஏற்பாடு செய்து கொடுத்தால் நீண்ட நாளாக இவருக்கு இருக்கும் பிரச்சினையில் இருந்து விடுபட முடியும் என்ற நம்பிக்கையில் அவருடைய விருப்பத்தை அறிய விரும்பினேன்.

இத்துடன் இந்த அமர்வை நிறுத்தி நாளைக்கு அவரின் மனைவியை அழைத்து வரும்படி கூறி சிவபாதம் ஐயாவை வழியனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள் சிவபாதம் ஐயாவும் மனைவியும் வந்திருந்தார்கள். அவர்களை வரவேற்று என் முன் அமரச் செய்தேன்.

இருவரிடமும் பேச்சை ஆரம்பித்தேன். "நீங்கள் வெளிப்பதிவு அகதியாக வசிப்பதற்கு விரும்புகிறீர்களா" என்று கேட்டேன். உடனே சிவபாதம் ஐயாவின் மனைவி "நான் நீண்ட நாளாக இவரிடமும் கூறினேன். எனது பிள்ளைகளும் இதைத்தான்

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

கடிதத்தில் எழுதி இருந்தார்கள். இவர் சம்மதித்தால் எனக்கு விருப்பம்" என்றார். சிவபாதம் ஐயாவும் சம்மதித்தார்.

"நீங்கள் வைத்தியம் செய்யும் டாக்டரிடம் தொடர்ந்து வைத்தியம் செய்யலாம். முகாமை விட்டு அயலில் அமைதியான சூழ்நிலையில் வாழ ஏற்பாடு செய்து தருகிறேன். வேலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் உங்களுக்கு விருப்பமான பக்திப் பாடல்களை நீங்கள் மட்டும் கேட்கக் கூடிய பாட்டுக் கேட்கும் கருவியைப் பயன்படுத்தலாம். இந்த நடைமுறைகளைத் தொடர்ந்தால் உங்கள் வாழ்வில் அமைதி ஏற்படும்" என ஆலோசனை கூறினேன்.

இருவரும் தமது விருப்பத்தைச் சிரிப்புடன் தெரிவித்தனர். அடுத்த நாளே சிவபாதம் ஐயா குடும்பத்தார் விரும்பியபடி சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தேன். தொடர்ந்து எனது கண்காணிப்பின் கீழ் சிறப்பாக வாழ்கின்றனர்.

தொடர்ந்து வரும்...

# தமிழ் தேசிய கூட்டமைப்பு சுயமிழந்த அரசியல்?

இந்தக் கூட்டமைப்பு இப்போது முற்று முழுதாகத் தனக்கென்று எந்தக் கருத்தும், கொள்கையுமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. புலிகள் என்ன கூறுகிறார்களோ அதுவே தமது கருத்து என்று கூறி வந்தார்கள்.

அதனை உறுதிப்படுத்தும் விதமாகப் புலிகளின் பேச்சாளர் பாலசிங்கம் போராடுவதோ, சமாதானமோ அவையெல்லாம் புலிகளின் பிரத்தியேக சிறப்புரிமை அது கூட்டமைப்பினருக்கு உரியதல்ல. இவர்கள் தமது உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் என்பதையும் தெட்டத் தெளிவாக 'சக்தி' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அவர்கள் மனம் கோணக் கூடாது என்பதற்காகத் தனது கட்சிக்காரரையும் கடிந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சம்பந்தர் தான் நீண்ட காலமாக யாழ்ப்பாணம் செல்லாததற்கு வருந்திக் கொண்டார். மாவை-சங்கரி இருவருக் கிடையேயான பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய தனது பொறுப்பையும் பெரியண்ணர் பாணியில் அவர் நினைவு கூர்ந்தார்.

இதேபோல்தான் சதாஹிப்பில் புலிகள்-அரசு பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது முஸ்லீம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று தனக்கும் அதில் ஏதோ பங்கு இருப்பது போல் அறிக்கை விட்டார். அமரர் அமிர்தலிங்கத்தின் நினைவுக் கட்டுரையில் இல்லை.

முறக்கொட்டாஞ்சேனை பாடசாலையை இராணுவம் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்த வேளையில் தேசியக் கொடியை ஏற்றியதனாலும் வேறு காரணங்களாலும் கூட்டமைப்பு பா.உ. ஒருவர் கொழும்பில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

அரசியல் ரீதியான எந்த நடவடிக்கைகளுக்கும் இடமில்லாததால் ஒத்தூதுவது அல்லது தத்தமது அலுவல்களைப் பார்ப்பது என்ற நிலைக்குக் கூட்டமைப்பினர் தள்ளப்பட்டுள்ளனர்.

சில கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை நீண்ட நாட்களாக அரசியல் அரங்கில் காண முடியவில்லை.

தற்போது சிறையில் உள்ள கைதிகளை

தமக்கென்று எந்தக் கொள்கையும் இல்லாதவர்கள், அரசியல் கட்சிகள் என்ற பெயரில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று கூறிக்கொண்டு செயற்படுவது இங்கு மாத்திரம்தான் நாம் காணக்கூடிய காட்சியாகும்.

மக்களின் அரசியல் கட்சி என்பது ஆளுமையும், தீர்க்கதரிசனமும், பொறுப்பும், அர்ப்பணமும் கொண்டதாக இருக்க வேண்டும். சரி பிழைகளைச் சுட்டிக் காட்டும் திராணி அதற்கு இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக முதுகெலும்பு வேண்டும்.

ஆனால் இங்கு பதவி, வாகனம், வெளிநாட்டுப் பயணம் என்ற உல்லாசமே முதன்மை பெறுகிறது.

உண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சிகளுக்குத் தேவையாக இருந்ததும் அதுதான்.

பெயர்தான் கூட்டமைப்பே தவிர இதனுள் பெரும் குத்து வெட்டுக்கள் நடைபெறுகின்றன.

கூட்டமைப்புக்குள் மாத்திரமல்ல அதிலுள்ள ஒவ்வொரு கட்சிக்குள்ளேயும் குடுமிப்பிடிச் சண்டைகள் நடைபெறுகின்றன.

முன்னொரு காலத்தில் சம்பந்தர் அவர்கள் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக இருந்தார்.

அண்டை நாட்டுத் தூதரகத்துடனும் சரி, ஜனாதிபதியுடனும் சரி அந்நியோன்னியமான உறவுகள் இருந்தன. பொது வைபவங்களில் ஜனாதிபதி சந்திரிகா திரும்பும் பக்கம் எல்லாம் இவர் நிற்பார்.

இப்போது இந்த உறவுகள் ஆபத்தானவை என்று கருதியோ என்னவோ ஆயுத வல்லமை படைத்த சக்திகளுக்கு முன் "எள் என்றால் எண்ணெயாக" இருக்கிறார்.

அவருடன் தனக்கு இறுதிக் காலத்தில் அபிப்பிராய பேதங்கள் இருந்தது என்று கட்டுரை எழுதவும் அவர் தவறவில்லை. யாராவது கோபித்து விடுவார்களோ என்பதில் அவர் எப்போதும் எச்சரிக்கையாக இருந்தார்.

இவையெல்லாம் தமக்கு சுயம் என்று ஒன்று இருக்கிறது என்று காட்டும் முயற்சிகளே.

துரதிஷ்டம் என்னவென்றால் 12 வருடங்களுக்குப் பின்னர் அமிர்தலிங்கம் அவர்களின் பிறந்ததின நினைவு கூரல் நடத்துவதில்தான் எத்தனை இழுபறிகள்.

கிழக்கு மாகாணத்து கூட்டணிப் பா.உ. ஒருவர் தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று மற்றவர்களை குற்றம்சாட்டி முணுமுணுத்துக் கொண்டார்.

லண்டனில் நடத்திய ஞாபகார்த்தக் கூட்டத்திற்கு இந்து ராமை அழைத்ததும் சில வட்டாரங்களில் சினத்தை ஏற்படுத்தியது.

இந்தக் கூட்டம் பற்றி லண்டனில் அநாமதேய துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுப் பொது மக்கள் தடுக்கப்பட்டார்கள்.

தற்போது சங்கரியும் - மாவையும் ஐரோப்பா தாண்டி வட அமெரிக்காவில் அமிர்தலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தக் கூட்டத்தை நடத்தியுள்ளார்கள்.

இவையெல்லாம் உள்ளேயும் வெளியேயும் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளன.

தனிப்பெரும் கட்சிக்காரர் இல்லாத சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் கூட்டமைப்பைக் பதிவு செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். கூட்டமைப்பைப் பதிவு செய்வது கூட்டணிக்கோ காங்கிரஸுக்கோ மாத்திரமல்ல புலிகளுக்கும் அது விருப்பம்

விடுதலை செய்வதற்கான கோரிக்கையை அவ்வப்போது விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் சிறைச்சாலைப் பக்கம் தலைகாட்டுவதில்லை.

இவர்கள் எதிர்பார்த்தது 'ஆறு கடக்கும் மட்டும் புலிகளின் உதவி. அதற்குப் பின் நீ யாரோ நான் யாரோ' என்ற சிந்தனைதான். ஆனால் இவர்கள் தற்போது அநியாயத்துக்கு மாட்டுப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் எப்போதும் தமது தனிப்பட்ட நலன்கள் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருந்தார்கள்.

உதாரணமாக ஜெயலலிதாவின் கொடும்பாவி வடக்கு கிழக்கில் எரிக்கப்பட்டபோது சங்கரி, செல்வம், மாவை போன்றவர்கள் அந்தப் பக்கம் போகவேயில்லை. காரணம் அவர்களின் குடும்பம், உறவுகள் தமிழ் நாட்டில் இருந்தன.

சுரேஷ் முன்னணியில் நின்றார். அவரது குடும்பம் கனடாவுக்கு அனுப்பப்பட்டு விட்டது. எனவே அவருக்குப் பிரச்சினை இருக்கவில்லை.

தற்போது நெடுமாறனைப் பார்வையிடுவதற்குத் தமிழ்நாடு சேலம் சென்ற ஜோசப் பரராஜசிங்கம் அனுமதி மறுக்கப்பட்டும் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பைக் கோரத் தவறவில்லை.

கனடாவில் நடைபெற்ற அமிர்தலிங்கம் ஞாபகார்த்தக் கூட்டத்திலும் இந்தியாவின் பங்களிப்பு வலியுறுத்தப்பட்டது. இங்கு தமிழ் மக்களின் நலனுக்காக அல்ல இந்திய உதவி. தமது தனிப்பட்ட நலன்கள் பாதிக்கப்படக் கூடாதல்லவா, அதற்காக-அதில் சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறார்கள்.

# புலிகள் ஒரு புறம்! ஈ.பி.டி.பி மறுபுறம்

## தீராத கோபம்! யாருக்கு இலாபம்...?

இன்றைய சமகால அரசியலில் புலிகள் ஒருபுறமும், ஈ.பீ.டி.பீ மறுபுறமுமாக நின்று மல்லுக்கட்டி நிற்கின்றனர். போதாக்குறைக்குப் புலிகள் சார்பு அணியாகத் தமிழ் கூட்டமைப்பினர் செயற் படுவது போல் தாம் மாற்றுக் கருத்துக் களைக் கொண்டிருப்பதாக இன்னொரு அணியும் உருவாகி வருவதாகத் தெரிகிறது. ஈ.பி.டி.பி, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். றொபேட் அணி, புளொட் ஆகிய இயக்கங்கங்கள், கூட்டறிக்கை விட்டு தம்மை மாற்றுக் கருத்துக் கொண்டவர்களாக அடையாளப்படுத்தி வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழ் கூட்டமைப்பில் உள்ளவர்கள் தம்மை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருக்கும் போது ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்கள் அதை மறுதலித்து வருவது ஏன் என்ற கேள்வியை எழுப்புவதாகத் தெரிகிறது.

ஏக பிரதிநிதிகள் என்ற விடயத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஆனந்த சங்கரி போன்றோர் அடிக்கடி மாறும் பட்சிகளாகக் கருத்துச் சொல்வதைக் குறிப்பிட்டுக் காட்டும் ஈ.பி.டி.பி. போன்ற கட்சியினர் தாம் நேர்மையோடு ஒரே முடிவாக புலிகள் இயக்கத்தினரை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி வருகின்றனர். எந்தவொரு அரசியல் களமும் பன்முகத் தன்மை கொண்டதாகவும், பல்வேறு கருத்துக்களின் விளைநிலமாகவும் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

நாம் சலுகைகளுக்காகக் கை கட்டி நிற்கும் சிறு கூட்டமல்ல. புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்! ஆயுதப்போராட்டத்தின் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள் புலிகள். இப்போது சமாதானப் பேச்சு மூலம் ஒரு நியாயமான அரசியல் தீர்விற்கு தாம் வரத் தயார் என்று கூறி வருகின்றனர்.

மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி! வடக்கு கிழக்கிற்கு விசேட அதிகாரங்கள்! அரசியல் தீர்வு முயற்சிகளோடு மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளையும் நாம் கவனித்தே செல்ல வேண்டும்! இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியாது. நாளாந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் சலுகைகள் அல்ல. அது மக்களின் தேவைகள்! என்ற கருத்தை ஈ.பி.டி.பியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

அரசுக்கு ஆதரவாக நின்று அமைச்சுப் பதவி எடுத்து மக்களின் போராட்ட உணர்வுகளை திசை திருப்பியவர்கள் என்பது புலிகளின் இன்னொரு கருத்து! ஏனைய சில தமிழ்க் கட்சிகள் போல் அரசின் பின் கதவைத் தட்டாமல், வெளிப்படையாகவே தாம் அரசோடு உறவுவைத் திருந்ததாகவும், தாம் ஒரு வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைச்சுப் பதவியை எடுத்துக் கொண்டதாகவும், அதன் மூலம் மக்களின் அன்றாடப் பிரச்சனை களைப் பாரிய அளவில் தீர்க்க முடிந்தது என்றும் ஈ.பி.டி.பி தன் தரப்பு நியாயங்களை தெரிவித்து வருகிறது.

இது போன்ற தன்மைகளால் இரு தரப்பும் முரண்பட்டு நிற்கின்றன. ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா புலிகளோடு உடன்பாட்டிற்கு வருவதற்குச் சில நிபந்தனைகளை முன்வைத்து வருகிறார். மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சுதந்திரம் இருக்க வேண்டும்! சகோதர இயக்கங்கள் மீதான படுகொலைகள், தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்! அதற்கான சமிக்ஞைகளைப் புலிகள் நடவடிக்கையில் காட்ட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து வருகிறார்.

தமது நெடுந்தீவு அலுவலகம் புலிகளால் தாக்கப்பட்டதாகவும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் புதிய பணிமனை புலிகளால் சேதமாக்கப்பட்டதாகவும் ஈ.பி.டி.பி. யினர் தெரிவித்துள்ளனர். இது மாற்றுக் கருத்துக்களுக்குப் புலிகள் விட்டிருக்கும் சவால் என்றும் கூறி வருவதாகத் தெரிகிறது.

இன்றைய சூழலில் தம்மோடு ஒத்து வராமை என்பது சாதானத்திற்கு எதிரான நடவடிக்கை என்பது புலிகளின் குற்றச்சாட்டு. மாற்றுக் கருத்தினைக் கொண்டிருப்பது சமாதானத்திற்கு விரோதமான செயல் அல்ல. சமாதானத்தை விரும்பியே தாம் ஆயுதங்களை ஒப்படைத்திருக்கிறோம் என்பதும் ஈ.பி.டி.பி தரப்பு நியாயம். தவிர ஏற்கனவே புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டவர்களின் நிலை என்ன? அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படுகிறார்களா? அமிர்தலிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தவே அனுமதியற்ற நிலை தமக்கும் ஏற்பட வேண்டுமா? என்ற கேள்விகளை ஈ.பி.டி.பி. யினர் தொடுத்துள்ளனர்.

சமாதானம் என்பது தனியே புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மட்டும் ஏற்படும் ஒன்றல்ல. கட்சிகள், இயக்கங்களிடையேயும் புரிந்துணர்வும் சமாதானமும் ஏற்பட வேண்டியுள்ளது. இந்தியாவில் ஒரு சுதந்திரப் போராட்டம் நடந்தது. சுபாஸ் சந்திர போஸ் ஆயுதப் போராட்டத்தையும் மகாத்மா காந்தி அகிம்சைப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர். ஆயினும் ஒருவரையொருவர் பகைமை பாராட்டிக் கொண்டது கிடையாது. உதாரணத்துக்குத் தென்னாபிரிக்காவையும், பாலஸ் தீனத்தையும்கூட எடுத்து நோக்கலாம் என்கின்றனர் ஈ.பி.டி.பீ.யினர்.

புலிகள், ஈ.பி.டி.பீ. இருதரப்பு முரண்பாட்டின் தீர்வுக்கான திறவுகோல் யாரிடம் உள்ளது? இதுவே மக்களின் ஆதங்கம்!

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 20

தொகுப்பு:-என்.கே.எஸ்.திருச்செல்வம்



எஸ். பாலச்சந்தர்

**வீ**ணை பாலச்சந்தர் என்று அனைவராலும் பாராட்டுப் பெற்ற இவர் ஊமைப் படங்கள் தமிழில் பேசும் படங்களாக உருவெடுத்த இரண்டு வருடத்திலேயே 'சீதா கல்யாணம்' (1983) படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான போது இவருக்கு வயது ஐந்து.

சிறு வயதிலேயே கஞ்சிரா வாசிப்பதிலும், உச்சஸ்தாயில் இனிமையாக பாடுவதிலும் வல்லமை பெற்றிருந்த இவர் இளைஞரானதும் 1940 இல் வெளியான 'ஆராய்ச்சி மணி' படத்தில் நடித்தார். அதைத் தொடர்ந்து 'ரிஸ்ய சிருங்கர்', 'காமதேனு', 'நாரதர்' போன்ற படங்களிலும் நடித்தார். கதாநாயகனாக 1948 இல் வெளியான 'இது நிஜமா', 'கைதி' மற்றும் 1952 இல் 'ராணி' போன்ற படங்களிலும், வில்லனாக 'ராஜாம்பாள்'- (1951) படத்திலும் நடித்த இவர், தமிழ்த் திரைப்படங்களில் முதன் முதல் பாடல்கள் இல்லாமல் உருவான 2-1/2 மணி நேர சிவாஜி, பண்டரிபாய் நடித்த 'அந்தநாள்' படத்தை முதன் முதலாக இயக்கினார். அதன்பின் 'பெண்','மரகதம்' படங்களில் நடித்தார். 1958 இல் மீண்டும் ஒரு படத்தை இயக்கினார். 'அவன் அமரன்' என்ற இப் படத்தின் பின் நடிப்பு, இயக்கம் என்பவற்றோடு நின்றுவிடாமல் கதை, இசையமைப்பு, தயாரிப்பு போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டவராய் முன்னேறிய பாலச்சந்தர், இத்தனை பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு தயாரித்த படம் தான் 1962இல் வெளியான 'அவனா இவன்' என்ற திகில்படம். அதன் பின் 1964 இல் 'பொம்மை', 1970 இல் 'நடு இரவில்' போன்ற திகில் படங்களையும் தயாரித்தார். புதுமை செய்வதில் இவருக்கு நிகர் இவரே!

## சௌகார் ஜானகி

'புதிய பறவை' படத்தில் சிவாஜியின் முதல் மனைவியாகத் தோன்றி 'பார்த்த ஞாபகம் இல்லையோ' என்ற பாடலைப் பாடும் சௌகார் ஜானகியை யாரும் மறந்திருக்க முடியாது. 'ஹேராம்' படத்தில் கமலின் பாட்டியாக நடித்திருக்கிறார். 'அட்சயா' என்னும் தொலைக்காட்சித் தொடரிலும் நடித்த இவருக்கு இப்போது வயது 71.



"சௌகார்"-1949 தெலுங்குப்படத்தில் சௌகார்ஜானகி என்.டி.ராமராவ்

தனது 18 வது வயதில், (1949) வெளியான 'சௌகார்' என்னும் தெலுங்குப் படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமான சௌகார் ஜானகி தமிழ்த் திரையுலகில் நுழைந்தது ஜெமினியின் 'மூன்று பிள்ளைகள்' படத்தின் மூலம். ஆனால், இவருக்குப் புகழைத் தேடித் தந்த படம் 1952 இல் வெளியான 'வளையாபதி'.

புதுமை இயக்குனர் பாலச்சந்தரின் முதல் படமான 'நீர்க்குமிழி' முதல் அவரின் பல படங்களில் குணசித்திர நடிப்பை வெளிக்காட்டிய இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது 'இருகோடுகள்'. மேலும் பாலச்சந்தரின் இயக்கத்தில் எதிர் நீச்சல், பாமா விஜயம், காவியத் தலைவி ஆகிய படங்கள் சௌகார் ஜானகியின் சிறந்த நடிப்பிற்கு உதாரணமாக அமைந்தன.

புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆருடன் 'பணம் படைத்தவன்', 'ஒளி விளக்கு' நடிகர் திலகத்துடன் பாலும் பழமும், பார் மகளே பார், புதிய பறவை போன்ற படங்களில் நடித்த இவரை அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக் கழகம் இவரது 35 ஆண்டு திரையுலக சேவையை யொட்டி 1985 இல் 'டாக்டர்' பட்டமளித்துக் கௌரவித்தது. 1969 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த நடிகை விருது 'இருகோடுகள்' படத்தில் சிறப்புற நடித்தமைக்காகக் கிடைத்தது. தமது முதல் படமான 'சௌகார்' படத்தில் என்.டி.ராமராவுடன் சௌகார் ஜனாகி தோன்றும் காட்சி இது. தற்போது சக்தி டி.வி.யில் ஒளிபரப்பாகும் 'கேளுங்க மாமியாரே' தொலைக்காட்சித் தொடரில் வயது போன அம்மாவாக பாத்தி ரத்தில் தன் திறமையான குணசித்திர நடிப்பை 71 வது வயதிலும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் சௌகார் ஜானகி.

# ஸ்போர்ட்ஸ்

## அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி

கொழும்பில் நடைபெற்ற அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 467 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 127 ஓட்டங்களையும் பெற்றது. முதல் இனிங்ஸில் 279 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் 316 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது. 274 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான், சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் 41 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ஷேர்ன் வோர்ன் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணியின் சார்பில் தௌஃபீக் உமர் 88 ஓட்டங்களையும் யூனிஸ்கான் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

## வீரர்கள் தப்பியோட்டம்

தென்கொரியாவின் பூசான் நகரில் இடம்பெறும் ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை குழுவைச் சேர்ந்த 3 வீரர்கள் போட்டி நடைபெறும் இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இலங்கை ஜிம்னாஸ்டிக் குழுவில் இருந்த ஒருவர் தப்பிச் சென்று 24 மணி நேரத்திற்குள் கபடி அணியில் இருந்த மேலும் இருவர் தப்பியோடியுள்ளனர். கபடி அணி வீரர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றவர் இராணுவத்தைச் சேர்ந்தவர். இவர்களைத் தேடிக் கைது செய்யும் பணியில் தென் கொரியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கொரியாவில் வேலைதேடியே இவ்வாறு வீரர்கள் தப்பியோடுகின்றனர்.

## சிந்தியா பதில்கள்

**★ கனடாவில் விசுவின் அரட்டை அரங்கத்தை நடத்தவிடாமல் விரட்டியடித்திருக்கிறார்களே நம்மவர்கள். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஏ.மைக்கல், கொழும்பு-15.

*நாம் விரும்புவதையே எல்லோரும் பேச வேண்டும். நமக்குப் பிடிக்காதவற்றைப் பேச ஒருத்தரையுமே அனுமதிக்கக் கூடாது என்றவாறாக நாம் வளர்ந்து(?) வருகிறோம்.*

**★ நாற்பது வயதாகியும் ரம்யா கிருஷ்ணன் பார்ப்பதற்கு 'சிக்' கென்று நம்மை என்னமோ பண்ணுகிறாரே... அதன் இரகசியம் என்ன சிந்தியா?**

ஆர். முனிவண்ணன், கம்பளை.

*'சிக்'குக்குக் காரணம் அவரது தொடர்ந்த நடனப் பயிற்சி. 'கிக்'குக்குக் காரணம் அவரது கண்கள்.*

**★ எல்லாப் பெண்களும் தங்களைப் பெரும் அழகிகள் என்று நினைத்துக் கொண்டு, ஆண்களெல்லோரும் தங்கள் பின்னால் வருவதாகப் பெருமிதத்தோடு எண்ணி நடப்பதைத் தாங்க முடியவில்லை. இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

ஜெ. முகுந்தகுமார், நெளுக்குளம்.

*இதென்ன, ஓணானைப் பிடித்து மடிக்குள் கட்டி வைத்துக் கொண்டு குழறிய கதையாக இருக்கிறது!*

*பெண்கள் பகிரங்கமாகத் தங்கள் ரசிப்பை வெளிப்படுத்துவதும், நாணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு நடப்பதும், விரும்பியதைச் சொல்வதும் அடங்காப்பிடாரிச் செயல்கள் என்று வகுத்து அவர்களை அடக்கி வைத்து விட்டு, நீங்களாகவே அவஸ்தைப்பட்டுக் கொண்டு... நீங்களே அதைக் கண்டனமாகவும் சொல்லிக்கொண்டு...என்ன நாடகம் இது முகுந்தா!*

**★ 'லிவ் அன்ட் மோர்' ஆல்பத்தில் துண்டுக் கச்சையுடன் பிரிட்னியைப் பார்க்கும் பாக்கியம் . உங்களுக்குக் கிடைத்ததா? உங்கள் ஜொள்ளரசி சிம்ரன் ஞாபகம் வரவில்லையா?**

வசீகரன், கொழும்பு- 11.

*வழ்ந்தது வழ்சீகள்ரா வழ்ந்தது...*

*புதிதாய் வந்த படங்களில் வெளிநாடுகளில் போய் எடுத்த பாடல் காட்சிகளில் எல்லாம் இந்தப் பெண் அந்தப் பெப்சிப் பாடகியை ஞாபகப் படுத்தித்தான் ஆட்டம் போடுது. ஜீன்ஸை வேறு தொப்புளுக்கு ஒரு சாண் கீழே ஆபத்தான விளிம்பில் இழுத்து விட்டுக் கொண்டு மனம் நடுங்க வைக்குது. வயதும், நடிப்பில் முதிர்ச்சியும் கூடிய பிறகாவது பலவீன இதயங்கள் பற்றி ஒரு பொறுப் புணர்ச்சி வேண்டாமோ? சீ.... மோசழ்ம்ழ்ழ்.... ழ்ஹிஹி....*

**★ அறுபது வாக்குகள் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நம் சில தலைவர்கள், ஆறுகோடி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை அநாகரிகமாக வாய்க்கு வந்தபடியெல்லாம் எடுத்தெறிந்து பேசுகிறார்களே.... இது எதில் போய் முடியும்?**

ஆ.அசனார், திருகோணமலை.

*சாறத்தை மடித்துக் கட்டிக் கொண்டு சத்தம் போட்டால் எல்லோரும் பயந்து போய் விடுகிறார்கள் என்ற புளகாங்கிதத்தில் இருக்கிறோம்.... நூறு கோடி மக்களின் தலைவராக இருந்தாலும் எங்களுக்கு அது சிறு துன்பியல் நிகழ்வுதான்.*

**★ பாகிஸ்தானில் வெடித்த அணுகுண்டு?**

தமிழன், சென்னை-34.

*பாவம் பாகிஸ்தான்! அமெரிக்காவும், சீனாவும் அதைச் சும்மா இருக்க விடப்போவதில்லை.*

**★ காதில பூ கந்தசாமியண்ணர் எல்லோர் காதிலயும் பூ வைக்கிறதுக்கு 'பாபா' வரத்தைப் பயன்படுத்தப் போவதாகச் சொல்கிறார். நீங்களென்றால் என்ன செய்வீர்கள்?**

இலங்கைப் பிரஜை, யாழ்ப்பாணம்.

*ஒரு யோசனையுமில்லாமல் உடனடியாக இதைத்தான் கேட்பேன். ரி.வி. தொடர் நாடகங்களில் ஒருத்தரும் அழக்கூடாது என்று கட்டளையிட வேண்டும். தாங்க முடியவில்லை சாமீ!*

**★ சிந்தியா, மர்ம அடி என்றால் என்ன?**

எஸ். விஜயன், குவைத்.

*மர்ம அடி, மரண அடி எல்லாவற்றையும் சொல்லினாலேயே அடிக்க முடியும். உதாரணம் ஒன்று தருகிறேன். இங்கிலாந்தில் பாராளுமன்றக் கட்சி ஒன்றின் கூட்டம் நடந்தது.*

*அங்கு உரையாற்றிய உறுப்பினர் ஒருவர், மற்றொரு உறுப்பினரை 'முட்டாள்' என்று கண்டித்துப் பேசினார். கூட்ட முடிவில் பலரும் பொதுக் கூட்டத்தில் வைத்து அவ்வாறு பேசுவது தவறு என்று அபிப்பிராயப்பட்டார்கள்.*

*அடுத்த கூட்டத்தில் அந்த உறுப்பினர் இவ்வாறு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். "திருவாளர் எக்ஸ் ஒரு முட்டாள் என்று நம் கட்சிக் கூட்டத்தில் வெளிப்படையாகச் சொன்னது பலருக்குப் பிடிக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். என்னை மன்னியுங்கள். அது ஒரு இரகசியமான விஷயம் என்று எனக்குத் தெரியாது."*

**★ சிந்தியா, ஆவிகளுடன் பேசலாம் என்பது உண்மையா?**

எஸ்.ஆர்.பிரிட்டி, கொட்டகலை.

*1847- இல் ஆவிகளுடன் பேசுவது குறித்த அன்ட்ரூ ஜக்ஸன் டேவிஸின் பிரபலமான புத்தகம் வெளிவந்தது. அதற்கடுத்த ஆண்டில் நியூயோர்க்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மார்க்கிரெட், கேட்டி என்ற எட்டு வயதும் ஆறுவயதுமான இரு சிறுமிகள், தமது அறையில் விசித்திரமான ஒலிகள் எழுந்ததாகவும் அவற்றுடன் பேச முடிந்ததாகவும் தெரிவித்ததையடுத்துப் பரபரப்பு எழுந்தது. அந்த வீட்டில் முன்பு ஒரு கொலை நடந்ததாகவும், அந்த ஆவிதான் அவர்களுடன் கதைத்ததாகவும் செய்தி பரவியது. அதன் பிறகு அந்தச் சகோதரிகள் அமெரிக்கா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் அறைக் கூட்டங்களை நடத்தி, ஒரு இரவுக்கு 100 டொலர்கள் வரை (1848 ஆம் ஆண்டு மதிப்பில்) சம்பாதித்தனர். இதைத் தொடர்ந்து அமெரிக்கா முழுதும் பலர் ஆவிகளுடன் பேசும் நிகழ்ச்சிகளை நடத்தினர் என்று சிமியோன் எட்மண்ட்ஸ் தனது ஆய்வு நூலில் (1966) குறிப்பிடுகிறார்.*

*40 ஆண்டுகள் கழித்து 1888-இல் மார்க்கிரெட் ஒரு பத்திரிகைக் கட்டுரையில், தானும் தனது சகோதரியும் தமது கைவிரல்களையும் முழங்கால்களையும் பயன்படுத்தி இந்தச் சத்தங்களை எழுப்பியதாக ஒப்புக்கொண்டார். அப்போது மக்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. அதன் பின்னர் மார்க்கிரெட் மறு சுற்றுப் பயணம் செய்து, தன் விரல்களையும், முட்டிகளையும் பயன்படுத்தி, அந்த வித்தையைச் செய்து காட்டி விளக்கியும் பயனில்லை. ஆவிகளுடன் பேசலாம் என்ற நம்பிக்கை மேலும் மேலும் பலப்பட்டது மட்டுமல்லாமல், இன்று வரை நீடித்தே வருகிறது.*

*ஆவி,கடவுள், மறுபிறப்பு நம்பிக்கைகளையெல்லாம் ஆதார பூர்வ விஞ்ஞான முடிவுகளைக் காட்டினாலும் ஒழிக்க முடியாது என்றே தோன்றுகிறது. மனித மனதின் குழப்பங்களோடும் தேவைகளோடும் பிணைந்தவை அவை.*



# இலக்கியநயம் தருவது முழடில்யன்

## உப்பணை உடைக்கும் வெள்ளம் கற்பினை உடைக்குமா காமம்?

கால்களிலிருந்து தலை வரை தன்னையே ஒவ்வொரு அங்கமாக உற்றுப் பார்த்து வந்த வினயனின் கண்கள், தன் கண்களுடன் வந்து கலந்த பின் சிறு தடுமாற்றத்தோடு மீண்டும் கீழ்நோக்கி இறங்க ஆரம்பித்துவிட்டதையும், ஏதோ தீவிரமாக ஒவ்வொரு அவயவத்தையும் அளவெடுப்பது போல நிலைத்து நிலைத்து மீண்டதையும் பார்த்துக் கொண்டு நின்ற பாவனா பொறுக்க முடியாமல், "என்ன இது?" என்று சீறினாள்.

அவள் பேசியது காதில் விழாவிட்டாலும், சீற்றத்தில் அசைந்த அவள் உடலழகுகளால் சலனமுற்ற வினயன், பார்வையை அவளது கண்களை நோக்கி உயர்த்தினான்.

"என்ன இது பார்வை?" என்று சற்று உரக்கவே கேட்டாள் பாவனா.

அவன் ஒன்றும் புரியாதவன் போல, அவள் பேசிய போது இழைந்த அவளது இரத்தின இதழ்களையும் அவற்றிலிருந்த நீரோட்டத்தையுமே கவனித்துக் கொண்டிருந்தான். பிறகு சாவதானமாக, அவளிடமிருந்து எந்தச் சத்தமுமே கிளம்பாத பாவனையோடு தன் கண்களை அவளது கழுத்துக்குக் கீழே இறக்கி அங்கே நிலைக்க விட்டான். "நான் கேட்டது காதில் விழவில்லையா?" என்று ஏறத்தாழக் கத்தினாள் பாவனா.

"என்ன....என்ன கேட்டாய்?" என்று அவளைப் பார்த்து மலங்க விழித்தான் வினயன்.

"ம்...ஏதோ அவசரமாக என்னை வரச் சொல்லிவிட்டு, எதையோ எந்தப் பிராணியோ பார்த்துக் கொண்டிருப்பது போல முறைத்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?" என்று கோபத்தில் சொற்களைக் கொட்டினாள். அவளுக்கு மூச்சு வாங்கியது.

அவன் மறுபடியும், கண்கள் படைக்கப்பட்டதன் கொடுமையை உணரலானான்.

சீற்றத்தில் சொற்களை உதிர்த்த உதடுகள் துடித்ததால் அவற்றின் கவர்ச்சி ஆயிரம் மடங்கு அதிகமாகிவிட்டதை அவதானித்த வினயன், 'தணலில் காய்ச்சக் காய்ச்சத் தங்கத்தின் ஒளி அதிகமாகிறதே தவிர குறைவதில்லை. உணர்ச்சிகளின் உஷ்ணத்தினால் அதிகமாகச் சிவந்துவிட்ட இவள் வதனமும் அதிகமான பொலிவைத்தான் காட்டுகிறது' என்று தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டான். பிறகு அவள் கேள்வி நினைவுக்கு வந்தவனாக, "தவறுதான் மன்னித்துக் கொள். எண்ணங்கள் எங்கோ ஓடிவிட்டன...". என்றான்.

இதைக் கேட்ட அந்தக் கட்டழகி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். அவன் எண்ணங்கள் எங்கு ஓடியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட சங்கடத்தின் விளைவாகச் சற்றே நெளிந்தாள். 'தனிமையில் பெண்ணைக் கண்டு விட்டால் இந்த ஆண்களுக்கு எண்ணம் தறிகெட்டுப் பாய ஆரம்பித்து விடுகிறது' என்று தனக்குள்ளாகப் பொருமிக் கொண்டவளாக, "சூழ்நிலையைக் கவனித்து மனதை அடக்கிக் கொள்ளத் தெரியாதவர்கள் விவேகிகள் வரிசையில் சேரமாட்டார்கள்" என்றாள். "உண்மைதான். அழகுக்கு முன்பு விவேகம் எதிர் நிற்கமாட்டாமல் எங்கோ ஓடி ஒளிந்து விடுகிறது" என்று பதில் சொன்ன வினயன், தன் பார்வை மேய்ச்சலைத் தொடர்ந்தான்.

எதிரே ஒருவனின் கண்கள் தனது கண்களையும் ஏனைய அவயவங்களையும் கௌவ்வி விழுங்கி உண்டதால் உள்ளத்தே எழுந்த உணர்ச்சிகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சற்றே அசைந்து தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முற்பட்ட பாவனா, தன் கண்களை அவன் கண்களிலிருந்து பலவந்தமாக விடுவித்துக் கொண்டு தன் உறுதியைக் காட்டும் முயற்சியில் கால்களை ஊன்றித் திடமாக நின்றாள்.

என்னதான் தன் கம்பீரத்தைக் காட்டுவதற்காக நேராக நிமிர்ந்து விறைத்து நிற்க முயன்றாலும் மேலிருந்த சுமையைத் தாங்க முடியாமல் இடை சரிந்தே இருந்ததையும், அதன் விளைவாய் மேலாடை நழுவ முற்பட்டதையும், அதைச் சரிசெய்ய முயன்று இழுத்த போது அந்த எழுச்சிகள் அசைந்ததையும் வினயன் பார்த்தான்.

அவன் பார்த்ததை அவளும் பார்த்தாள்.

சங்கடத்துடன் திரும்பி நின்றபடி "உண்ணவும் விழுங்கவும் கண்களே போதும் இவனுக்கு...." என்று வாய்விட்டே முணுமுணுத்தாள்.

"அப்படியென்றில்லை, வாய்க்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படாத போதுதான்..." என்று இழுத்தான் வினயன். அத்துடன் அவளை நோக்கி மெல்ல முன்னேறவும் முற்பட்டான். பாவனா சடாரென்று திரும்பி அவனை எரித்து விடுவது போலப் பார்த்தாள்.

சிரித்தபடியே அவளை நெருங்கிய வினயன், "பெண்கள் தங்களை மேலும் அழகுபடுத்திக் காட்டும் உத்திகளில் ஒன்றுதான் இந்தச் செல்லக் கோபமும்" என்றான்.

"பல பெண்களைத் தெரியும் போலிருக்கிறது" என்று அவனைப் பார்க்காமலேயே சொன்னாள் பாவனா.

அவள் முகம் சிவந்திருந்தது கோபத்தாலா, வெட்கத்தாலா என்று நெருக்கமாக நின்று ஆராய முற்பட்டான் வினயன். கூடவே அவளுக்குப் பதிலும் கூற ஆரம்பித்தான். " ஒரு பெண்ணை முழுவதுமாகப் பார்த்து முடிக்கவே ஆயுள் போதாது போலிருக்கிறது.... இதில்...."

அவனைத் தொடர விடாமல், "வாயை மூடுங்கள்" என்று வெடித்தாள் பாவனா.

அவன் மிக ஆவலோடு நெருங்கி, அவள் கன்னத்தை இரு கைகளாலும் பிடித்து அவள் உதடுகளை நோக்கிக் குனிந்தான்.

"சீ...விடுங்கள். உங்களுக்கு வெட்கமில்லை?" என்று திமிறினாள்.

"நீதானே வாயை மூடச் சொன்னாய்?" என்றான் அப்பாவித்தனமாக.

"மூடச் சொன்னது உங்கள் வாயை" என்றாள் அவள் சினத்துடன்.

உதடுகளைக் குவித்து முன்னால் நீட்டியபடி, "அப்போ நீதான் உதவ வேண்டும்" என்றான் மேலும் பரிதாபமாக.

அவள் கோபம் மறந்து சிரித்தாள். இப்போது வெட்கத்தில் அவள் முகம் மேலும் சிவந்திருந்தது.

சமயம் அறிந்து அவளை இழுத்துத் தன்மீது சாய்த்துக் கொண்டான் வினயன். "வெட்கப்படுவது கூட அழகுபடுத்தும் தந்திரங்களில் ஒன்றுதான்" என்றான் அவள் காதுக்குள்.

அவள் அவன் பிடிக்குள்ளேயே திமிறினாள்.

தலையைக் குனிந்து மேல் நெற்றியால் அவன் நெஞ்சைத் தள்ளியபடி நின்றாள்.

"விட்டு விடட்டுமா?" என்று அவன் கேட்டான்.

அவள் திமிறுவதை நிறுத்தி அவன் மார்போடு இழைந்தாள்.

வலது கையால் அவள் முகத்தை நிமிர்த்திய வினயன், அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான்.

பாவனாவின் கைகள் அவன் முதுகைச் சுற்றி வளைத்தன. அவனை நொருக்கி விடுவது போலத் தன் நெஞ்சுடன் சேர்த்தணைத்தாள்.

அவன் அவளது இடையைச் சுற்றி வளைத்து மெல்லத் தூக்கினான்.

அவள் தன் கைகளை அவன் தோளைச் சுற்றி மாலையாகப் போட்டுக் கொண்டாள். அவன் கன்னங்களை மாறி மாறி முத்தமிட ஆரம்பித்தாள்.

"உப்பினால் அணை கட்டினால் வெள்ளம் நிற்குமா?"

என்று கிசுகிசுப்புடன் பேசினான் வினயன்.

"என்ன?" என்றாள் அவன் கன்னத்தைத் தன் கன்னத்துடன் அழுத்தியவாறே.

"உப்பினால் அணை கட்டினால் அதற்குக் கட்டுப்பட்டு நில்லாது உடைத்துக் கொண்டு செல்லும் பெருமழை வெள்ளம் போலத்தான் ஆசை வெள்ளமும்.... நாணத்திற்குக் கட்டுப்படாது" என்றான்.

அவள் "ம்" என்று முனகினாள்.

அவளது நாணச் சிறையை உடைத்துப் பெருகும் காம வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அவனோடு போராடினாள். நாணமும் வெட்கமும் விட்டுத் தன்னை முழுமையாக வினயனிடம் தந்து நின்றாள் பாவனா.

"உப்புச் சிறை நில்லா
வெள்ளம் போல
நாணுவரை நில்லாக்
காமம் நண்ணி
நல்கினள்..."

(அகம்: 208: 19-21)

# மன்னாதி மன்னன் 125

## சிரசு அறுபட்ட தாயும் சேயும்

விக்கிரமாதித்த மாமன்னரின் அரியணையில் ஏறி அமர்ந்து ஆட்சி புரிய விரும்பிய போஜ மன்னர் அவ்வரியணையில் இருபத்தியிரண்டாவது படிக்கட்டில் காவலுக்கு நின்றிருந்த பங்கஜவல்லிப் பதுமை விடுத்த எச்சரிக்கையைக் கேட்டுத் தலைகுனிந்து நின்றார்.

அவர்மீது பரிதாபப்பட்ட பதுமை விக்கிரமாதித்த மன்னரின் பரோபகார சிந்தையை விளக்கும் கதை ஒன்றினைக் கூற முன் வந்தது.

விக்கிரமாதித்த மாமன்னரின் தலைநகரான உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் வர்த்தகம் பரிந்து வந்த தனபதி என்ற வர்த்தகர் ஒரு பெரும் பணக்காரராக வாழ்ந்து வந்தார். அவருடைய திரண்ட செல்வத்தை தான் உயிரோடு இருக்கும் வரை பல நற்காரியங்களுக்காகச் செலவிட வேண்டுமென்று விரும்பினார். பல ஆலயங்களையும் தர்ம சத்திரங்களையும் அன்னதான மடங்களையும் அமைத்து உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் பல அரிய தொண்டுகளைச் செய்தார்.

இதற்கிடையில் தனபதிச் செட்டியாருக்குத் தீர்த்த யாத்திரை சென்று வரவேண்டுமென்ற ஆசையும் பிறந்தது. விக்கிரமாதித்த மன்னரிடம் சென்று தான் காசி நகர் சென்று இறைவனை வணங்கி புனித கங்கை நதியில் தீர்த்தமாடி வர விரும்புவதாகக் கூறி விடை பெற்றார். அவர் காசி விஸ்வநாதர் உறையும் ஆலயத்தில் இறைவனை வழிபட்டுக் கங்கையில் நீராடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியிலுள்ள ஆலயங்கள் பலவற்றையும் தரிசித்துப் புண்ணிய நதிகளில் தீர்த்தமும் ஆடிவிட்டு உஜ்ஜயினியை நோக்கி நடந்தார். வழியில் இருந்த ஓர் ஆலயத்துள் சென்று வணங்கினார். பிரகாரத்தைச் சுற்றிவரும்போது பிரகாரத்தில் ஒரு பகுதியில் பெரியதொரு கொப்பரையில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருக்க அதன் அருகில் ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் தலைகள் வெட்டப்பட்டு உயிரற்ற சடலங்களாக கிடக்கக் காணப்பட்டது. குழந்தையின் அருகே ஒரு ஏட்டுச் சுருள் காணப்பட்டது.

தனபதிச் செட்டியார் அந்தச் சுருளை எடுத்துப் படித்துப் பார்த்தார். அதில் "முப்பத்திரண்டு இலட்சணங்களும் அமைந்த ஒருவர் இந்த எண்ணெய்க் கொப்பரைக்குள் குதித்து இரண்டு நாளிகை வரை நீச்சலிடித்து விட்டுத் திரும்புவாரானால் இந்தத் தாயும் சேயும் உயிருடன் எழுவார்கள்." என்று காணப்பட்டது.

இராஜகுமாரன்

செட்டியார் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் திரும்பியதும் நேராக அரண்மனை சென்று விக்கிரமாதித்த மன்னரைக் கண்டு கோயில் பிரசாதங்களை மன்னருக்கு அளித்துவிட்டுத் தனது பயணத்தின் போது கண்ட விசித்திரங்களைப் பற்றிக் கூறலானார். எண்ணெய்க் கொப்பரையில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருந்ததையும் அருகே தாயும் சேயுமாக இருவர் சிரசு வெட்டப்பட்ட நிலையில் கிடப்பதையும் அருகில் கிடந்த ஏட்டுச் சுருளில் எழுதப்பட்டிருந்த வாசகங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

இந்தக் கதையைக் கேட்ட விக்கிரமாதித்த மன்னர், தனபதிச் செட்டியார் வர்ணித்த கோயில் இருக்குமிடம் செல்ல முடிவெடுத்தார்.

அடுத்த நாட்காலையில் வேதாளத்தை அழைத்துக் கொண்டு தனபதிச் செட்டியார் குறிப்பிட்ட கோயிலைச் சென்றடைந்தார். தாயும் சேயும் உயிரற்ற சடலங்களாகப் பரிதாபமாகக் கிடந்ததைக் கண்டு மனம் பேதலித்தார். எண்ணெய்க் கொப்பரையில் கொதித்துக் கொண்டிருந்த எண்ணெய்க்குள் குதித்தார். சாதாரண நீரில் நீச்சலடிப்பது போல் இரண்டு நாழிகை நேரம் அதனுள் நீச்சலடித்து விட்டுக் கீழே குதித்தார்.

அப்போது சிரசு அறுபட்டுக் கிடந்த தாயும் சேயும் சாதாரணமாகப் படுத்து உறங்கிக் கிடந்தது போல் எழுந்திருந்தனர்.

இருவரும் விக்கிரமாதித்த மன்னரின் கால்களில் விழுந்து வணங்கி "எங்கள் உயிரைக் காப்பாற்றிய தாங்களே எமது கண் கண்ட தெய்வம்" என்று கூறினார்கள். மன்னர் அவர்களுக்கு ஏராளமான பொற்காசுகளை வழங்கி வழியனுப்பி வைத்தார்.

இருபத்திரண்டாவது படிக்கட்டில் இருந்த பங்கஜவல்லிப் பதுமை இக் கதையைக் கூறி முடித்ததும் போஜ மன்னர் தமது அரண்மனை திரும்பினார்.

இருபத்தி மூன்றாம் படிக்குக் காவலாக இருந்த அவரஞ்சிதவல்லிப் பதுமை அடுத்த நாட்காலையில் அரியணையில் ஏறுவதற்கு ஆசையுடன் வந்த போஜ மன்னரை வழிமறித்து விக்கிரமாதித்த மாமன்னரின் அதிதீரவீரபராக்கிரம செயல்களைக் கொண்ட கதையைக் கூற முற்பட்டது. (மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

எங்கட பிஸிக்ஸ் மாஸ்ரர் சொன்ன ஒரு தியறியொண்டு ஞாபகத்தில இருக்கு, அதுதான் அன்ரி மாஸ் தியறி.

அதாவது இப்ப இருக்கிற ஒவ்வொண்டுக்கும் நேரெதிரான மற்றொண்டு பிரபஞ்சத்தில எங்கயாவது ஒரு இடத்தில இருக்குமாம். அங்க யானை, பூனையப்போல, எறும்பு டைனோசரப்போல, சிங்கம் முயலைப்போல எல்லாம் தலைகீழா மாறியிருக்குமாம்.

இத ஏன் சொல்லுறனெண்டால் புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்குப் பதிலா எங்கட ஆனந்தசங்கரியர் தான் பேச்சுவார்த்தையை நடத்திவிட்டு தனியார் ரி.வி.க்குச் சூடான பேட்டி குடுத்துக்கொண்டிருப்பார். அவர் எப்படிப் பதில் சொல்லியிருப்பாரெண்டு பாருங்கோ, கீழ.

**கேள்வி: பேச்சுவார்த்தை எப்பிடிப் போச்சுது?**

*ஆ.சங்கரி: அது ஒரு இடமும் போகேல்லை. என்ர கைக்குள்ளதான் இருக்கு.*

**கே: என்னத்தைப் பற்றிப் பேசினனீங்கள்?**

*ஆ.ச: எல்லாச் சங்கக்கடை மனேச்சர்களையும், கூட்டணிதான் நியமிக்க வேணு மெண்டது முதல் ஈழத்தின்ரை தென் கோடிக்கு வேலியடைக்கிறது வரை பேசினம்.*

**கே: நீங்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதாகச் சொல்வது உண்மையா? அப்படியென்றால் என்ன?**

*ஆ.ச: நான் உமக்குத் தமிழில சொல்லுறன் கேளும். நாங்கள் எதுக்குப் போராடுறமெண்டது உமக்குத் தெரியும். சுயநிர்ணய உரிமையும் அதுக்குத்தான். இதுக்கு மேல அதப் பிரிவினையெண்டோ, இல்லை சுயாட்சியெண்டோ நீர் எப்படியும் கற்பனை செய்து சந்தோஷப்படும். நான் சொன்னதா மட்டும் எழுதாட்டால் சரி.*

**கே: முஸ்லிம்கள் போல ஏன் மற்றத் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாய் இல்லை?**

*ஆ.ச: யார் இங்க ஒற்றுமைப்பட வேணுமெண்டு நீர் சொல்லுறீர்? கூட்டணிக்குப் பின்னால எல்லாரும் சரணடராகி நிக்கிறாங்கள். இந்த ரி.என்.ஏ. எண்ட கட்சிகளெல்லாம் கூட்டணி சொல்லுறத பார்லிமென்ரில பேசிறதுக்கு மட்டுந்தான். மற்றப்படி போராடுவது கீறாடுறதெல்லாம் கூட்டணியின்ர விஷயம்.*

**கே: ஏன் இவை மீடியாக்களிலயாவது இனவாதிகளுக்குப் பதிலளிக்கலாம் தானே.**

*ஆ.ச: இப்ப நான் மீடியாவிலதானே பதில் தந்து கொண்டிருக்கிறன். அவையை ஏன் திரும்பத் திரும்ப இழுக்கிறீர். என்னப் பேட்டி கண்டாலாவது பிரயோசனம்.நீர் ஏன் அவைக்குப் பின்னால திரியிறீர்?*

**கே: அமிரண்ணை எந்தப் போர்க்களத்தில் வீரமரணமடைந்தவர்?**

*ஆ.ச: நீர் வரலாற மறந்திட்டு என்னட்டக் கேக்கிறீரோ? வரலாறெண்டது ஞாபகம் வைச்சிருக்கிற ஒண்டு, மறக்கிற ஒண்டில்லை. ஒபரேஷன் கொழும்பு தாக்குதலில் தற்கொலைப் போராளியா அமிரண்ணை வீரமரண மெய்தியதாலதான் அவருக்குத் தளபதிப் பட்டத்தை அதற்கு முன்னமே எங்கள் தலைவர் செல்வநாயகம் குடுத்திருந்தவர்.*

**கே: நீங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புகளை துரோகக் கும்பலென முன்னர் விமர்சித்து விட்டு இப்போது உங்களின் கீழியங்கும் ரீ.என்.ஏ.யில் சேர்ந்துள்ளீர்களே?**

*ஆ.ச: கூட்டணியை ஏக பிரதிநிதிகளா ஏற்று அவர்கள் நாலைஞ்சு கட்சிகள் சேர்ந்து கூட்டமைப்பு கட்டியுள்ளார்கள்.அவர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டாலும், கூட்டணி முன்னெடுக்கும் ஆயுதப் போராட்டத்திற்குக் கட்டுப்பட்டு இயங்குவதற்குச் சம்மதம் தெரிவிச்சதாலயே நாம் அவர்களைச் சேர்த்தம். கூட்டணி ஒரு தேசிய விடுதலை இயக்கம். அதில அரசியல் கட்சிகளுக்கு இடமில்லை. கூட்டணிக்குக் கட்டுப்பட்டு, அதன் அதிகார வரம்புக்குள்ள நிண்டு இயங்குவதற்குத்தான் அவையள அனுமதிச்சிருக்கிறம். ஆனாலும் அவைக்கான துரோகப் பட்டத்தைத் தற்காலிகமாத்தான் நீக்கியிருக்கிறம். தேவைப்பட்டால் உடன திரும்பவும் கழுத்தில மாட்டிவிடுவம்.*

**கே: நீங்கள் ஏன் புலிகள் இயக்கத்தை அவர்களின் மாவீரர் தினங்களக் கொண்டாடக் கூடாதெண்டு தடைவிதித்துள்ளீர்கள்?**

*ஆ.ச: இங்க கொண்டாடப் பயந்து லண்டனிலையும் கனடாவிலயும் போய் கொண்டாடியிருக்கிறதா அறியிறன். அதோட, எங்களுக்கு எதிரான இந்தியப் பத்திரிகைக்காரரையும் பேசவிட்டு வேடிக்கை காட்டியிருக்கினம். எதற்கும் அவை திரும்பி வந்ததும் விளக்கம் கேட்டுக் கொள்ளுறன்.*

**கே: திரும்பி வராமலே நிண்டிடுவினமோ தெரியேல்லை.**

*ஆ.ச: அப்ப, நீர் போய் கேட்டறிஞ்சு வந்து சொல்லும். ஆளை விடும், எனக்கு அவசர வேலையிருக்கு.*

**கே: ஒரு நிமிஷமண்ணை.... இனி எப்ப இங்காலப் பக்கம்...?**

(பதிலில்லை. போய்விட்டார்.)

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்தவாரம் உங்கள் பலன்

13.10.2002 தொடங்கி 19.10.2002வரை

### சோதிட மாமணி தில்லை

**கிரக நிலை**

கன்னி–சூரியன், புதன், துலாம்– வெள்ளி, விருட்சிகம்–கேது, இடபம்–இராகு, மிதுனம் – சனி, கர்க்கடகம்–வியாழன், சிங்கம்–செவ்வாய். சந்திரன், தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) செய் தொழில் நன்மை. உறவினரால் தொல்லை. பண விரயம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பாராத பிரச்சனைகள் சிலருக்கு ஏற்பட்டு மறையும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்..
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நிலையில் மறைமுக எதிர்ப்புண்டாகும். பெரியோர்கள் தக்க தருணத்தில் உதவுவர். உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுக் கரும மாற்றவும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழிலில் மந்தம். பணவரவு குன்றும். பெரியோர் பகை கொள்வர். உத்தியோகத்தர்கள் மனக் குழப்பமடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் மாற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டம். எதிர்பார்த்த காரியம் தடை. மனக்கவலை உண்டு. உத்தியோக நிலை யில் சிலருக்கு மாற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் முயற்சி பலிதம். உறவினரால் மனக்கவலை. வெளியிட வாசம். பண விரயம் உண்டு. உத்தியோக ரீதியாக வீண் பகை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. வியாபரிகள் விவசாயிகள், அற்ப, இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் நன்மை. மனமகிழ்ச்சி. பண வரவு உண்டு. உத்தியோஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விப் பிரச்சனைகள் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழிலில் முன்னேற்றம். பிரயாண மிகுதி. கௌரவம். வார இறுதியில் பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளினால் நன்மை. மாணவர்கள் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய இலாபம் பெறுவது கடினம்..
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) முயற்சிகளில் கவனம் தேவை. பண வரவு சுமாராக இருக்கும். பெரியோர்கள் உதவுவர். உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுக் கருமமாற்றுவது நல்லது. மாணவர்களுக்குக் கல்வித் தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் சிறப்பு. மனமகிழ்ச்சி. பெரியோர் உதவி. கௌரவம். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய ஊக்கம் எடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் கஷ்டம் குறையும். உறவினர் பகை கொள்வர். பண வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் சிறிது பிரச்சனைகள் தோன்றி மறையும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலையடைவர். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் நன்மையுண்டு. பெரியோர் உதவி கிடைக்கும். பண வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் ஒரு சிலர் மாற்றங்களைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் வீண் தடைகள் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் சிறிது இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 7.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) செய் தொழில் பிரச்சனை. பணக் கஷ்டம். அன்னியர் உதவி. உத்தியோகத்தர்களுக்கு மனக்குழப்பம். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அதிக கவனமெடுப்பது நல்லது.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.


ஸ்ரீ கல்யாணி ஜுவலர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

பலஸ்தீன மண்ணில் இஸ்ரேலிய இராணுவம் புரியும் கொடுமைகள் சாதாரண அளவைத் தாண்டி மிக அதிக தூரம் சென்றுவிட்டன. தினசரி குறைந்த பட்சம் 10 பேர் ஆவது கொல்லப்படுகிறார்கள்.

பலஸ்தீனர்களின் வீடுகள், பொருளாதார நிலையங்கள் கண்மூடித்தனமாக தரை மட்டமாக்கப்படுகின்றன. பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் பல நாட்கள் தொடர்ச்சியாக வீட்டுக் காவலில் வைக்கப்படுகிறார். அவர் பார்த்திருக்கவே அவரது நிர்வாக தலைமையகம் இஸ்ரேலிய இராணுவத்தினால் குண்டு வீசித் தகர்க்கப்படுகிறது. நாட்டின் அதிபருக்கே இந்த நிலை என்றால் அங்கு பொதுமக்களின் நிலைமை குறித்து அதிகம் விளக்க வேண்டியதில்லை.

ஈராக்கிடம் அபாயகரமான ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அந்த நாட்டை அழித்தேனும் சதாம் ஹுசைனைப் பதவியிறக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கும் அமெரிக்காவும் சரி, அதற்குத் தமது விமானத் தளங்களைக் கொடுத்து ஆதரவளிக்கக் காத்திருக்கும் சில அரபு நாடுகளும் சரி இஸ்ரேலின் அட்டகாசங்களைக் கண்டித்து இதுவரையில் உருப்படியாக எதுவும் செய்ததில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரும் தீர்மானங்களை இஸ்ரேல் மிக அலட்சியமாகத் தட்டிக் கழித்துப் பலஸ்தீன மண்ணில் ஊடுருவிச் சிறுவர், பெரியவர் என்ற வித்தியாசம் இல்லாமல், சவிரக்கம் அற்ற முறையில் அம் மக்களைக் கொன்று குவிக்கிறது. மேற்குக்கரை நகரம் ஒன்றில் இஸ்ரேலிய இராணுவத்தின் குண்டுவீச்சினால் உயிரிழந்த பலஸ்தீன இரண்டு வயது குழந்தைக்கு, அந்தக் குழந்தையின் சகோதரி கண்ணீருடன் விடையளிக்கிறார். இவ்வாறு குழந்தைகள் ஒவ்வொரு நாளும் கொல்லப் படுகின்றன. கேட்பதற்கு யார் இருக்கிறார்? ■


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை
எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி யோ.அபிஷா 24.09.2002**

ஜேர்மனியிலுள்ள முன்சனை வசிப்பிடமாகக் கொண்ட யோகராசா- லதாஜினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி அபிஷா தனது முதலாவது பிறந்த நாளை "KINDER TAGESS TATTE" மண்டபத்தில் 05.10.2002 இல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அபிஷாக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், அக்கா அனைவரும் உக்குளாங்குளம் சித்தி விநாயகர் அருளால் சகல கலைகளும் கற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்- பொன்னம்பலம் -நித்திராசா(சித்தப்பா)
இல-1- பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா





→ இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான அரவிந்த டி சில்வா தான் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருக்கிறார். கடந்த வாரம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அரவிந்த எழுதிய கடிதத்தில் தான் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாகவும், அடுத்த மாதம் நடக்கவிருக்கும் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். எவ்வாறெனினும் அரவிந்த ஒருநாள் போட்டிகளிலிருந்தும் விலகிக் கொள்வாரா என்பது குறித்துச் சரியாகத் தெரியவில்லை.

இந்தக் கடிதத்தை அனுப்பிவிட்டு அரவிந்த டி சில்வா லண்டன் பறந்துவிட்டார். அதனால் இது குறித்த மேலதிக விபரங்கள் எதுவும் தெரியாது.

போதிய திறமை காட்டாமை மற்றும் சில அரசியல் காரணங்களால் அரவிந்த இலங்கை அணியிலிருந்து சில காலம் விலக்கப்பட்டிருந்த போதும் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் அரவிந்த டி சில்வா மிகச் சிறந்த வீரர்.

1984 ம் ஆண்டு இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் லோட்ஸ் மைதானத்தில் களமிறங்கிய அரவிந்த தனது 18 வருடகால டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் 93 போட்டிகளில் 20 செஞ்சரிகள் அடங்கலாக 6361 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். 42.97 சராசரி ஓட்ட எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் இவர் நியூசிலாந்துக்கு எதிராக 1991 ம் ஆண்டு பெற்ற 267 ஓட்டங்களே அவரது மிகச் சிறந்த டெஸ்ட் இன்னிங்ஸ் ஆகும்.

1996, 97 காலப்பகுதியே அரவிந்தவின் டெஸ்ட் வாழ்வில் வசந்த காலம் எனலாம். இக் காலப்பகுதியில் அவர் அதிக அளவிலான ஓட்டங்களைக் குவித்தார்.

1994 ம் ஆண்டு இந்தியாவுடனான டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாக அரவிந்த மீது குற்றஞ்சாட்டப்பட்ட போதும் 2001 ம் ஆண்டு நடத்தப்பட்ட விசாரணைகளின் போது இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார். இங்கே அரவிந்த டி சில்வாவும் இலங்கை அணியின் தலைவர் சனத் ஜெயசூரியவும் காணப்படுகின்றனர். அரவிந்த ஜெயசூரியவைவிட சீனியராக இருந்த போதிலும் நெருங்கிய நண்பர்களாகவே கிரிக்கெட் போட்டிகளின் போது முழு அளவிலான ஒத்துழைப்புடன் ஆடினர்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி ரா.சௌமிகா 15.10.2002**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி நாவற் குடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி ராஜ்குமார் சகனியா தம்பதிகளின் செல்வப் புதல்வி 'சௌமிகா' தனது முதலாவது பிறந்த நாளை 19.10.2002 அன்று Zurich, Switzerland இல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். சௌமிக் குட்டியை அன்பு அப்பா- அம்மா, அப்பப்பா அப்பம்மா Canada, அம்மப்பா- அம்மம்மா இலங்கை, மோகன தாஸ் மாமா- புவா மாமி France, சிறி மாமா-ஜெயா மாமி Italy, ராம் பெரியப்பா- பெரியம்மா Canada, சிவா சித்தப்பா சித்தி Germany, ஆனந்தன் மாமா-வனிதா மாமி Canada, ரமணன் மாமா சஜுதி, ஆஷா சித்தி இலங்கை, மற்றும் சாரங்கன், சரண்யா, ஜனகன், தீபன், தீபானி, சிவானுஜன், வானுஜா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மாலொங்கப் பிள்ளையார் அருளைப் பெற்றுப் பலகலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்- அப்பா (Switzerland)
T.P. 01-4014526 (0041), H.P. 079- 6875671, Fax - 01- 4014526 (0041)

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் றொ.நிறுஜன் 09.10.2002**

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த றொபேட்-செல்வராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிறுஜன் தனது முதலாவது பிறந்த நாளை 09.10.2002 புதன்கிழமை கனடாவில் உள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா நிஷாந்தினி (கனடா), தொட்டப்பா நீவா, தொட்டம்மா ஜெனிற்றா குடும்பத்தினர் (அமெரிக்கா), அம்மம்மா இரத்தினம், அப்பப்பா லூர்த்தையா யாழ், பெரியம்மா - யோகேஸ்வரி கிருசாந்தர் குடும்பம் கொழும்பு, யாழ்ப்பாணத்திலுள்ள மாமாமார் குடும்பங்களான பற்குணம்- பொன்ராணி, சின்னராசா- லிங்கேஸ்வரி, கனேஸ்- வேலி, விஜயகுமார்- உதயா (இந்தியா), ரவீந்திரன்- றஞ்சினி மற்றும் சித்தப்பா உதயன் (இத்தாலி), அண்ணா சேகர்- சாலினி, அக்கா றஜனி- யோன்சன் (இத்தாலி), மினா அண்ணா (கனடா), கெங்கபாலன் குடும்பம், ராகுல் தம்பி மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் கொண்டு பலகலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்- அப்பா றொபேட் (கனடா)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 6A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரளைகழுவையில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக். 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.